அனைத்து வணிகவியல் ஆசிரிய பெருமக்களுக்கும் வணக்கம்

நமது வணிகவியல் ஆசிரிய பெருமக்களுக்காக நம் மாநிலத்தில் உள்ள பல்வேறு மாவட்ட வணிகவியல் ஆசிரியர்களின் கூட்டு முயற்சியால் **எந்தவித இலாப நோக்கமில்லாமல் 12 ஆம் வகுப்பு வணிகவியல் (தமிழ் வழி) Notes of Lesson தயாரிக்கப்பட்டுள்ளது**

அரசு நம்மிடம் எதிர்பார்க்கும் அனைத்து தலைப்புகளையும் உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ளது

இந்த முயற்சிக்கு ஒத்துழைப்பு நல்கிய அனைத்து வணிகவியல் ஆசிரியர்களுக்கும் நன்றி

மேலும் இதனை தயாரித்தவர்கள் அவர்களின் பள்ளி மற்றும் மாவட்ட சூழலுக்கு ஏற்றவாறு தயாரித்துள்ளனர். இதனை உங்கள் பள்ளிக்கு ஏற்றவாறு நீங்கள் மாற்றி எழுதிக்கொள்ளவும்

**இதனை தயாரித்தவர்கள் அவர்களின் விடுமுறை நாட்களில் நமக்காக தயாரித்துள்ளனர்.**

இதில் ஏதேனும் குறையோ அல்லது மாற்றமோ கூற நினைத்தால் சம்மந்தப்பட்ட ஆசிரியர்க்கோ அல்லது எனக்கோ நீங்கள் (**தயாரித்தவர் மனம் புண்படாதவகையில்**) தகவல் தெரிவிக்கலாம்

மீண்டும் ஒரு முறை இந்த முயற்சிக்கு ஒத்துழைப்பு நல்கிய அனைத்து வணிகவியல் ஆசிரியர்களும் நன்றி

இவண்

தொகுப்பாளர்

M. முத்துச்செல்வம்

MLWA HSS

மதுரை

9842104826

www.Padasalai.Net

Downloaded From www.nagaicollege.com

# 12 ஆம் வகுப்பு வணிகவியல் (TM)

Notes of Lesson தயாரித்துள்ள ஆசிரிய பெருமக்களின் பெயர் விவரம்

| பாடம் | ஆசிரியர் பெயர் | பணி புரியும் பள்ளி | மொபைல் எண் |
|---|---|---|---|
| L 1 | S. Subramanian | S.K.V.Hr.Sec.School Pappunayakkanpatti Madurai (Dist) | 6374181974 |
| L 2 | DR M. BALA SHUNMUGANANTHAM | SOURASHTRA (B) HSS MADURAI | 6380848 005 |
| L 3 | J S SAYEE LAKSHMI | GOVT GIRLS HSS SHOLAVANDAN, MADURAI. | 94867 30743 |
| L 4 | Mariappan . A | V.N.T. Govt. HSS. Shanmuganathapattinam, Sivagangai (Dt) | 97885 38283 |
| L 5 | P.KARTHIKEYAN, | S.U.M.HSS, ROYAPPANPATTY, THENI-DT. | 9943065966. |
| L 6 | S.M.RAJENDRAN , | GHSS , THANGAMMALPURAM. THENI DIST | :9042117151 |
| L 7 | S. Anbu | CSM MPL HSS Pillaiyarpalayam Kancheepuram (Dist) | 97868 51452 |
| L 8 | M GANAPATHI | PG ASST S V GHSS SAMATHUR Pollachi | 99426 03638 |
| L 9 | B.Balaji, | Govt Hr Sec School, Paranthur, Kanchipuram Dt. | 98425 58987 |
| L 10 | Nagarani | PG.ASST. GGHSS,PERAIYUR Boys | 94865 07757 |
| L 11 | Srividya | GHSS Kondayapatti Madurai (Dist) | 98437 78822 |
| L 12 | Pothumponnu | PG.ASST. GHSS, M.Subbulapuram | 90957 39136 |
| L 13 | Stephen A | GHSS THIRUVEGAMPET SIVAGANGAI | 9788541001 |
| L 14 | K.SUBHASHINI | GGHSS SHOLAVANDAN | 98946 00847 |
| L 15 | M GAYATHRI | GGHSS Tirumangalam | 99425 19029 |
| L 16 | K. Suresh. | Govt.Girls. Hr.Sec.School Alanganallur Madurai (Dist) | 94869 48376 |
| L 17 | Ramesh | Kasthuriboy Girls Hss Kamayagoundanpatti... Theni dist. | 96776 65330 |
| L 18 | பே. கார்த்திக் | K.G.S Matric HSS, திருப்பூர். | 76394 64966 |
| L 19 | Sr. L. Clara | Sirumalar Girls Hss NagamalaiPudukottai Madurai (Dist) | 88707 53830 |
| L 20 | R. Anandan, | The Madras Progressive Union Hss, Sowcarpet, Chennai | 91500 77069 |
| L 21 | S. Dhayanandhan | GHSS Ariyakudi Sivagangai Dist | 90957 07969 |
| L 22 | M.MUTHUKUMAR | GHSS, THIRUPPACHETHI- SIVAGANGAI DIST | 98940 65130 |
| L 23 | Anusuya | Melakottai Madurai (Dist) | 99429 52873 |
| L 24 | Anusuya | Melakottai Madurai (Dist) | 99429 52873 |
| L 25 | M.Thamarai Nangai, | Thiyagi Valliyammai Govt.HSS Thillaiyadi, MAYILADUTHURAI Dt. | 97888 13983 |
| L 26 | V. JANAKI | MPL girls higher secondary school Pettai Tirunelveli | 74023 58561 |
| L 27 | P.MANJULA | காமராசர் மாநகராட்சி மே.நி.பள்ளி பேட்டை திருநெல்வேலி | 89035 92497 |
| L 28 | G. LALITHA | GHSS- THANIAMANGALAM Melur Madurai (Dist) | 6385 833 664 |

Downloaded From www.nagaicollege.com

**வகுப்பு:12**
**பாடம்: வணிகவியல்**
**தலைப்பு:** அலகு 1 மேலாண்மை செயல்முறைகள்
**தேதி: ஜூன் முதல் வாரம்**

**Prepared by:** S.Subramanian
**S.K.V.Hr.Sec.School**
**Pappunayakkanpatti , Madurai (Dist).**
**Mobile 6374181974**

**கற்றல்நோக்கம்**:

மேலாண்மையின் அடிப்படைக் கருத்து

மேலாண்மையின் வரைவிலக்கணம்

மேலாண்மை கலையா அறிவியலா ?

மேலாண்மை vs நிர்வாகம்

மேலாண்மைச் செயல்முறைகள்

அறிவியல் பூர்வ மேலாண்மையின் கோட்பாடுகள்

மேலாண்மை வீச்செல்லை ஆகியவற்றைப் புரிந்து

கொள்ள முடியும்

கற்றல் விளைவுகள்

தலைமையாசிரியர் பள்ளியை எவ்வாறு மேலாண்மை செய்கிறார் என்பது பற்றி புரிந்து கொண்டனர் . மாவட்ட ஆட்சித்தலைவர் எவ்வாறு மாவட்ட நிர்வாகத்தை மேற்கொகிறார் என்பது பற்றி தெரிந்து கொண்டனர் . கொரானா காலத்தில் சுகாதாரத்துறை எவ்வாறு செயல்பட்டது என்பது பற்றி புரிந்து கொண்டனர். (திட்டமிடல், தரவரிசைகோட்பாடு) ஒவ்வொரு ஆசிரியருக்கும் ஒதுக்கப்படும் பாடங்கள் , பாடவேளைகள் (28) வாயிலாக வேலைப்பகிர்வு கருத்தைப் புரிந்து கொண்டனர் .

ஒரு மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சைக்கு முன்பாக மருத்துவர்கள் ,செவிலியர்கள் ,ஊழியர்கள், மேற்கொள்ளும் நடவடிக்கைகள் வாயிலாக திட்டமிடல் கருத்தைப் புரிந்து கொண்டனர் .

ஓர் அரசு ஒரு செயல்திட்டத்தை எவ்வாறு நிறைவேற்றுகிறது என்பது பற்றி புரிந்து கொண்டனர் .(தரவரிசைக் கோட்பாடு )

**கற்றல்கற்பித்தல் உபகரணங்கள்**: PPT, Videos, Educational Games, Magazines, QR Codes, Online Test

**முன்னறிவு**:: 11ம்வகுப்பு பாடத்திட்டத்தில் உள்ள தனியாள் வணிகம் கூட்டுப் பங்கு நிறுமம் போன்ற பாடங்களில் உள்ள கருத்துக்களை பாடத்தலைப்பபோடு நினைவு படுத்துதல் \

தனியாள் வணிகம் – தனிநபர் உரிமை-வரையறுக்கப்பட்ட மேலாண்மைத் திறன்-இந்துக் கூட்டுக் குடும்பம் –மேலாண்மை – கர்த்தா-பொதுக் கழகம்-இயல்புகள் –இயக்குனரவையால்நிர்வாகம்

பாட அறிமுகம்

ஜூன் மாதம் பள்ளி திறப்பதற்கு முன்பாக நடைபெற்ற ஆசிரியர் கூட்டம் மற்றும் மேற்கொண்ட நடவடிக்கைகள் (பள்ளியை தயார் நிலையில் வைப்பது ) எல்லாம் மேலாண்மை சார்ந்தது என்று சொல்லி அறிமுகம் செய்வது .பள்ளியில் நடைபெறும் விளையாட்டு விழாக்கள் ,ஆண்டு விழாக்கள் -மேற்கொள்ளும் நடவடிக்கைகள். பொதுத்தேர்விற்கு கல்வித்துறை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் .

பாடவளர்ச்சி

Downloaded From www.nagaicollege.com

மேலாண்மையின் அடிப்படை கருத்து ,வரைவிலக்கணம் ,கற்றல் கற்பித்தல் செயல்பாடு மேலாண்மை Vs நிர்வாகம் ஆசிரியர் செயல்பாடு டெய்லரின் மேலாண்மை கோட்பாடுகள் அறிவியல் கட்டை விரலின் விதி அல்ல இணக்கம், சச்சரவின்மை, மனப்புரட்சி , தனிமனித தத்துவமில்லை ,ஒத்துழைப்பு ஒவ்வொருவருக்கும் அவரது திறமைக்கும் செழிப்புக்கு மான வளர்ச்சி.

நவீன மேலாண்மையின் கோட்பாடுகள் வேலைப்பகிர்வு -- வேலையை சிறு சிறு பணிகளாகப் பிரிப்பது அதிகாரமும் & பொறுப்பும் அதிகாரமும் & பொறுப்பும் - ஒரு அலுவலரின் ஆணையிடும் உரிமை அதிகாரம் . பொறுப்பு என்பது நிறைவேற்றும் கடமை ஒழுங்குமுறை – அதிகாரத்தை மதித்தல் ,கீழ்படிதல் கட்டளையொருமை - ஒரே ஒரு மேலதிகாரியிடம் கட்டளைகளைப் பெறுதல் ஊதியம் – பணியாளர்களின் பணிக்கு கொடுக்கப்படும் விலை

மாணவர் செயல்பாடு

மாணவர்களை பாடப் புத்தகத்தை படிக்கச் சொல்லி புதிய வார்த்தைகளை அடிக்கோடு இடச் சொல்தல் . கலைச் சொற்களை படிக்கச் சொல்லுதல்

வலுவூட்டல்

புதிய மற்றும் கடினமான கருத்துக்களை Videos,Games,QR Code scan செய்து விளக்கிக் கூறுதல் . மேற்பார்வைவீச்செல்லை,கட்டளையொருமை,டேலரின் கோட்பாடுகள்.

மதிப்பீடு

எளிய சிந்தனை வினாக்கள் ( LOT):

மேலாண்மை என்பது ------ன் செயல் ஆகும் .

மேலாண்மை என்பது ஒரு ---------- ஆகும் .

நடுத்தர சிந்தனை வினாக்கள்(MOT)

மேலாண்மை என்றால் என்ன ?

உயர் சிந்தனை வினாக்கள்(HOT)

மேலாண்மை வீச்செல்லையைத் தீர்மானிப்பவை எவை ?

குறை தீர் கற்றல்

கருத்துக்களைப் புரிவதில் சிரமம் உள்ள மாணவர்களை அடையாளம் கண்டு பின் வரும் விளக்கம் தரப்படும் . தேர்வுக்கு தயார் செய்வது - திட்டமிடல் பொதுத்தேர்வு நடத்தப்படும் விதம் : அதிகாரம் &பொறுப்பு க் கோட்பாடு, மேற்பார்வை வீச்செல்லை.செயல்பாடு மேலாண்மை மற்றும் நிர்வாகம் --- மாணவர்களை இரு அணிகளாகப் பிரித்து உரையாடச் சொல்வது .

தொடர்பணி

செய்திதாள்களில் மேலாண்மை பற்றி வரும் கருத்துக்களை,செய்திகளை வாசித்துக் காட்டுதல் .

---

Downloaded From www.nagaicollege.com

வகுப்பு:12
பாடம்: வணிகவியல்
தலைப்பு:: 2 மேலாண்மை செயல்பாடுகள
தேதி: ஜுன் 2 வது வாரம்

Prepared by: Balashunmuganantham
Sourastra Boys HigherSecondary School,
Madurai (Dist).
Mobile 6380848 005

**கற்றல் நோக்கங்கள்**
மேலாண்மையின் பல்வேறு செயல்பாடுகளை மாணவர்கள் புரிந்து கொள்ள முடியும்.

**கற்றல் விளைவுகள்**
மேலாண்மை பணிகளை அதற்குரிய நபர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை புரிந்து கொண்டனர் தச்சு வேலை பார்ப்பவர்களிடம் தச்சு வேலை மட்டுமே கொடுக்க வேண்டும். தச்சுவேலை செய்பவரிடம் தையல் வேலையை செய்ய சொல்ல முடியாது என்பதை தெளிவாக புரிந்து கொண்டனர். என்ன, எப்படி, எங்கே யாரிடம் வேலையை ஒப்படைக்க வேண்டும் என்பதை தெரிந்து கொண்டனர். ஒரு பொருத்தமான நபரை பணியில் அமர்த்தி, இயக்குவித்து செலுக்கம் அளித்து அவர்களை கட்டுப்படுத்தி ஒருங்கிணைத்தல் எப்படி என்பதையும் புரிந்து கொண்டனர்,

**கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்**
PPT வீடியோக்கள் QR குறியீடு இணையம் அல்லது You Tube வீடியோக்கள் நிர்வாகத்தின் செயல்பாடு தொடர்பான விளக்கப்படம்.

**முன்னறிவு**
11ம் வகுப்பு பாடத்தில் உள்ள தொழில்அமைப்புகளின் வடிவங்கள் அதிலுள்ள தனியார் வணிகம், இந்து கூட்டு குடும்பம் மற்றும் கூட்டாண்மை, கூட்டு பங்கு நிறுமம்,கூட்டுறவு அமைப்பு போன்ற பாடங்களில் உள்ள கருத்துக்களை பாடத் தலைப்போடு நினைவுபடுத்துதல், தனியாள் வணிகம் எல்லாம் அவரே, அவரே எல்லாம். இந்து கூட்டுக் குடும்பம் மேலாண்மை செய்பவர் - கர்த்தா, கூட்டாண்மை-மேலாண்மை செய்பவர் - கூட்டாளி, கூட்டு பங்கு நிறுமம்- மேலாண்மை செய்பவர் பங்குதாரர் தேர்ந்தெடுக்கும் இயக்குனர் அவை. கூட்டுறவு அமைப்பு- மக்களாட்சி அடிப்படையில்.

**பாட அறிமுகம்**
மேலாண்மை மற்றம் நிர்வாகம் இரண்டையும் வேறுபடுத்தும் வகையில் கொரோனா காலத்தில் அரசு பல்வேறு துறைகளில் தலைவர்களை வைத்து கூட்டம் கூட்டி நிர்வாகம் செய்தது. அந்த துறைகளின் கீழ் உள்ள நபர்களை வைத்து மேலாண்மை செய்வதை சுட்டிக் காட்டுதல். மேலாண்மை செயல்பாடுகளை வைத்து மாணவர்களுக்கு அறிமுகம் செய்தல்.

**பாட வளர்ச்சி கற்றல் கற்பித்தல் செயல்பாடு**
**ஆசிரியர் செயல்பாடு**
**முதன்மை பணிகள**

Downloaded From www.nagaicollege.com

திட்டமிடுதல் - செயல்படுவதற்கு முன் நீங்கள் சிந்தியுங்கள் அமைப்பாற்றல் - இணக்கமான உறவு பணியமர்த்தல் - பொருத்தமான நபர்களை பொருத்தமான வேலைக்கு அமர்த்துதல் இயக்கவித்தல் - இலக்குகளை சாதித்தல் செயல் ஊக்கம் அளித்தல, பணிகளை விரைவாக செய்து முடித்தல் கட்டுப்படுத்துதல் - செயல்திறனை மதிப்பீடு செய்வதற்கு ஒருங்கிணைத்தல் மேற்கண்ட ஆறு பணிகளையும் ஒருங்கிணைத்தல

**துணை பணிகள்**

புதுமைப்படுத்ததுதல் செயல்பாடு புதுமைப்படுத்துதல பிரதிநிதித்துவம் - நிறுவனத்தின் பிரதிநிதியாக மேலாளர் செயல்படுதல், முடிவு எடுத்தல் அமைப்பு இலக்குவாக செயல்பட தகவல் தொடர்பு ஒரு நபர் மற்றொரு நபருக்கு பரிமாற்றம் செய்தல்

**மாணவர் செயல்பாடு**

ஒரு உணவக விடுதி அல்லது அடுமனைக்குச் சென்று மேலாண்மையின் பணிகளை கூர்ந்தாய்வு செய்ய மாணவர்களை வழிகாட்டுதல்

**வலுவூட்டல்**

ஒரு அமைப்பின் உறப்பினர்களிடையே இணக்கமா உறவை ஏற்படுத்துவது?

விடை : ஒழுங்கமைத்தல்

நுகர்வோர்கள் எதன் மூலம் திருப்தி அடைகின்றனர்?

விடை : புதுமைப்படுத்துதல்.

மேலாண்மை செய்பாடுகளில் முதன்மையானது?

விடை : திட்டமிடுதல்

**மதிப்பீடு**

**எளிய சிந்தனை வினாக்கள்**

--- இன் உதவியுடன் இலக்குகள் அடையப்படுகின்றன?

**நடுத்தர சிந்தனை வினாக்கள்**

நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு முக்கிய தகவல்கள் எவ்வாறு தெரிவிக்கபப்படும்?

**உயர் சிந்தனை வினாக்கள்**

மேலாண்மையின் பல்வேறு பணிகளை விளக்குக?

**குறைதீர் கற்றல**

கருத்துக்களை புரிவதில் சிரமமுள்ள மாணவர்களை அடையாளம் கண்டு எளிதில் புரியும் வண்ணம் மற்றும் தேர்வில் விடைகளை தெளிவாக எப்படி எழுத வேண்டும் என்பதை தனிப்பட்ட முறையிலும், பொதுவாகவும் எடுத்துரைத்தல், திட்டமிடுதல். திட்டமிடுதல், செயல் ஊக்கம் அளித்தல் - முதன்மை பணிகள், - துணை பணகள்

**தொடர்பணி**

செய்தித்தாளில் மேலாண்மை செயல்பாடுகள் வரும் கருத்துகளை வாசித்து காட்டுதல் உதாரணமாக Google ஜியோவுடன் இணைதல்.

Downloaded From www.nagaicollege.com

வகுப்பு:12

பாடம்: வணிகவியல்

தேதி: ஜுன் 3 வது வாரம்

Prepared by: SAYEELAKSHMI J .S.
Govt Girls HSS, Sholavandan, Madurai (Dist).
Cell:9486730743

தலைப்பு: 3. குறியிலக்குமேலாண்மைமற்றும் விதிவிலக்குமேலாண்மை

**கற்றல் நோக்கங்கள்:**

- குறியிலக்கு மேலாண்மை மற்றும் விதிவிலக்கு மேலாண்மை ஆகியவற்றின் பொருள் மற்றும் விரவிலக்கணம் புரிந்து கொள்ள இயலும்.
- குறியிலக்கு மேலாண்மை இயல்புகள் மற்றும் செயல்முறைகளைப் புரிந்துகொள்ள இயலும்
- விதிவிலக்கு மேலாண்மை பொருள் செயல்முறைகள் நன்மை குறைகளையும் புரிந்து கொள்ளலாம்.

**கற்றல் விளைவுகள்:**

- மேலாண்மை செயல் முறைகளில் குறியிலக்கு மேலாண்மை மற்றும் விதிவிலக்கு மேலாண்மை பற்றிய கருத்துக்களைப் புரிந்து கொண்டு விவரித்தல்.

**கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்:**

- கரும்பலகை,PPT,

**ஆர்வமூட்டல்:**

- ஆசிரியர் வகுப்பறையில் தேர்வுக்குத் திருப்புதல் நடத்துகையில் மாணவர்களை கையாள்வதை (வேகமாக,மிதமாக மற்றும் மெல்லக் கற்கும் மாணவர்களை) கேட்டல்

**முன்னறிவு:**

- மேலாண்மையின் பொருள் மற்றும் மேலாண்மை செயல்பாடுகள் பற்றிய அறிவு மாணவர்களுக்கு இருத்தல்

**நினைவு கூர்தல்:**

- மேலாண்மை என்பது மற்றவரின் முயற்சி மற்றும் ஒத்துழைப்புடன் நோக்கங்களை எய்தும் ஒரு கலையாகும்.

பாடஅறிமுகம்:

- குறியிலக்கு மேலாண்மையானது ஜார்ஜ் ஒடியோகன் என்பவரால் அமெரிக்காவில் பிரபலப்படுத்தப்பட்டது. அவரது கூற்றின்படி குறியிலக்கு மேலான்மை என்பது ஒரு நிர்வாக முறையாகும். ஒரு நிறுவனத்தின் உயர்நிலையில் மற்றும் கீழ்நிலையில் உள்ள மேலாளர்கள் கூட்டாக இணைந்து, அதன் பொதுவான குறிக்கோள்களைஅடையாளம் கண்டு, எதிர்பார்க்கும் முடிவின் அடிப்படையில் ஒவ்வொரு நபரின் முக்கிய செயல் பகுதியையும் பொறுப்புணர்வையும் அளவிட்டு செயல் பகுதியின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரின் பங்களிப்பையும் மதிப்பிடுவது ஆகும்.

பாடவளர்ச்சி:

MBO குறிக்கோள்கள்:

Downloaded From www.nagaicollege.com

1. அளவிடுதல் மற்றும் செயல்திறன்களை மதிப்பிடுதல்
2. அமைப்பின் குறிக்கோள்களுடன் தனிப்பட்டசெயல் திறனை தொடர்புபடுத்தல்
3. நிறைவேற்றக்கூடிய வேலை மற்றும் எதிர்பார்ப்புகள் இரண்டையும் தெளிவுபடுத்தல்
4. கீழ்நிலைப் பணியாளர் திறனை அதிகரித்தல் மற்றும் வளர்ச்சியடையச் செய்தல்
5. பணியாளர்களுக்கிடையே தகவல் தொடர்புகளை அதிகரித்தல்
6. சம்பளம் மற்றும் பதவி உயர்வுகளை நியாயமாக வழங்குதல்
7. பணியாளரின் ஊக்கத்தைத் தூண்டிவிடுதல்
8. அமைப்பின் கட்டுப்பாட்டு மற்றும் ஒருங்கிணைப்புக்கான ஒரு கருவியாகப் பணி ஆற்றுதல். மேலும் குறியிலக்கு மேலாண்மையின் இயல்புகள், செயல்முறைகளை விளக்குதல் நன்மை, குறைகளை விவாதித்தல்.

**<u>விதிவிலக்கு மேலாண்மை:</u>**

- விதிவிலக்கு மேலாண்மை என்பது நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு எல்லாவற்றையும் பட்டுப்படுத்துவதற்கான ஒரு முயற்சியாகும்.
- விதிவிலக்கு மேலாண்மை என்பது நெறிமுறையிலிருந்து விலகிப்போகும் நிகழ்வுகளை அடையாளம் காண்பதற்கும், கையாள்வதற்கும் கவனம் செலுத்துகின்ற ஒரு நிர்வாக பாணியாகும்.
- எடுத்துகாட்டாக வகுப்பில் உள்ள மொத்த மாணவர்களை நான்கு குழுக்களாக அதிவிரைவாக, விரைவாக, மதிமாக, மெல்லக் கற்போர் என்ற அடிப்படையில் பிரித்தல். வரும் தேர்வில் வகுப்பு சராசரி மதிப்பெண் 70 என நிர்ணயித்தல். ஒவ்வொரு குழுவுக்கும் முறையே 90, 80, 70, 40 என இலக்கு நிர்ணயித்தல்
- ஒவ்வொரு குழுவையும் வழிப்படுத்த கண்காணிக்க மாணவர் தலைவர்களை நியமித்தல்.
- ஒவ்வொரு குழவுக்கு அவர்களின் இலக்கு மதிப்பெண்ணைத் தெளிவாக்கி, அதனை அமையத் தேவையான வழிகாட்டுதல்களைஆசிரியர் செய்தல்.

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | - | மேல் நிலை பணியாளர் |
| மாணவர் தலைவர்கள் | - | மேலாளர் |
| மாணவர்கள் | - | கீழ்நிலை பணியாளர்கள் |

இச் சூழ்நிலையினை மனதில் கொண்டு குறியிலக்கு மேலாண்மை செயல்முறைகள் விதிவிலக்கு மேலாண்மை செயல் முறைகளை விளக்குதல்

குறியிலக்கு மேலாண்மை செயல்முறைகள்:

1. இலக்குகளை வகுத்தல்
2. ஒவ்வொரு பிரிவின் இலக்குகள்
3. முக்கிய முடிவுப் பகுதிகள்
4. கீழ்நிலை ஊழியர்களின் குறிக்கோள்களைஅமைத்தல்
5. குறிகுகோள்களுடன் வளங்களை ஒப்பு நோக்குதல்
6. காலவாரியாக மறு ஆய்வுக் கூட்டம் நடத்தல்
7. நடவடிக்கைகளை மறு ஆய்வுக் கூட்டம் நடத்துதல்

Downloaded From www.nagaicollege.com

8. குறிக்கோள்களை மறு ஆய்வுசெய்தல்

**விதிவிலக்கு மேலாண்மை செயல்முறைகள்:**

1. குறிக்கோள்களைஅமைத்தல்

2. உண்மையான செயல்திறன்கள் மதிப்பீடு செய்யப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட செயல்திறனுடன் ஒப்பிடுதல்

3. விலகல் பகுப்பாய்வு செய்தல்

4. எந்த விலகலும் இல்லாதபொழுது முதுநிலை மேலாளர் எந்த நடவடிக்கையும் எடுக்கத் தேவையில்லை. மற்ற விசயங்களில் கவனம் செலுத்தலாம்.

5. உண்மையான செயல்திறன்கள் கணிசமாக விலகிவிட்டால் மேல்நிலை பணியாளர்கள் அதைத் தீர்ப்பதற்காக செயல்பட வேண்டும்.

**மாணவர் செயல்பாடுகள்:**

ஆசிரியர் கேட்கும் வினாக்களுக்கும் பதில் அளித்தல்

பாடப்புத்தகத்தில் புதியகலைச் சொற்களைஅடிக்கோடிடல்

வகுப்புத் தேர்வுகள் எழுதுதல்

**வலுவூட்டல்:**

மீண்டும் ஒரு முறை பாடத்தின் முக்கிய கருத்துக்களான MBO, MBE வரைவிலக்கணம், பொருள் இயல்புகள் நன்மை குறைகளை விளக்குதல் மாணவர் whatsapp group ல் youtube ல் சம்பந்தப்பட்ட காணொளிகளை பகிர்தல்.

**மதிப்பீடு :**

LOT - குறியிலக்கு மேலாண்மையானது ------------ என்பவரால் அமெரிக்காவில் பிரபலப்படுத்தப்பட்டது.

MOT - விதிவிலக்கு மேலாண்மையின் பொருள் தருக

HOT - குறியிலக்கு மேலாண்மை செயல்முறைகளை பட்டியலிடுக

**குறைதீர் கற்றல்:**

- மாணவர்கள் தேர்வில் மதிப்பெண் பெறும் நோக்கில் மெல்லக்கற்கும் மாணவர்களுக்கு பாடப் புத்தகத்தில் உள்ள வினாக்களுக்கு விடையளிக்கப் பயிற்சி அளித்தல்.
- மதிப்பெண் மட்டுமல்லாது கருத்தியலில் ஆர்வமாகக் கற்கும் மாணவர்களின் ஐயங்களுக்கு விடையளித்து பாடக் கருத்துக்களைத் தெளிவுபடுத்தல்

Downloaded From www.nagaicollege.com

**தொடர் பணி:**

- பாடப்புத்தகத்தில் உள்ள சூழ்நிலை ஆய்வு பகுதியை மாணவர்களுக்கு எடுத்துரைத்து அது தொடர்பாக அவர்களின் கருத்துக்களை தனித்தனியாக எழுதிவரச் செய்து அதனை வகுப்பில் கலந்துரையாடுதல்
- பாடப்புத்தகத்தின் கேள்வி பதில்களை புரிந்து கொண்டு மனப்பாடம் செய்யப் பணித்தல்.

---

**வகுப்பு:12**
**பாடம்:** வணிகவியல்
**தலைப்பு: 4 –நிதிச்சந்தை - ஓர் அறிமுகம்**
**தேதி: ஜூன் மாதம் -நான்காவதுவாரம்**

Prepared by: A.MARIAPPAN PG Asst
V.N.T GHSS, Shanmuganathapattinam
Sivagangai
Mobile 97885 38283

**கற்றல்நோக்கங்கள்;-**

- நிதிச்சந்தையின் **பொருள், வரைவிலக்கணம்**
- நிதிச்சந்தையின் **எல்லை**
- நிதிச்சந்தையின் **வகைகள்**
- நிதிச்சந்தையின் **பங்கு**
- **புதியவெளியீடுசந்தை** மற்றும் **இரண்டாம்நிலைசந்தை** ஆகியவற்றை மாணவர்கள் புரிந்து கொள்ள முடியும

**கற்றல்விளைவுகள்;-**

காய்கறி சந்தை, மீன் சந்தை மற்றும் பழச்சந்தைஇருப்பதைப் போல **நிதி சந்தை** உண்டு என்பதை தெரிந்து கொண்டார்கள் நிறுவனத்தின் **குருதி** (இரத்தம்) , **நிதி** என்பதை அறிந்து கொண்டனர். உள்ளூரில் வட்டிக்கு கடன் கொடுப்பவர்கள் மற்றும் வணிக வங்கிகள் இந்திய நிதி அமைப்பில் எந்த வகையை சார்ந்தவர்கள் என்பதை புரிந்து கொண்டனர்

தொலைக்காட்சி செய்தியில் பார்க்கின்ற **பங்குச் சந்தை**, நிதி சந்தையில் எந்த வகையைச் சார்ந்தது என்பதை புரிந்து கொண்டனர் மனிதர்களிடம் **உபரியாக** உள்ள **பணம்**, உற்பத்தி துறைக்கு **மூலதனமாக** எப்படி சென்றடைகிறது என்பதை புரிந்து கொண்டனர்

நிதி சந்தையில் **விலை** எவ்வாறு **நிர்ணயம்** செய்யப்படுகிறது என்பதை புரிந்து கொண்டனர்புதிய நிறுவனத்தின் பங்குகளை மக்கள் வாங்கும் பொழுது

**புதிய** நிறுவனத்தின் **பங்குகளை** மக்கள் **வாங்கும்** பொழுது அச்சந்தையின் பெயரினையும், அந்த பங்குகள் வாங்கி வைத்திருப்பவர் **மீண்டும்** சந்தையில் **விற்றால்** அதன் பெயரினையும் புரிந்து கொண்டனர்

**கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் ;-**

PPT, Videos, News Paper cutting related Prospectus, Chart related to Stock Market, Hi-tech Lab online test link

**முன்னறிவு ;-**

பதினோராம் வகுப்பில் தொழிலின் அடிப்படை கூறுகள் பாடத்தில் **பண்டமாற்றுபொருளாதார** முறையில் இருந்து **பணபொருளாதாரமாக** மாறி வியாபாரம் வளர்ந்து வணிக அமைப்பாக மாறியதை நினைவுபடுத்துதல்

Downloaded From www.nagaicollege.com

**உற்பத்திதொழிலின்** வகைகளையும், அவைகள் நிறும அடிப்படையில் **பேரளவு மூலதனத்துடன்** எவ்வாறு அமைக்கப்படுகிறது என்பதை நினைவுபடுத்துதல்

**வணிக வங்கியின் பணிகளை** நினைவுபடுத்துதல்

**தொழில் நிதி மூலங்கள்** பாடத்தில் உள்ள **பொருள்** மற்றும் **நீண்டகாலநிதி** ஆதாரங்களை நினைவுபடுத்துதல்

**சில்லரை வியாபாரம்** என்ற பாடத்தின் மூலம் **சந்தை வியாபாரத்தை** நினைவுபடுத்துதல்

**பாடஅறிமுகம்:-**

ஒரு வாரத்திற்கு தேவையான காய்கறிகளை பெற்றோருடன் சென்று எங்கு வாங்குவாய்?

மீன் வாங்குவதற்கும், பழங்கள் மற்றும் பூ வாங்க பெரிய நகரங்களில் தனித்தனியாக சந்தைகள் உள்ளது அது போன்று **நிதி கோரல்கள் வாங்கவும்**, **விற்பனை** செய்யும் **இடம் நிதிச்சந்தை** ஆகும்

உன் தந்தையின் **சேமிப்பு** பணம் **முதலீடாக** மாற்றப்படுகிறதா? ஆம் என்றால் எப்படி ?

நமது மாவட்டத்தில் மற்றும் நமது மாநிலத்தில் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலைகள் யாவை? அவற்றில் **தொழில் நிதி மூலங்கள்** எவ்வாறு திரட்டப்பட்டன

**பாட வளர்ச்சி**

**கற்றல் கற்பித்தல்**

**செயல்பாடு**

**ஆசிரியர்செயல்பாடு :-**

**இந்தியநிதிமுறை**

A.அமைப்பு நிறுவனங்கள்

B.அமைப்பு சாரா நிறுவனங்கள்

நிதிச் சந்தையின் **பொருள்** மற்றும் **வரைவிலக்கணம்**

**ப்ரிகாம்யூஜின் எஃப்** " பணத்தைக் கடன் வாங்க விரும்பும் மக்களும், அமைப்புகளும் உபரி நிதி உள்ளவர்களுடன் ஒன்றிணைக்கப்படும் இடம் நிதி சந்தை என்று அழைக்கப்படுகிறது "

**இந்திய நிதி சந்தையின் எல்லை மற்றும் வகைகள்**

**இந்திய நிதிச் சந்தையின் வகைகள்**

1. கோருதலின் அடிப்படையில்
2. முதிர்வு அடிப்படையில்
3. வெளியீட்டு கால அடிப்படையில்
4. வளங்களின் அடிப்படையில்
5. அமைப்பின் அடிப்படையில்

✓ **நிதிச் சந்தையின் பங்கு**

- சேமிப்பை பெருக்குதல்
- முதலீடுகள்
- தேசிய வளர்ச்சி
- தொழில் முனைவோர் வளர்ச்சி
- தொழிற்துறை மேம்பாடு

Downloaded From www.nagaicollege.com

- ✓ **நிதிச் சந்தையின் பணிகள்**
  - இடைநிலையர்ப் பணிகள்
  - நிதி சார்ந்த பணிகள்
- ✓ **புதிய வெளியீடுகள் சந்தை VS இரண்டாம் நிலை சந்தை**

**மாணவர் செயல்பாடு** :-

மாணவர்கள் பாட புத்தகத்தை படிக்கச் சொல்லி **புதியவார்த்தைகளை** அடிக்கோடு இடச் சொல்லுதல்

**கலைச் சொற்களை** படிக்கச் சொல்லுதல்

செய்தி தாளில் வெளியீடு செய்யப்படுகிற **பங்குகள் வெளியிட்டிற்கான அழைப்பிதழ்களை** கண்டுபிடித்து கொண்டு வரச் சொல்லுதல்

**வலுவூட்டல்** :-

**புதிய** மற்றும் **கடினமான கருத்துக்களை** Flash cards, videos, QR scan செய்து விளக்கி கூறுதல்

**மதிப்பீடு** :-

எளிய சிந்தனை வினாக்கள் (LOT)

நிதி சந்தை வணிக நிறுவனங்களுக்கு_________உதவுகிறது

ஒரு இரண்டாம் நிலை சந்தையில் ஒரு பத்திரம் எத்தனை முறை விற்கப்படலாம்

நடுத்தர சிந்தனை வினாக்கள் (MOT)

நிதிச் சந்தையின் பொருள் தருக?

உயர் சிந்தனை வினாக்கள் (HOT)

இரண்டாம் நிலை சந்தையில் பங்குகளின் விலை எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது ?

**குறைதீர் கற்றல்** :-

கருத்துகளை புரிவதில் சிரமம் உள்ள மாணவர்களை அடையாளம் கண்டு எளிதில் புரியும் வண்ணம் மற்றும் தேர்வில் விடைகளை தெளிவாக எப்படி எழுத வேண்டும் என்பதை தனிப்பட்ட முறையிலும் பொதுவாகவும் எடுத்துரைத்தல்

வருமானம் –சேமிப்பு- முதலீடு- ஆக்கபூர்வமான தேசிய பொருளாதார வளர்ச்சி

**செயல்பாடு** :-

குழுவாக அமைத்து ஒரு மதிப்பெண் வினா, இரண்டு மதிப்பெண் வினாக்களை **வினாடிவினாவாக** நடத்துதல்

Hi – tech labல் online test நடத்தி வேகமாக செய்து முழு மதிப்பெண் பெறுபவர்களுக்கு பரிசு வழங்குதல்

**தொடர் பணி** :-

பெற்றோரின் **சேமிப்பு** மற்றும் **முதலீடுகளை** அறிந்து கொள்ளுதல்

இன்றைய பங்குச் சந்தையில் **பங்குகளின்நிலவரங்களை** தெரிந்து வரச் சொல்லுதல்

---

வகுப்பு:12

பாடம்: வணிகவியல்

அலகு 2 **நிதிச் சந்தை - I** தலைப்பு: 5 மூலதனச்சந்தை

தேதி: ஜீலை முதல் வாரம்

Prepared by: ***P. KARTHIKEYAN***

***S.U.M HR SEC SCHOOL, ROYAPPANPATTI, Theni***

***CELL: 9943065966***

Downloaded From www.nagaicollege.com

**கற்றல்நோக்கம்:**

மூலதனச் சந்தையின் பொருள் மற்றும் வரைவிலக்கணம்

மூலதனச் சந்தையின் சிறப்பியல்புகள்

மூலதனச் சந்தையின் பணிகள்

இந்திய மூலதனச் சந்தை - தோற்றம் மற்றும் வளர்ச்சி

புதிய நிதி நிறுவனங்கள்

**கற்றல்விளைவுகள்:**

ஒரு வணிகம் வெற்றி பெற இரண்டு வகையான நிதி தேவைப்படுகிறது. இவை 1. குறுகிய காலநிதி, 2. நீண்ட கால நிதி. மூலதனச் சந்தை நிறுமங்களுக்கு நீண்ட கால நிதித் தேவையை வழங்குகின்றன.பங்குகள், கடனிட்டுப் பத்திரங்கள், நாணயங்கள் மற்றும் பிற நிதி சொத்துக்களை வாங்குவதற்கும் விற்பதற்கும் மூலதனச் சந்தை பங்காற்றுகின்றன.

## கற்றல்கற்பித்தல்உபகரணங்கள்:

## PPT, VIDEOS, EDUCATIONAL GAMES, MAGAZINES, QR CODES, ONLINE TEST

## முன்னறிவு:

முந்தைய பாடமான நிதிச் சந்தை பற்றிய கருத்துக்களை தொடர்படுத்துதல்.நிதி கோருதலின் முதிர்வு அடிப்படையில் பணச் சந்தை மற்றும் மூலதனச் சந்தை எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை விளக்கிக் கூறுதல்.

## பாடஅறிமுகம்:

பங்குமாற்றகத்தைப்பற்றிஅறியச்செய்தல்.மூலதனச்சந்தைஎவ்வாறுநிறுமங்களுக்குநீண்டகாலநிதியைமுதல்நிலைச்சந்தைமற்றும்இரண்டாம்நிலைச்சந்தைவாயிலாகபங்களிப்புசெய்கின்றனஎன்பதைவிளக்கிக்கூறுதல்.

## பாடவளர்ச்சி

## கற்றல்கற்பித்தல்செயல்பாடு

## ஆசிரியர்செயல்பாடு

மூலதனச்சந்தைபொருள் -வரைவிலக்கணம்

மூலதனச்சந்தையின்சிறப்பியல்புகள்

**மூலதனச்சந்தையின்வகைகள்**

- முதல்நிலைச்சந்தை
- இரண்டாம்நிலைசந்தை

**மூலதனச்சந்தையின்பணிகள்**

- சேமிப்புமற்றும்மூலதனஉருவாக்கம்
- நிலையானமூலதனம்
- தொழில்வளர்ச்சி
- உடனடிமற்றும்தொடர்ச்சியானசந்தை
- செயல்திறனுக்குநம்பகமானவழிகாட்டி

Downloaded From www.nagaicollege.com

**புதியநிதிநிறுவனங்கள்**

- துணிகரநிதிநிறுவனம்
- பரஸ்பரநிதி
- ஏட்டுக்கடன்தரகுமுகமைநிறுவனங்கள்
- இந்தியஎதிர்பங்குமாற்றம்
- இந்தியதேசியப்பங்குமாற்றம்லிமிடெட்

**மாணவர்செயல்பாடு:**

மாணவர்களைபாடப்புத்தகத்தைபடிக்கச்சொல்லிமுக்கியமானவார்த்தைகளைஅடிக்கோடுஇடச்செய்தல்.

கலைச்சொற்களைபடிக்கச்சொல்லுதல்.

**வலுவூட்டல்:**

புதியமற்றும்கடினமானகருத்துக்களைVIDEO GAMES, QR CODE SCANசெய்துவிளக்கிகூறுதல்.

- தேசியதீர்வாகமற்றும்களஞ்சியஅமைப்பு
- கடினபண்டகச்சந்தை
- மென்பண்டகசந்தை

**மதிப்பீடு:**

**எளியசிந்தனைவினாக்கள்(LOT)**

1.மூலதனச்சந்தைஎன்றால்என்ன?

**நடுத்தரசிந்தனைவினாக்கள்(MOT)**

1.ஏட்டுக்கடன்மற்றும்துணிகரமுதல்வழங்குநிறுமங்களைபற்றிவிளக்குக.

**உயர்சிந்தனைவினாக்கள்(HOT)**

1.மூலதனச் சந்தையின் பல்வேறு பணிகளை விளக்குக.

**செயல்பாடு:**

இந்தியாவிலுள்ளபல்வேறுதுணிகரநிதிநிறுவனங்களைப்பற்றிஅறிந்துகொள்ளல்.பரஸ்பரநிதிமற்றும்ஏட்டுக்கடன்தரகுமுகமைநிறுவனங்களின்செயல்பாடுகளைநடைமுறையில்தெரிந்துகொள்ளுதல்.

**தொடர்புபணி:**

செய்தித்தாள்கள்,மாதஇதழ்கள்மற்றும் youtube சேனல்களில்வரும் மூலதனச்சந்தை பற்றிய விவரங்களை அறிந்துவர செய்தல்.

---

வகுப்பு:12

பாடம்: வணிகவியல்

**தலைப்பு: 6 பணச் சந்தை**

**தேதி: ஜீலை 2 வது வாரம்**

Prepared by: RAJENDRAN S.M
GHSS,Thangammalpuram,Theni(dist)
*CELL: 9042117151*

## கற்றல் நோக்கம் :

பணச் சந்தை பற்றி அறிந்து கொள்ளுதல் .பனச்சந்தை மற்றும் மூலதனச் சந்தை இடையே உள்ள வேறுபாடுகளை

Downloaded From www.nagaicollege.com

அறிந்து கொள்ளுதல் . பணச் சந்தையில் பயன்படுத்தப்படும் ஆவணங்களை பற்றி விளங்கிக் கொள்ளுதல் .

**கற்றல் விளைவுகள் :**

பணச் சந்தை நிதிகள் பற்றிய தகவல்களை கற்றுக் கொண்டனர் . பணச் சந்தை முதலீட்டில் பணம் முதலீடு செய்வதை பற்றி கற்றுக் கொண்டனர் . பல்வேறு வகையான பண சந்தை நிதிகளை பற்றி தெரிந்து கொண்டனர் பணச் சந்தை நிதிகளின் நோக்கம் பற்றி விளங்கிக் கொண்டனர்.

**கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்:**

videos , QR code scan , magazines .

**முன்னறிவு :**

அத்தியாயம் 4 மற்றும் 5 இல் நிதிச் சந்தை , தனி நபர்களுக்கு , விவசாயத் துறைகளுக்கு , நிதி நிறுவனங்களான வங்கிகள், காப்பீட்டு துறைகளுக்கு , சேர்மன் நிதிகள் மற்றும் அரசு துறைக்கு நிதி உதவிகளை வழங்குகிறது என்பதனையும் மூலதனச் சந்தையையும் நினைவுபடுத்துதல் .

**பாட அறிமுகம்:**

லண்டன் பண சந்தை உலகின் பழமையான மிகவும் வளர்ந்த மற்றும் முன்னணி பண சந்தை ஆகும் அடுத்தபடியாக இரண்டாவது நன்கு வளர்ந்த பண சந்தை நியூ யார்க் பண சந்தை ஆகும்

**பாட வளர்ச்சி ,கற்றல் கற்பித்தல் செயல்பாடு**

**ஆசிரியர் செயல்பாடு :**

பணச் சந்தை என்பது நிதிச் சந்தையின் உட்பிரிவாகும் இச்சந்தையில் ஒரு ஆண்டிற்குள் காலவரையாகும் நிதி பத்திரங்கள் மாற்றம் செய்யப்படுகிறது . கருவூல சீட்டுகள் ,வணிக ரசீதுகள் ,வைப்புச் சான்றிதழ்கள் மற்றும் அரசு பத்திரங்கள் . நோக்கங்கள் மற்றும் சிறப்பியல்புகள் பண சந்தை மூலதனச் சந்தை வேறுபாடுகள் . பணச் சந்தையின் பங்கேற்பாளர்கள் , பணச் சந்தையின் ஆவணங்கள் , கருவூல ரசிதுகளின் வகைகள் , வைப்புச் சான்றிதழ்கள் , வணிக ரசிகர்கள் மற்றும் அரசு தங்க முனை பத்திரங்கள் .

**மாணவர் செயல்பாடு :**

ஆசிரியர் பாடம் நடத்தும் போது முக்கியமான கருத்துக்களை குறிப்பெடுத்தல் மற்றும் மாணவர்களை பாடப் புத்தகத்தை படிக்கச் சொல்லி புதிய வார்த்தைகளை அடிக்கோடிடச் செய்தல் . பாடப்புத்தகத்தில் உள்ள வினாக்களுக்கு எவ்வாறு பதில் எழுதுவது என்பதனை சுயமாக சிந்தித்து செயல்பட செய்தல் .

**வலுவூட்டல் :**

புதிய மற்றும் கடினமான கருத்துக்களை மீண்டும் ஒருமுறை எளிமையாக விளக்கிக் கூறுதல் .

videos , QR code scan செய்து விளக்கிக் கூறுதல் .

Downloaded From www.nagaicollege.com

**மதிப்பீடு** :

எளிய சிந்தனை வினாக்கள் : பணச் சந்தையில் முக்கிய பங்காற்றும் அமைப்பு ____________

நடுத்தர சிந்தனை வினாக்கள்: கருவூல ரசீதின் பொது இயல்புகள் யாவை ?

உயர் சிந்தனை வினாக்கள் : பணச் சந்தை மற்றும் மூலதனச் சந்தை இரண்டிற்கும் இடையிலான வேறுபாடுகளை விவரி .

**குறைதீர்க் கற்றல்** :

பாடக் கருத்துக்களை புரிவதில் சிரமம் உள்ள மாணவர்களை அடையாளம் கண்டு மீண்டும் ஒருமுறை கருத்துக்களை எளிமையாக விளக்கிக் கூறுவது, படிப்பதற்கு ஆர்வம் மூட்டுதல், சிறப்பு பயிற்சி அளித்தல், திட்டமிடுதல் மற்றும் தேர்வுக்கு தயார் செய்வது.

**செயல்பாடு** :

மாணவர்களை இரு அணிகளாகப் பிரித்து மூலதனச் சந்தை மற்றும் பணச் சந்தை இரண்டிற்கும் இடையிலான வேறுபாடுகளை உரையாடச் செய்வது.

**தொடர் பணி** :

பணச் சந்தை பற்றி செய்தித்தாள்களில் வரும் கருத்துக்களை வாசித்துக் காட்டுதல்

---

வகுப்பு:12

பாடம்: வணிகவியல்

தலைப்பு: 7.பங்குமாற்றகம்

தேதி: ஜூலை மூன்றாவது வாரம்

Prepared by: S.ANBU, PG.ASST,
CSM MPL Hr.Sec.School, PILLAIYARPALAYAM,
KANCHIPURAM DT.
*CELL: 9786851452*

**கற்றல்நோக்கங்கள்** :

- இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்களால்,

- பங்கு மாற்றகத்தின் தோற்றம், பொருள் மற்றும் வரைவிலக்கணம்
- பங்கு மாற்றகத்தின் செயல்பாடுகள் மற்றும் தன்மைகள்
- பங்கு மாற்றகத்தின் நன்மைகள் மற்றும் குறைபாடுகள்
- இந்தியாவில் பங்கு மாற்றகங்கள்
- பங்கு மாற்றகங்களில் ஈடுபடும் வணிகர்கள்
- ஊக வணிகர்களின் வகைகள்
- பங்கு பரிவர்த்தனை மற்றும் பண்டங்கள் பரிமாற்றத்திற்கான வேறுபாடு
- பங்கு மாற்றகத்தின் சமீபத்திய வளர்ச்சி ஆகியவற்றை புரிந்து கொள்ள இயலும்.

**கற்றல்விளைவுகள்** :

- பங்கு பரிவர்த்தனை என்பது ஒரு சந்தை, இங்கு பெருநிறுவனங்கள், அரசு மற்றும் அரசுக்கு இணையான நிறுவனங்கள் ஆகியவற்றின் பத்திரங்கள் வாங்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன என்பதை புரிந்து கொள்ள முடியும்.

Downloaded From www.nagaicollege.com

- பங்கு மாற்றகம் என்பது ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட சந்தையாகும். அரசின்அங்கீகாரம் இதற்கு தேவைப்படுகிறது என்பதை புரிந்து கொள்ள முடியும்.
- நிறுவனங்கள் அவ்வப்போது புதிய பங்குகளின் மூலம் வரம்பற்ற நிதியை திரட்டகிறது என்பதை அறிந்து கொள்ள முடியும்.
- பங்குச்சந்தை பரிவர்த்தனைகள், முதலீட்டாளர்களின் விருப்பம் மற்றும் அதன் விதிமுறைகள் ஆகியவற்றை கடுமையாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் நியாயமான ஒப்பந்தத்தை உறுதிப்படுத்துகிறது என்பதை புரிந்து கொள்ள முடியும்.
- பங்குமாற்றகம், முதலீட்டாளர்கள் தங்களது பங்குகளை விரைவாக பணமாக மாற்றுவதற்கு உதவுகிறது, இதனால் அவரது முதலீடுகளின் பணப்புழக்கம் அதிகரிக்கிறது என்பதையும் புரிந்து கொள்ள முடியும்.

**கற்றல்கற்பித்தல்உபகரணங்கள்:**

- PPT, Videos, QR codes,திருக்குறள், பாடநூல்
- TV Live channel – CNBC TV 18, screener website

**முன்னறிவு :**

- **11 - ஆம் வகுப்புபாடத்திட்டத்தில் உள்ள கூட்டுப்பங்குநிறுமம் பாடத்தில் உள்ள கருத்துக்களான பங்குகள், பங்குமூலதனம், பங்காதாயம் ஊகவணிகம், பங்குமாற்றகம், பங்குமுதலீடு, முதலீட்டாளர்கள் போன்றவற்றை நினைவுபடுத்துதல்.**

- **மேலும், 11 - ஆம் வகுப்பு பாடத்திட்டத்தில் உள்ள தொழில்நிதி மூலங்கள் பாடத்தில் உள்ள கருத்துக்களான நீண்ட காலநிதி ஆதாரங்களில் நேர்மைப் பங்குகள், வெளியீட்டு நிறுமங்கள் நிதியை திரட்டுகின்றன போன்ற கருத்துகளை தற்போதைய பாடக் கருத்தோடு இணைத்தல்.**

**பாடஅறிமுகம்:**

- **பங்குச்சந்தை, பெருநிறுவன பத்திரங்களை வாங்குவதற்கும் ,விற்பனை செய்வதற்கும் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட சந்தையாகும்**
- **பெரு நிறுவனங்களுடனும் தகவல் தொடர் பின்மூ லம் பங்குச் சந்தைகள் இணைகின்றன.**
- **இதனால் பங்குச் சந்தைகள் பணப் புழக்கங்கள் மற்றும் நிதிச் சொத்துக்களின் பரிமாற்றத்தை உறுதிப்படுத்துகிறது.**
- **அதிக எண்ணிக்கையிலான பங்கு விற்போரும், வாங்குவோரும் பங்கு வர்த்தகத்தில் ஈடுபடுவதால், முறையான ஒரு போட்டிச் சூழலை இச்சந்தை ஏற்படுத்துகிறது.**
- **மூலதன உருவாக்கத்திற்கு இச்சந்தை பெரும்பங்காற்றுவதடன், நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் காலக்கண்ணாடியாகவும் விளங்குகிறது**

**கற்றல்கற்பித்தல்செயல்பாடு**:

**ஆசிரியர்செயல்பாடு**:

- பங்குச் சந்தை என்பது பெருநிறுவன மற்றும் பிறபத்திரங்களை வாங்குவதற்கும் விற்பனை செய்வதற்கும் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட சந்தையாகும்
- பங்குச் சந்தை என்பது, தொழில்துறை மற்றும் நிதிப்பாதுகாப்பின் கொள்முதல் மற்றும் விற்பனைக்கான ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட சந்தை
- ஹஸ்பண்ட் மற்றும் டோகேர்ரி ஆகியோரின் கருத்துப்படி, "பங்குச்சந்தை மாற்றங்கள் தனிப்பட்ட முறையில் ஒழுங்கமைக்கப்பட்ட சந்தைகள் பத்திரங்களில் வர்த்தகத்தை எளிதாக்கும்".

Downloaded From www.nagaicollege.com

- ❖ பங்கு மாற்றகத்தின் பணிகள்
- ❖ பங்கு மாற்றகத்தின் இயல்புகள்
- ❖ இந்தியாவில் பங்குச் சந்தையின் பயன்கள் மற்றும் குறைபாடுகள்
- ❖ இந்தியாவில் பங்குச் சந்தை
- ❖ உலகின் முதல் 10 பங்கு சந்தைகள்
- ❖ ஊகவணிகர்களின் வகைகள்
- ❖ பங்கு பரிவர்த்தனைக்கும் பண்ட மாற்று பரிவர்த்தனைக்கும் உள்ள வேறுபாடுகள்.
- ❖ பங்கு சந்தையில் தற்போதைய வளர்ச்சி
  - ➢ மேற்கண்டவைகளுக்கு விரிவாகவிளக்கம் அளித்தல்.

**மாணவர்செயல்பாடு:**

- ❖ மாணவர்களை தொலைக்காட்சி செய்திகளில் இடம் பெறக்கூடிய வணிகச்செய்திகளிலிருந்தும், தினசரி செய்தித்தாளின் வணிகப்பகுதியில் இடம் பெறக்கூடிய பங்கு மாற்றம் சார்ந்த செய்திகளை கொண்டும் வகுப்பறையில் கலந்துரையாடச் செய்தல்.

**வலுவூட்டல்** :

- ❖ தினந்தோறும் வகுப்பறையில், பங்கு மாற்றம் குறித்த கருத்துகளை கலந்துரையாடி கடினமான சொற்களை எளிதில் புரிய வைத்தல்.
- ❖ மேலும், புதிய மற்றும் கடினமான கருத்துக்களை VIDEOS, QR CODE SCAN செய்துவிளக்கி கூறுதல்

**மதிப்பீடுசெய்தல்** :

எளிய சிந்தனை வினாக்கள் : 1) உலகின் பழமையான சந்தை எது?

2) பங்குசந்தை என்றால் என்ன?

நடுத்தரசிந்தனைவினாக்கள் : 1) ஊகவணிகர்களின் வகைகள் யாவை?

2) பங்கு மாற்றகங்களின் குறைபாடுகள் யாவை?

உயர்சிந்தனைவினாக்கள் : 1) முதன்மை சந்தையில் ஈடுபடும் ஊகவணிகர் யார்?

2) ஒரு கரடி ஊகவணிகர் எப்போது முடவாத்தாக மாறுகிறார்?

**குறைதீர்கற்றல்**

- ❖ கருத்துக்களைப் புரிவதில் சிரமம் உள்ள மாணவர்களை அடையாளம் கண்டு தகுந்த கற்றல் துணைக் கருவிகளைக் கொண்டு விளக்கம் அளித்தல்

**மாணவர்கள்செயல்பாடு**:

- ❖ மாணவர்களை இரு அணிகளாகப் பிரித்து, காளை, கரடியாக செயல்பட வைத்து பங்கு சந்தையில் வர்த்தகம் செய்ய செய்தல்.

Downloaded From www.nagaicollege.com

**தொடர்பணி** :

- தங்கள் இருப்பிடத்திற்கு அருகாமையில் அமைந்த பங்கு தரகர் அலுவலகத்திற்கு சென்று, தினசரி பங்கு வர்த்தகத்தில் ஈடுபடும் முதலீட்டாளர்கள், ஊக வணிகர்களின் நடவடிக்கைகளை கண்டறிந்து, அதைச்சார்ந்த விவரங்களை ஓர் ஒப்படைவு தயார் செய்யக் கோருதல்.

---

வகுப்பு:12

பாடம்: வணிகவியல்

**தேதி** :ஜூலை நான்காவது வாரம்.

Prepared by: GANAPATHI M
S V GHSS, Samathur,Pollachi
Cell:9942603638

**தலைப்பு: 8 இந்தியப் பத்திர மற்றும்மாற்றங்கள் வாரியம் (செபி)**

**கற்றல் நோக்கங்கள்**: மாணவர்கள்,

*செபியின் பொருள் மற்றும் தோற்றம், நோக்கங்கள், பணிகள் மற்றும் அதிகாரங்களை அறியச் செய்தல்.

*புறத்தோற்றமற்ற பத்திரங்கள் மற்றும் அதன் நன்மைகளை அறியச் செய்தல்.

*புறத்தோற்றமற்ற பத்திரக்கணக்கை தொடங்குவது எவ்வாறு என்பதை அறியச் செய்தல்.

**கற்றல் விளைவுகள்** மாணவர்கள்,

>>> செபி பற்றியும் அதன் தோற்றம், நோக்கங்கள், பணிகள் மற்றும் அதிகாரங்களை அறிந்து கொள்ளுதல்.

>>> புறத்தோற்ற மற்ற பத்திரங்கள் பற்றியும் அதன் நன்மைகளையும் அறிதல்.

>>> புறத்தோற்ற மற்ற பத்திரக்கணக்கை தொடங்க தேவைப்படும் ஆவணங்களை பற்றி அறிந்து அறிதல்.

**கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்**

* Demat கணக்கு தொடங்குவதற்கான விண்ணப்ப படிவத்தின் நகல்.*செபி பற்றிய நாளேடு செய்தித்தாள்களில் வந்துள்ள விளம்பரங்கள். *செபி பற்றிய சிறிய PPT

**ஆயத்தம்**

>>>இதற்கு முன் கற்ற பாடப்பகுதியான பங்கு மாற்றகம் என்ற தலைப்பின் கீழ் கற்ற பகுதிகளை நினைவு கூறுதல் .

>>>அதாவது பங்குச்சந்தை அதன் பணிகள் தரகர்கள் துணை தரகர்கள் ஊக வணிகர்கள் போன்றவை பற்றி கேட்டல் மற்றும் நினைவு கூறுதல்.

**கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள்**

**அறிமுகம்**

இந்திய பங்குச் சந்தையின் வளர்ச்சிக்காக பங்கு மாற்றங்களின் செயல்களை ஒழுங்குபடுத்த சுதந்திரமான ஒரு தனி அமைப்பின் மேற்பார்வையிலும் கட்டுப்பாட்டு கொள்ளும் கொண்டு வருதல் அவசியம். எனவே மத்திய அரசால் பத்திர மற்றும் மாற்றங்கள் வாரியம்( செபி) என்ற அமைப்பு 1988 உருவாக்கப்பட்டது. இது 1992 இல் சட்டமுறை அதிகாரம் பெற்றது.


**செபியின் தலைமையகம்**--மும்பை (பாந்திரா குர்லா வளாகம் )

மற்ற அலுவலகங்கள் --புது தில்லி.,கொல்கத்தா.,சென்னை.,அகமதாபாத்.

Downloaded From www.nagaicollege.com

www.Padasalai.Net www.CBSEtips.in

**செபியின் கட்டமைப்பு**




**செபியின் நோக்கங்கள்**

*பங்கு பரிவர்த்தனைகளின் ஒழுங்கு முறை. *முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்பு. *உள்வழி வியாபாரத்தை சரிபார்த்தல். *தரகர்கள் மீதான கட்டுப்பாடு.

**செபியின் பணிகள்**

முதலீட்டாளர் நலன் பாதுகாப்பு. பத்திர சந்தை ஒழுங்குபடுத்துதல், கட்டுப்படுத்துதல். தரகர்கள், துணைத்தரகர்கள், இடைநிலையர்கள் அனைவரையும் பதிவு செய்ய வலியுறுத்தல். பங்கு பரிவர்த்தனை விசாரணைகள் ஆய்வு செய்தல் மற்றும் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளல். பத்திரங்களில் உள்வழி வர்த்தகத்தை தடை செய்தல்.

மோசடியான, நேர்மையற்ற, நியாயமற்ற வணிக முறைகளை தடை செய்தல். சந்தையுடன் தொடர்புடைய அனைவரையும் பதிவு செய்தல் மற்றும் கட்டுப்படுத்துதல். பரஸ்பர நிதியகம், கூட்டு முதலீட்டு திட்டங்களில் செயல்பாடுகளை பதிவு செய்தல் மற்றும் கட்டுப்படுத்துதல். இடைத்தரகர்களின் சுய ஒழுங்குமுறை அமைப்பை ஊக்குவித்தல். இடைத்தரகர்களுக்கு பயிற்சி அளித்தல். மைய அரசால் வழங்கப்படும் பணிகளை செயல்படுத்துதல்.

**செபியின் அதிகாரங்கள்**

*பங்குச்சந்தைகள் மற்றும் இடைத்தரகர்கள் தொடர்பான அதிகாரங்கள். *நாணய அபராதங்களை விதிக்கும் அதிகாரம். *பணியிடங்களில் செயல்பாடுகளை தொடங்குவதற்கான அதிகாரம். *பத்திரங்களில் உள்வழி வர்த்தகத்தை ஒழுங்குபடுத்துவதற்கான அதிகாரம். *பத்திரங்கள் ஒப்பந்த சட்டத்தின் கீழ் உள்ள அதிகாரம். பங்குச்சந்தை வணிகத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரம்

.

**புறத்தோற்றமற்ற பத்திரங்கள்**

காகித வடிவிலான பத்திரச் சான்றிதழை அழித்துவிட்டு புறத்தோற்றமற்ற (மின்னணுமூலம்) பத்திரச் சான்றிதழாக மாற்றுவது. பின்னர் அதற்கு சமமான எண்ணிக்கையிலான பத்திரங்கள் வைப்புதாரரால் முதலீட்டாளர்களின் கணக்கில் வரவு வைக்கப்படும். 1996 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தேசிய பங்கு சந்தை முதன்முதலாக புறத்தோற்றமற்ற பத்திரங்கள் வர்த்தகத்தை தொடங்கியது. ரிலையன்ஸ் நிறுவனம் 100 பங்குகளை புறத்தோற்றமற்ற வடிவப் பத்திரங்கள் விற்பனையில் ஈடுபட்டது.

Downloaded From www.nagaicollege.com

**புறத்தோற்றமற்ற பத்திரங்களின் நன்மைகள்**

>>>பங்கு சான்றிதழ்களின் சேதம், இழப்பு ,திருட்டு, மோசடி போன்ற ஆபத்துகளை நீக்குகிறது.

>>>மிக விரைவான பரிவர்த்தனை.

>>>கணினி மூலம் வர்த்தகம்.

>>>நிறுவனங்களில் ஒருங்கிணைப்பு மற்றும் பங்குகள் இணைப்பு மூலம் நேரடியாக வரவு வைக்கப்படுதல்.

>>>வர்த்தகர்கள் தனித்தனியாக ஒவ்வொரு நிறுவனத்துடன் தொடர்பு கொள்ள தேவையில்லை.

>>>முத்திரைத்தாள் கட்டணம் தேவையில்லை.

>>>பங்கு மற்றும் பத்திரங்களை ஒரே கணக்கில் வைத்துக் கொள்ளலாம்.

>>>வங்கியில் வாடிக்கையாளர் சேவையாளர்களின் உதவி.

>>>உச்சவரம்புடன் பங்குகளை வாங்க விற்க முடியும்.

>>>பிணையமாக வைத்து கடன் பெறும் வசதி.

**புறத்தோற்றமற்ற பத்திரக் கணக்கை எப்படி தொடங்க வேண்டும்?**

1.விண்ணப்பப் படிவத்துடன்,
பாஸ்போர்ட் அளவு புகைப்படம்
அடையாள சான்று நகல்
முகவரி சான்று நகல்இணைக்க வேண்டும்.

2.நிரந்தர கணக்கு எண் (PAN) நகல்இணைக்க
வேண்டும்.

3. சரிபார்ப்பிற்கு அசல் சான்றுகளை சமர்ப்பித்தல். 4.விதிகள் , ஒழுங்கு விதிகளின் உடன்படிக்கை சார்ந்தவைகளை வாடிக்கையாளர் வழங்குதல்.

5.அமைப்பின் பிரதிநிதியால் ஆவணங்கள் சரிபார்ப்பு.

6.பின் வாடிக்கையாளர்களுக்கு ஒரு கணக்கு எண் / இணையதள முகவரி வழங்கப்படும்.

7.இக்கணக்கு உள்ளோர் ஆண்டு பரிவர்த்தனை கட்டணம் செலுத்த வேண்டும்.

8.குறைந்தபட்ச விருப்பு தேவை இல்லை.

**வலுவூட்டல்**

மாணவர்கள் கீழ்கண்ட விவரங்களை அறிந்து கொள்ள செய்தல் .

**(அ) அடையாள அட்டைச் சான்றுகள்:**

நிரந்தர கணக்கு எண் அட்டை, வாக்காளர் அட்டை, ஓட்டுனர் உரிமம், வருமான வரி படிவங்கள், மின் கட்டண ரசீது, தொலைபேசி கட்டண ரசீது,சட்ட ரீதியான ஒழுங்குமுறை ஆவணங்கள், தொழில் அமைப்புகள் வழங்கிய புகைப்படம் ஒட்டிய அடையாள சான்றிதழ்கள், மத்திய மற்றும் மாநில அரசுகளின் துறைகள் வழங்கிய புகைப்படம் ஒட்டிய அடையாள சான்றிதழ்கள்.

**(ஆ)முகவரி சான்று ஆதாரம்:**

குடும்ப அட்டை, கடவு சீட்டு, வாக்காளர் அடையாள அட்டை, வங்கி செல் புத்தகம், மின் கட்டண ரசீது, நிரந்தர கணக்கு எண் அட்டை,ஓட்டுனர் உரிமம், மத்திய மற்றும் மாநில அரசுகளின் துறைகள் வழங்கிய முகவரி சான்று, தொழில்முறை அமைப்புகள் வழங்கிய முகவரி சான்று.

Downloaded From www.nagaicollege.com

www.Padasalai.Net www.CBSEtips.in

**மதிப்பீடு**

**எளிய சிந்தனை வினாக்கள்( LOT)**

1.செபி தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு...............

2.செபியின் தலைமையகம் ...........

3.அடையாள ஆதாரங்கள் நான்கும், முகவரி சான்று ஆதாரங்கள் நான்கும் தருக

4.செபியின் இரண்டு நோக்கங்களை கூறுக

**நடுத்தர சிந்தனை வினாக்கள் (MOT)**

1.கூட்டு முதலீட்டு திட்டங்களின் செயல்பாட்டை பதிவு செய்தல் மற்றும் கட்டுப்படுத்துதல்............ எனப்படுகிறது.

2.ஒவ்வொரு பங்குச் சந்தையின் ஆட்சி குழுவில்............... உறுப்பினர்களை நியமிக்கும் பொருட்டு நிதி அமைச்சகம் செபியிடம் அதிகாரம் அளிக்கிறது.

3.செபி பற்றிய சிறு குறிப்பு தருக

4.புறத்தோற்றமற்ற பத்திரங்கள் என்றால் என்ன?

**உயர் சிந்தனை வினாக்கள் (HOT)**

1. தேசிய பங்கு சந்தையில் புறத்தோற்றமற்ற பத்திர வர்த்தகம் தொடங்கிய ஆண்டு........... ஆகும்.

2.பொருத்துக

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| I | இந்திய பத்திர மற்றும் மாற்றங்கள் வாரியம | 1 | பங்கு சந்தைகளை ஒழுங்குபடுத்துதல் |
| Ii | செபி | 2 | தோற்றுவிப்பாளர்கள் |
| Iii | முதல் நோக்கம் | 3 | மும்பை |
| Iv | உள்வழி வியாபாரம் | 4 | 1988 |

3.செபி கட்டமைப்பு வரைக

4.செபியின் பணிகளை கூறுக

5.செபியின் அதிகாரங்களை தருக

**செயல்பாடு**

* முதலீடாளர்களின் நலன்களை பாதுகாக்க செபி மேற்கொண்ட நடவடிக்கைகளின் தகவல்களை சேகரிக்க சொல்லுதல்.

* செபியின் செயல்பாடுகள் பற்றி நாளேடுகளில் வரும் செய்திகளை சேகரித்து வரச் சொல்லுதல்.

* செபி --பொருள் தோற்றம் கட்டமைப்பு ஒரு குழுவாகவும் , செபி --பணிகள் அதிகாரங்கள் ஒரு குழுவாகவும், புறத்தோற்றமற்ற பத்திரங்கள்-- ஒரு குழுவாகவும், மாணவர்களை குழுவாக பிரித்து கருத்துகளை பரிமாற வைத்தல்.

**தொடர் பணி**

*செபி பற்றிய கருத்துக்களை ஆலோசகர் ஒருவரை அழைத்துப் பேச வைத்தல. *செபியின் இணைய தள முகவரி (www.sebi.gov.in )மூலம் தகவல்களை அறிதல் மற்றும் மின்னஞ்சல் முகவரி ( investorcomplaints@sebi.gov.in )மூலம் புகார்களை சமர்ப்பித்தல் உதவியைப் பெற மின்னஞ்சல் முகவரி ( asksebi@sebi.gov.in ) போன்றவற்றை தெரியப்படுத்துதல்

* பாடநோட்டில் வினா விடை பகுதிகளை எழுத வைத்தல்.

* வகுப்பு தேர்வு வைப்பதன் மூலம் நன்கு புரிந்து படிக்க வைத்தல்...

Downloaded From www.nagaicollege.com

வகுப்பு:12 Prepared by: BALAJI. B
பாடம்: வணிகவியல் GHSS, PARANTHUR, KANCHIPURAM(DT)
**தேதி ஆகஸ்ட் முதல் வாரம்** CELL:9842558987

**தலைப்பு: 9.மனிதவளமேம்பாட்டின்அடிப்படைகள்**

**கற்றல்நோக்கங்கள் :**

- இந்தஅத்தியாயத்தைக்கற்றபின்மாணவர்கள்,
- ❖ மனிதவளத்தின்பொருள்மற்றும்வரைவிலக்கணம்
- ❖ மனிதவளத்தின்சிறப்பியல்புகள்
- ❖ மனிதவளத்தின் முக்கியத்துவம்
- ❖ மனிதவள மேலாண்மையின் பொருள் மற்றும் வரைவிலக்கணம்
- ❖ மனிதவளமேலாண்மையின்அம்சங்கள்
- ❖ மனிதவளமேலாண்மையின்முக்கியத்துவம்
- ❖ மனிதவளமேலாண்மையின்பணிகள்

ஆகியவற்றை புரிந்து கொள்ள இயலும்.

**கற்றல்விளைவுகள் :**

- ❖ மனிதவளத்தின் மூலமாக மட்டுமே மற்ற அனைத்து வளங்களும் திறம்பட பயன்படுத்தப்படுகின்றன என்பதை புரிந்து கொள்ளமுடியும்.
- ❖ மனிதவளமானது பிற அனைத்து உற்பத்தி காரணிகளையும் நிர்வகிக்கிறது என்பதை புரிந்து கொள்ளமுடியும்
- ❖ மாற்றம் என்பது எந்த அமைப்பிலும் நிலையானது மற்றும் இந்த மாற்றத்தை நிறுவனத்தில் திறன்பட அறிமுகப்படுத்த மனிதவள மேலாண்மை ஒரு முகவராக செயல்பட வேண்டும் என்பதை புரிந்து கொள்ள முடியும்.
- ❖ மனிதவள மேலாண்மையின் மூலமாக நிறுவனத்தில் எந்த நேரத்திலும் பணியாளர்கள் பற்றாக்குறை அல்லது உபரி ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ள முடியும் என்பதை புரிந்து கொள்ளமுடியும்.
- ❖ பணியாளர் திறன் மற்றும் அறிவுமேம்பாடு செயல்பாடுகளை நிர்வகிப்பதில் மனிதவள மேலாண்மையின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது என்பதை புரிந்து கொள்ள முடியும்.
- ❖ ஒரு நிறுவனத்தில் உள்ள மனிதவளத்தை சிறந்த முறையில் பயன்படுத்துவதன் மூலம் அந்நிறுவனத்தின் குறிக்கோள்களை அடைவது சாத்தியமாகிறது என்பதை புரிந்து கொள்ள முடியும்.

**கற்றல்கற்பித்தல்உபகரணங்கள்:**

- ❖ PPT, Videos, QR codes,திருக்குறள், பாடநூல்

**முன்னறிவு :**

- ❖ மேலாண்மைமற்றும்திட்டமிடுதல்பற்றிநினைவுகூறுதல்

**பாடஅறிமுகம்:**

- ❖ வளர்ந்து வரும் உலக வர்த்தகத்தின் தேவை ,தனித்திறன் கொண்ட தொழிலாளர்களை சார்ந்துஇருக்கிறது.
- ❖ மனித வளத்தின் மூலம் மட்டுமே ,ஒரு நிறுவனத்தில் உள்ள மற்ற அனைத்து வளங்களையும் ஒருங்கிணைத்து, செயல்திறன்மிக்கமற்றும்ஆற்றல்வாய்ந்தஒருநிறுவனத்தைஏற்படுத்தி வழி நடத்திச் செல்ல முடியும்.

Downloaded From www.nagaicollege.com

**கற்றல்கற்பித்தல்செயல்பாடு:**

**ஆசிரியர்செயல்பாடு:**

- மனிதவளத்தின் பொருள் மற்றும் வரைவிலக்கணம்
- ஒரு நிறுவனத்தின் மனிதவளமாக கருதப்படும் பணியாளர்களே, அந்நிறுவனத்தின் வெற்றிக்கும் அதன் நீடித்த வாழ்விற்கும் இன்றிமையாத காரணியாக விளங்குகின்றனர்.
- பீட்டர்.எப்.ட்ரக்கர் அவர்களின் கூற்றின்படி "மனிதன் அவனுக்கு கிடைக்கும் எல்லா வளங்களையும் கொண்டு வளர்ச்சி மற்றும் மேம்பாடு அடைய முடியும்".
- மனித வளத்தை நிர்வகிக்கும் மேலாண்மையின் கிளையே, மனிதவள மேலாண்மை என அழைக்கப்படுகிறது.மனிதவளத்தின்முக்கியத்துவம்
- மனிதவளத்தின்சிறப்பியல்புகள்
- மனித வள மேலாண்மை என்பது, ஒரு நிறுவனத்தில் ஆட்களை பணியமர்த்தல், ஊக்குவித்தல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பான மேலாண்மை பணியை செய்வதாகும்.
- ஈ.எஃப்.எல். ப்ரெச் அவர்களின் வார்த்தைகளில் மனிதவள மேலாண்மை என்பது,
- "நிர்வாக செயல்பாட்டின் ஒரு பகுதியாகும். மேலும் அவை ஒரு நிறுவனத்தின் மனிதக் கூறுகளை முதன்மையாக கருத்தில் கொண்டுள்ளது".
- மனிதவளமேலாண்மையின் முக்கியத்துவம்
- மனிதவளமேலாண்மையின்பணிகள்
- மேற்கண்டவைகளுக்குவிளக்கமாகவிளக்கம்அளித்தல்.

**மாணவர்செயல்பாடு:**

❖ மாணவர்களை பாடப்புத்தகத்தை படிக்கச் சொல்லி புதிய வார்த்தைகளை அடிக்கோடு இடச்செய்தல் ,கலைச்சொற்களை படிக்கச் சொல்லுதல்.

**வலுவூட்டல்** :

❖ புதிய மற்றும் கடினமான கருத்துக்களை VIDEOS, QR CODE SCAN செய்து விளக்கி கூறுதல்

**மதிப்பீடுசெய்தல்** :

எளிய சிந்தனை வினாக்கள் :1) மனிதவளம் என்பது ஒரு ____________ சொத்து.

2) மனித வள மேலாண்மை என்பது ______ மற்றும் _____ ஆகும்

**நடுத்தரசிந்தனைவினாக்கள்** : 1) மனிதவளங்களின் இயல்புகள் யாவை?

2) மனிதவள மேலாண்மை என்றால் என்ன?

**உயர்சிந்தனைவினாக்கள்** : 1) மனிதவள மேலாண்மையின் முக்கியத்துவத்தை விளக்குக

2) மனிதவள மேலாண்மையை முடிவுகளால் மட்டுமே அளவிட முடியும் ஏன்?

**மாணவர்கள்செயல்பாடு** :

❖ மனிதவளம் ,மனிதவளமேலாண்மை – மாணவர்களைஇருஅணிகளாகப்பிரித்துஉரையாடச்செய்தல்.

**தொடர்பணி** :

❖ மனிதவள திட்டமிடல் அட்டவணை தயாரித்து ஒப்படைக்கச் செய்தல்
❖ மனிதவளத்தின் தனிப்பட்ட அம்சங்களை எழுதவைத்தல்

Downloaded From www.nagaicollege.com

Prepared by: T. NAGA RANI.
GBHSS, PERAIYUR Boys., MADURAI (DT)
CELL: 9486507757

**வகுப்பு:**12
**பாடம்:** வணிகவியல்
**தேதி: ஆகஸ்ட் 2 ஆம் வாரம்-**
**தலைப்பு:** 10, ஆட்சேர்ப்பு முறைகள்

## கற்றல் நோக்கங்கள்:

- ஆட்சேர்பின் பொருள் மற்றும் வரைவிலக்கணம்.
- ஆட்சேர்பின் செயல்முறை மற்றும் வழிமுறைகள்
- ஆட் சேர்ப்பில் சமீபகால போக்குகள்.

## கற்றல் விளைவுகள்:

ஆர் சேர்ப்பின் பொருள் மற்றும் வரைவிலக்கணத்தை பற்றி தெரிந்து கொள்கின்றனர்.ஆட்சேர்ப்பு முறையில் உள்ள படிநிலைகள் மற்றும் பல்வேறு முறைகளைப் பற்றி தெரிந்து கொள்கின்றனர்.ஆட்சியர்ப்பில் சமீபகால போக்குகளை பற்றி புரிந்து கொள்கின்றனர்.

## கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்:

ஆட்சேர்ப்பு குறித்த விளம்பரங்கள், வீடியோ.

முன்னறிவு :

ஏதேனும் நிறுவனத்தில் பணியாற்றும் குடும்ப உறுப்பினர்கள் எவ்வாறு பணியில் சேர்ந்தனர் என வினவுதல்.

ஆட்சேர்ப்பு குறித்த விளம்பரங்கள் பற்றி கூறுதல் (TRB, TNPSC)

பாட அறிமுகம்:

ஒரு பணியினை செய்து முடிக்க இன்றியமையாதது மனித வளம் அந்த மனித வளத்தினை தேர்ந்தெடுக்கும் முறையை ஆட்சேர்ப்பு. இயந்திரத்தை இயக்குவதற்கும் ஆட்கள் தேவை என்று அறிமுகம் செய்தல்.

பாட வளர்ச்சி:

ஒரு நிறுவனத்தின் பல்வேறு பணியிடங்களுக்கு பொருத்தமான நபர்களை தேர்ந்தெடுப்பது ஆட்சேர்ப்பு.

கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள்:

- ஆட் சேர்ப்பிற்க்கான காரணங்கள் மற்றும் படிநிலைகள்.

அகவளங்கள்:

1. இடமாற்றம்
2. மேம்படுத்துதல்
3. பதவி உயர்வு
4. பதவி இறக்கம்
5. பழைய ஊழியர்களின் பரிந்துரை
6. வேலை சுழற்சி
7. தக்க வைத்தல்
8. ஓய்வு பெற்ற ஊழியர்கள்

Downloaded From www.nagaicollege.com

9. சார்ந்தவர்கள்
10. முந்தைய விண்ணப்பதாரர்கள்
11. கையகப்படுத்துதல் மற்றும் ஒன்றிணைப்புகள்.

புறவளங்கள்:

- நேரடி வளங்கள்.
  1. விளம்பரங்கள்
  2. கோரப்படாத விண்ணப்பதாரர்கள்
  3. நேர்முகத் தேர்வு
  4. வளாகத் தேர்வு
  5. தொழிற்சாலை வாயிலில் ஆட்சேர்ப்பு
  6. போட்டி நிறுவனங்கள்
  7. இணைய வழி ஆட்சேர்ப்பு

மறைமுக வளங்கள்:

1. பணியாளர் பரிந்துரை
2. அரசு வேலை வாய்ப்பு அலுவலகங்கள்
3. தனியார் வேலை வாய்ப்பு முகவர்கள்
4. வேலைவாய்ப்பு ஆலோசனை மையங்கள்
5. தொழில்முறை சங்கங்கள்
6. பதிலாயனுப்புதல்
7. வாய் வார்த்தை
8. பணியாளர் ஒப்பந்ததாரர்கள்
9. வேலை வாய்ப்பு இணையதளங்கள்

மாணவர் செயல்பாடு:

மாணவர்களை பாட புத்தகத்தை படிக்க செய்து புதிய கருத்துக்களை பற்றி வினவு செய்தல்.

வலுவூட்டல்:

பாடம் தொடர்புடைய வீடியோ காண்பித்தல்.

மதிப்பீடு:

எளிய சிந்தனை:

விளம்பரம் என்பது ஒரு......... ஆட்சேர்ப்பு வளமாகும்.

நடுத்தர சிந்தனை:

பணி மாற்றம் என்பது ஒரு............. ஆட்சேர்ப்பு வளமாகும்.

உயர் சிந்தனை:

ஆட்சேர்ப்பு முறையில் பணியாளர்களைவேட்டையாடுதல் முறை எப்பொழுது கையாளப்படும்.

குறைதீர்க்க கற்றல்:

மெல்ல புரிதல் உள்ள மாணவர்களுக்கு சிறு விளக்கங்கள் மூலமாக புரியச் செய்து தேர்வுக்கு தயார் செய்தல்.

Downloaded From www.nagaicollege.com

செயல்பாடு :

மாணவர்கள் குழுவைக்கொண்டஆட்சேர்ப்பு படிநிலைகளை விளக்கிக் கூறச் செய்தல்.

தொடர் பணி:

சமீபத்தில் ஆட்சேர்ப்பு செய்த நிறுவனத்தின் ஆட்சேர்ப்பு முறையினை சேகரித்து வர செய்தல் பாடத்தில் உள்ள வினா விடைகளை படிக்கச் செய்து தேர்வுகளை நடத்துதல்.

---

**வகுப்பு:12**

**பாடம்:** வணிகவியல்

**தேதி** : **ஆகஸ்ட் 3 ஆம் வாரம்-**

**தலைப்பு: 11,** பணியாளர் தேர்ந்தெடுத்தல்

Prepared by: SRIVIDYA
GHSS Kondayapatti, Madurai(dt)
CELL: 9843778822

**<u>கற்றல் நோக்கம்</u>**:

- தேர்ந்தெடுத்தலின் பொருள் மற்றும் வரைவிலக்கணம்.
- தேர்ந்தெடுத்தல் நடைமுறைகள் தீர்மானிக்கும் காரணிகள்.
- தேர்வின் முக்கியத்துவம்.
- தேர்ந்தெடுத்தல் மற்றும் ஆள்சேர்ப்பிற்கு இடையேயான வேறுபாடுகள்.
- பணியமர்த்தல் முக்கியத்துவம்.
- பணியமர்த்தலின் கோட்பாடுகள்.

**<u>கற்றல் விளைவுகள்</u>**:

- குறிப்பிட்டு பணிக்கு சரியான நபரை தேர்வு செய்வது பற்றி அறிய இயலும்.
- தேர்வுக்கான பல்வேறு நிலைகளை அறிய இயலும்.
- பணியாளர் தேர்ந்தெடுத்தல் நடைமுறைகளை பற்றி அறிய இயலும்.
- தமிழ்நாட்டில் அரசு வேலைவாய்ப்பு முறைகளை பற்றி அறிய இயலும்.
- வெவ்வேறு துறைக்கு வெவ்வேறு பணியாளர்களை தேர்ந்தெடுக்கும் நடைமுறைகள் பற்றி அறிய இயலும்.

**<u>கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்</u>**:

Charts, PPT, videos, QR codes, online test through games

**<u>முன்னறிவு</u>** :

- ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் ஆசிரியரை தேர்வு செய்வதை பற்றி எடுத்துரைத்தல்.
- ஒரு நிறுவனத்திற்கு தேவையான பணியாளரை தேர்வு செய்வது பற்றி எடுத்துரைத்தல்.

**<u>கற்றல் கற்பித்தல் செயல்பாடு</u>** :

**<u>ஆசிரியர் செயல்பாடு</u>**:

**<u>பாட அறிமுகம்</u>**:

பணியாளர் தேர்வு முறைகளில் உள்ள நிலைகள்

Downloaded From www.nagaicollege.com

1.விண்ணப்பம் பரிசீலனை

2.நேர்காணல்

3.உடல் பரிசோதனை

4.ஒப்புதல்

5.இறுதி நிலை தேர்வு

6.பணி ஒப்பந்தம்

**திறன் சோதனை**: விண்ணப்பதாரரின் பொது அறிவு திறன் பிரச்சனைகளை தீர்க்கும் திறன் பகுத்தறிவு திறன் பற்றி சோதிக்கப்படுகிறது.

**மனோபாவச்சோதனை**: பணியாளரின் பன்முகத்திறன்களை அளவிடவும், எதிர்கால செயல்திறனை முன் கணிக்கவும் பயன்படுகிறது.

**சாதனை ஆய்வுத் தேர்வு**: இது குறிப்பிட்ட துறையில் விண்ணப்பதாரரின் அடைவுத் திறனை அளவிடும் சோதனை. எடுத்துக்காட்டு இசைப்பள்ளி மாணவரை இசைக்கச் சொல்லி கேட்டல்.

**நுண்ணறிவுத் திறன் தேர்வு**: அந்நபரின் அறிவார்ந்த திறனை சோதிப்பது.

**முடிவெடுக்கும் திறன் ஆய்வு தேர்வு** : சூழ்நிலைக்கேற்ப முடிவெடுக்கும் திறன் மற்றும் காரணப்படுத்தும் திறன்.

**நேர்காணல்** : தேர்ந்தெடுப்பவர் மற்றும் தேர்ந்தெடுக்கப்படுபவர் இருவரும் முகத்திற்கு முகம் பார்த்து அறிந்து உரையாடுவதை குறிக்கும். நேர்காணல் பல வகைப்படும்.

**மருத்துவ பரிசோதனை** : சம்பந்தப்பட்ட வேலைக்கான உடல் தகுதி பற்றி அறிதல். "மனதின் வலிமையே" "உடலின் வலிமை"

**இறுதிநிலை தேர்ந்தெடுத்தல்**: நிறுவனத்தின் விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகள் பற்றி கூறுவது, பணி சார்ந்த மேம்பாட்டிற்கான வாய்ப்புகள் மற்றும் வசதிகளை வழங்குதல் பற்றி கூறுவது, நேர்காணலில் பங்கேற்போருக்கு தங்களுக்கு ஏற்பட்ட சந்தேகங்களுக்கு தெளிவு பெறவும்.

**பணி ஒப்பந்தம்**: இறுதியாக சில ஆவணங்களில் நிறுவனமும் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பணியாளர்களும் கையொப்பம் இடுவது அவசியம்.

**பணியமர்த்தல்** :தேர்ந்தெடுக்கப்பட்ட நபருக்கு ஒரு குறிப்பிட்ட வேலையை வழங்குவதற்கான செயல்முறை.

**மாணவர் செயல்பாடு**:

மாணவர்களை பாடப்புத்தகத்தை படிக்கச் சொல்லி புதிய வார்த்தைகளை அடிக்கோடு இடச் சொல்லுதல்.கலைச்சொற்களை படிக்கச் சொல்லுதல்.

**வலுவூட்டல்** :

புதிய மற்றும் கடினமான கருத்துக்களை Video Games, QR code scanசெய்து விளக்கிக் கூறுதல்.தேர்ந்தெடுத்தல் மற்றும் ஆட்சேர்ப்பிற்கு இடையேயான வேறுபாடுகள்,பணியமர்த்தலின் கோட்பாடுகள்,பல்வகை சோதனைகள்.

Downloaded From www.nagaicollege.com

**மதிப்பீடு** :

**எளிய சிந்தனை வினாக்கள் (LOT)**

1.சரியான நபரை சரியான வேலையில் வைப்பது என்பது ..........

2.முதலில் வேலை அடுத்தது மனிதர் என்பது ஒரு.............. கோட்பாடு

**நடுத்தர சிந்தனை வினாக்கள் (MOT)**

1.நேர்காணல் என்றால் என்ன?

2.பணியமர்த்தல் என்றால் என்ன?

**உயர் சிந்தனை வினாக்கள் (HOT)**

1.பணியாளர்களை தேர்ந்தெடுப்பதற்கான முக்கியமான நேர்காணலின் வகைகளை விளக்குக?

**குறைதீர் கற்றல்** :

கருத்துக்களைப் புரிவதில் சிரமம் உள்ள மாணவர்களை அடையாளம் கண்டு பின்வரும் விளக்கம் தரப்படும்.

- தேர்ந்தெடுத்தல் - சரியான வேலைக்கு சரியான நபரை தேர்வு செய்வது.
- நேர்காணல் - இருவரும் முகத்திற்கு முகம் பார்த்து உரையாடுவது.
- பணியமர்த்தல் - ஒரு குறிப்பிட்ட வேலையை வழங்குவது.

**செயல்பாடு** :

கட்டடக்கலை நிபுணற்கு தேவையான தேர்வு முறைகள் &சட்ட ஆலோசகர்கான தேர்வு முறைகள் - மாணவர்களை இரு அணிகளாகப் பிரித்து தேர்வு முறைகளைப் பற்றிஉரையாடச் சொல்வது.

---

**வகுப்பு**:12 **Prepared by:** கி.போதும் பொண்ணு

**பாடம்**: வணிகவியல் அரசு மேல்நிலைப் பள்ளி, சுப்புலாபுரம், கல்லுப்பட்டி, மதுரை.

**தேதி** : **ஆகஸ்ட் 4 ஆம் வாரம்**- PHONE:9095739136

**தலைப்பு: 12,** பணியாளர் பயிற்சி முறை

## கற்றல் நோக்கம்:

- பணியாளர்களுக்கு நிறுவனங்களில் அளிக்கப்படும் பல்வேறு வகையான பயிற்சி முறைகளை பற்றி அறிந்து கொள்ளச் செய்தல்
- பணிவழி பயிற்சி மற்றும் பணிவழியற்ற பயிற்சி முறைகள் பற்றி தெரிந்து கொண்டு அவற்றை வேறுபடுத்தி பார்க்கும் திறனை பெறச் செய்தல்
- வேலைவாய்ப்பு பெற்றால் அங்கு அளிக்கப்படும் பயிற்சியினால் ஏற்படும் நன்மைகள் குறித்து தெரிந்து கொள்ளச் செய்தல்

## கற்றல் விளைவுகள்

I. நிறுவனங்களில் வழங்கப்படும் பல்வேறு வகையான பயிற்சி முறைகள் பற்றி அறிந்துகொண்டான்

II. இந்திய அரசாங்கம் இளைஞர்களுக்கு வழங்கப்படும் தொழில்நுட்ப பயிற்சி பற்றி தெரிந்து கொண்டான்

Downloaded From www.nagaicollege.com

III. அவனது கிராமத்திலுள்ள மகளிர்களுக்கு அரசு வழங்கிய பயிற்சியை பற்றி எடுத்து கூறினார்.

**கற்றல் கற்பித்தல் உபகரணம்:**

PPT, Youtube videos, பிரதான மந்திரம் கௌஷல் விகாஸ் யோஜனா திட்டம் சார்ந்த paper cutting.

**ஆர்வமூட்டல்:**

ஒரு நிறுவனம் சிறந்த முறையில் செயல்பட யார் அவசியம் என்ற வினாவில் முன்னறிதல் செய்தல் அதாவது முன்பு பாடத்தில் உள்ளவற்றை தொடர்புபடுத்துதல்

உனது கிராமத்தில் உள்ள மகளிர் குழுக்கள் ஏதேனும் தொழில் செய்கிறார்களா ? என்ற வினா எழுப்புவதன் மூலம் கற்க போகும் பாடத்தை பற்றி ஆர்வம் தூண்டச் செய்தல்

**பாட அறிமுகம்:**

**விளக்குதல்:**


நிறுவனங்களில் பணியாளர்களின் திறனை மேம்படுத்த அந்த நிறுவனம் மேற்கொள்ளும பயிற்சி முறை அறிமுகம் செய்தல்

**நோக்கம்:**

- பணிகளை சிறப்பாக செய்ய-பயிற்சி அவசியம்
- பயிற்சி மூலம் அறிவு, ஆற்றல்,செயல்திறன் மேம்படும்.
- பணியின் தரம் உயர்கிறது
- பணியாளரின் வளர்ச்சி மேம்பாடு
- ஊழியர்களை ஊக்கப்படுத்துதல்
- செலவு குறைப்பு

<u>பயிற்சி திட்ட வடிவத்தின் படிகள்:</u>

<u>பயிற்சி திட்ட வடிவத்தின் படிகள்:</u>




<u>**பயிற்சி முறைகள்**</u>: இரண்டு வகைகளாக பிரித்தல்:

பணிவழி பயிற்சி முறைகள் :- பணிசெய்யும் இடத்தில் வழங்குதல்

(a) பயிற்சியளிப்பு: மேலதிகாரி புதிய பணியாளுக்கு அளிக்கும் பயிற்சி

(b) வழிகாட்டுதல் : மூத்த பணியாளர்கள் அறிவு, அனுபவத்தை பகிர்ந்து கொள்ளுதல்

Downloaded From www.nagaicollege.com

(c) பணி சுழற்சி: குறித்த கால இடைவெளியில் மற்றொரு வேலைக்கு மாறுதல்

(d) தொழில் பழகுநர் பயிற்சி முறை:

மூத்த பணியாளரிடம் இருந்து வேலையின் அறிவு திறமையைக் கற்று கொள்ளுதல்

II. பணிவழியற்ற பயிற்சி முறை பயிற்சி நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் கற்றுக் கொள்ளச் செய்தல்

a) விரிவுரை முறை: பயிற்றுவிப்பாளர் கருத்து,கோட்பாடுபோன்றவை குறித்து கல்வி அறிவை பெறுதல்
b) குழு கலந்துரையாடல் முறை: குழுவாக பிரிந்து ஒரு குறிப்பிட்ட தலைப்பை பற்றி விவாதித்தல்
c) பங்கேற்று நடித்தல்: நியமிக்கப்பட்ட பத்திரத்தை ஒத்திகை இன்றி செயல்பட வேண்டும்
d) மின்னணு கற்றல் முறை : தொழில் நுட்ப முறை பயன்படுத்தி பயிற்சியினை பெறுதல்

நன்மைகள்:

| நிறுமத்திற்கு | ஊழியர்களுக்கு | வாடிக்கையாளர்க்கு |
|---|---|---|
| ஊழியரின் திறமை மூலம் அதிக உற்பத்தி மற்றும் இலாபம் | தணித்திறன் அறிவுத்திறன் மேம்பாடு | தரமான பொருள் புதுமையான பொருள் |

## மாணவர் செயல்பாடு:

- நிறுவனத்தில் உள்ள பதவியில் நடித்துக்காட்டச் செய்தல்
- இளைஞர்களின் வேலைவாய்ப்பினை அதிகரிக்க அரசு மேற்கொள்ளப்படும் பயிற்சி குறித்து விவாதிக்கச் செய்தல்

## மதிப்பீடுகள்:

- மின்னணு கற்றல் முறை என்றால் என்ன?
- பணிவழியற்ற பயிற்சி முறைகளை பட்டியலிடுக?
- பணிவழி பயிற்சி முறைக்கும் பணிவழியற்ற பயிற்சி முறைக்கும் இடையே உள்ள வேறுபாடு தருக?

---

**வகுப்பு:12**

**பாடம்: வணிகவியல்**

**தேதி செப்டம்பர் 1வது வாரம்**

**தலைப்பு: 13. சந்தை மற்றும் சந்தையிடுகையாளர்**

Prepared by: A.STEPHEN
GHSS - THIRUVEGAMPET
SIVAGANGAI DIST
CELL: 9788541001

## கற்றல் நோக்கம்:

i. சந்தை, சந்தையிடுகையாளரின் பொருள், வரைவிலக்கணம் குறித்து அறிந்து கொள்ள இயலும்.
ii. சந்தை, சந்தையிடுகையாளரின் பங்கு மற்றும் பணிகள் பற்றி தெரிந்து கொள்ள இயலும்.
iii. சந்தையின் வகைகள் பற்றி புரிந்துகொள்ள இயலும்.

I. கற்றல் விளைவுகள்: (Learning Outcomes)

i. சமூகத்தில் சந்தைப்படுத்துதல், சந்தையிடுகையாளர் குறித்த முக்கிய கருத்துக்களை அடையாளம் காணும் திறன் பெறுதல்.

Downloaded From www.nagaicollege.com

ii. சந்தையின் போக்கை அறிந்து தனது முடிவெடுக்கும் யுக்தியை பயன்படுத்தி சந்தையை மேம்படுத்தும் திறன் பெறுதல்.

iii. நுகர்வோரை மையப்படுத்தி சந்தைசார்ந்தசெய்திகளை சேகரித்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் பகுப்பாய்வு செய்யும் திறன் பெறுதல்.

**கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்:**

Related Videos, QR Code, PPT, News Paper cutting

## கருத்து (Concept)

### 1. ஆர்வமூட்டல்

பாடல் வரிகள் (மணப்பாறை மாடுகட்டி..)

" பொதியை ஏத்தி வண்டியிலே பொள்ளாச்சி

சுந்தையிலே விருதுநகர் வியாபாரிக்கு-செல்லக்கண்ணு

நீயும் வித்துப்போட்டுப் பணத்த எண்ணு

செல்லக்கண்ணு" - பாடுதல்

அ.வீட்டிற்கு தேவையான காய்கறிகள், பழங்கள் போன்றவற்றை எங்கே சென்று வாங்குகிறீர்கள்?

ஆ. கிராமத்தில் உள்ளவிவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் காய்கறிகள், பழங்களை எங்கு விற்கின்றார்கள்?

| | | |
|---|---|---|
| இ. ஆத்தூர் | - | ஆட்டுச்சந்தை |
| ஓசூர் | - | பூச்சந்தை |
| மேலப்பாளையம் | - | மாட்டுச்சந்தை |

பற்றி உங்களுக்கு தெரியுமா?

### 2. நினைவு கூர்தல்:


பாண்டியர் ஆட்சியில் பொருட்கள் விற்குமிடம் அங்காடி எனவும், பகலில் பொருட்களைவிற்குமிடம் நாளங்காடி எனவும், இரவில் பொருட்கள் விற்குமிடம் அல்லங்காடி எனவும் அழைக்கப்பட்டது.

### 3. பாட அறிமுகம் :

மார்கட்டஸ் (லத்தின் மொழி) →சந்தை (மார்கெட்) பொருட்களை வாங்க மற்றும் விற்கக்கூடிய இடம் - சந்தை

சந்தை பொருட்கள் →பொருள், சேவை, அனுபவம், நிகழ்வு, நபர்கள், இடம், உடமைகள், அமைப்பு, தகவல்

### 4. பாடவளர்ச்சி




Downloaded From www.nagaicollege.com

**சந்தையிடுகையாளர் :**

நுகர்வோருக்கான பண்டங்கள் பணிகளின் தேவைகளை அறிந்து நிறுவனம் சார்பாக சந்தையிடுபவர்.

பங்களிப்பு:

தூண்டுபவர், புதுமைபுகுத்துநர், ஒருங்கிணைப்பாளர், செயல்பாட்டாளர்.

பணிகள்:

தகவல் சேகரிப்பு, ஆராய்தல், திட்டமிடல், விலை நிர்ணயம், போக்குவரத்து, பண்டககாப்பு செய்தல், விற்பனை மேம்பாடு.

**ஆசிரியர் செயல்பாடு:**

சந்தையின் வகைகளின் பிரிவுகளை - சிறிய சீட்டுகளில் எழுதி - ஒரு அட்டை பெட்டிக்குள் வைத்து - மாணவர்கள் ஒவ்வொருவரும் ஒரு சீட்டு எடுத்து - அதில் உள்ள சந்தைப்பிரிவு - எந்த சந்தை வகையைச் சார்ந்தது என கூற ஆசிரியர்தகுந்தவிளக்கம்அளிக்க வேண்டும்.

**II. மாணவர் செயல்பாடு:**

1. மாணவர்களை குழுக்களாக பிரிந்து - சந்தை அமைப்பு மற்றும் சந்தைநடைமுறை நிகழ்வுகளை நடித்துக்காட்டச் செய்தல் (உதா. பொருட்கள் சந்தைப் பிரிவுகள்)
2. மாணவர்களை 7 குழுக்களாக பிரித்து ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு தலைப்பு கொடுத்து 2 நிமிடத்திற்குள் தங்கள் தலைப்பின் கீழ் பேச வாய்ப்பளித்தல் (உதா. பொருள்களை சந்தைப்பிரிவைத் தவிர இதர தலைப்புகள்)

**III. மதிப்பீடு:**

1. பங்கு பரிவர்த்தனை சந்தை இவ்வாறு அழைக்கப்படுகிறது _______________.
2. சந்தையில் சந்தையிடுகையாளர் முதலில் தெரிந்து கொள்ள விரும்புவது ______________.
3. பொருந்தாத ஒன்றை கூறுக.

அ) புதுமை புகுத்துபவர் ஆ) தூண்டுபவர்

இ) செயல்பாட்டாளர் ஈ) உற்பத்தியாளர்.

**IV. குறைதீர் கற்றல்:**

கற்றலில் பின்தங்கியுள்ள மாணவர்களை கண்டறிந்து அவர்களுக்கு முக்கிய பாடக்கருத்துக்களை மீள கற்பித்தல்.

**V. தொடர்பணி:**

மாணவர்கள் தங்கள் ஊரில் அல்லது ஊரின் அருகாமையில் நடக்கும் ஏதேனும் ஓர் சந்தையை உற்றுநோக்கி ஒரு பக்க அளவில் கட்டுரை சமர்பித்தல்.

---

**வகுப்பு:12** **Prepared by: SUBHASHINI K**

**பாடம்: வணிகவியல்** **GGHSS- SHOLAVANDAN, MADURAI (DT)**

**தேதி** : செப்டம்பர் 2வது வாரம் **CELL:9894600847**

**தலைப்பு: 14. சந்தையிடுகை மற்றும் சந்தையிடுகையின் கலவை**

**கற்றல் நோக்கங்கள்** :

மாணவர்களால் சந்தையியல் அறிமுகம்,சந்தையிடுகை நிலை பற்றியும், அதன்பரிணாம வளர்ச்சி பற்றியும் அறிதல்.

சந்தையிடுகையின் பொருள், நோக்கங்களை அறிதல்.

சந்தையிடுகையின் பணிகள் பற்றி அறிதல்.

சந்தையிடுகை கலவையின் பொருள்,கூறுகள் ஆகியவற்றை புரிந்துகொள்ள இயலும்.

Downloaded From www.nagaicollege.com

**கற்றல் விளைவுகள்** : ★ சந்தையிடுதல் மேலாண்மை பணிகளான திட்டமிடல், பொருள் மேம்பாடு மற்றும் வினியோகம் செய்யும் நடவடிக்கைகள் எவ்வாறு செயல்படுத்த முடியும் என அறிந்து கொள்ளுதல்.

★ சந்தையிடுகை தொடர்பான பிரச்சனைகள் மற்றும் அதற்கான தீர்வை அறிய முடியும்.

★ சந்தையிடுகையின் முடிவெடுத்தலுக்கு 4'என் முக்கியத்துவம் பற்றி அறிந்து கொள்ள முடியும்.

**கற்பித்தல் உபகரணங்கள்** : PPT, Videos, QR Codes, Online test, Diksha

**முன்னறிவு** :

முந்தைய பாடத்தில் உள்ள சந்தை,சந்தையின் வகை,சந்தையிடுகையாளர் பற்றி மீளத்திருப்புதல .பொருட்கள் அடிப்படையில் இயங்கும் ஏதேனும் இரண்டு வகை சந்தைகளை நினைவுபடுத்துதல்.

**பாட அறிமுகம்** :

மாணவர்களுக்குத் தெரிந்த அவர்கள் ஊரில் உள்ள சந்தை பற்றி கேட்டு அறிதல்.பண்ட மாற்று முறை பற்றி கேட்டு அறிதல் பணம் வந்த பிறகு பொருட்கள் எவ்வாறு பரிமாற்றம் செய்யப்படுகிறது எனக் கேட்டு அறிதல்.சந்தையின் பரிணாம வளர்ச்சி பற்றி கேட்டு அறிதல்.பொருளுக்கான விலை எவ்வாறு நிர்ணயம் செய்யப்படுகிறது எனக்கேட்டல்.

**பாடவளர்ச்சி** :

**ஆசிரியர் செயல்பாடு** :

சந்தையிடுகை என்பது சந்தையிடுகையாளர் என்ன செய்கின்றாரோ அதுவே யாகும்.


**சந்தையிடுதல்**

**பரிணாம வளர்ச்சி** :

1. பண்டமாற்றுமுறை
2. உற்பத்தி சார்ந்து
3. விற்பனை சார்ந்து
4. சந்தையிடுகை சார்ந்து
5. நுகர்வோர் சார்ந்து
6. மேலாண்மை சார்ந்து**சந்தையிடுகையின்**

**வரைவிலக்கணம், முக்கியத்துவம், நோக்கம்**

சந்தையிடுகையின் பணிகள்:-




**மாணவர் சேயல்பாடு** ★ விற்பனைக்கும், சந்தையிடுகைக்கும் உள்ள வேறுபாட்டை கண்டறியச் சொல்லுதல்

★பல்வேறு வகையான விளம்பரங்களின் தகவல்களை சேகரிக்கச் சொல்லுதல்

★கலைச் சொற்களை படிக்கச் சொல்லுதல்

Downloaded From www.nagaicollege.com

**வலுவூட்டல்** :
சந்தையியல் கருத்துகளான, என்ன விற்பனை செய்ய இயலும்,முதலில் பொருளை உற்பத்தி செய்யலாமா? சந்தையில் யார் மேம்பட்டவர் பற்றி எடுத்துக் கூறுதல்

**மதிப்பீடு** :
4P/s பற்றி விளக்கிக் கூறுதல்
(LOT):சந்தையிடுகையின் ஆரம்ப நிலை என்ன?
(MOT):சந்தையிடுகையின் பரிணாம வளர்ச்சி யாது?
(HOT): சந்தையிடுகை கலவை பற்றி நீவீர் அறிவது யாயுது?

**குறைதீர் கற்றல்** :
மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு எளிமையாக விளக்கி கூறி ஒன்று,இரண்டு மதிப்பெண் வினாக்களை படிக்க வைத்தல்
.

**தொடர்பணி** : ★மாணவர்களிடம் தமிழ்நாட்டில் உள்ள பிரபலமான சந்தைகளின் பட்டியலைத் தயாரிக்கச் சொல்லுதல்
★உன்னுடைய பொருளை சந்தையிட விரும்பினால் நீ மேற்கொள்ள வேண்டிய வசதிப் பணிகளை எழுதச் சொல்லுதல்.

---

**வகுப்பு:12** **Prepared by : GAYATHRI M**
**பாடம்: வணிகவியல்** **GGHSS- THIRUMANGALAM, MADURAI (DT)**
**தேதி** : **செப்டம்பர் 3வது வாரம்** **CELL:9942519029**

**தலைப்பு: 15 சந்தையிடுதல் நவீனபோக்கு**

**கற்றல் நோக்கங்கள்** :
மின்னணுவணிகம் நோக்கம் மற்றும் வரைவிலக்கணம்,
சந்தையிடுகை வரைவிலக்கணம் நோக்கம், நன்மைகள் மற்றும் குறைபாடுகள்.
பசுமை, சமூக மற்றும் பதுங்கியிருந்து சந்தைப்படுத்தல் முறை ஆகியவற்றைப் புரிந்துக் கொள்ள இயலும்.

**கற்றல் விளைவுகள்** :

24x7 சந்தைவசதியைமின் சந்தைப்படுத்தல் அளிக்கிறது என்பதனைபுரிந்து கொண்டனர்.மின் சந்தைப்படுத்துதலுக்கு வணிகதளம் அமைக்கவும்,பராமரிக்கவும்,மென்பொருள்,வலைத்தள வடிவமைப்பு ஆகியவற்றிற்கு செலவு அதிகம் என்பதனை புரிந்து கொண்டனர்.வரையறுக்கப்பட்ட வாடிக்கையாளரின் தேவைகளைபூர்த்தி செய்யும் சந்தையைபற்றிபுரிந்துகொண்டனர்.நிறுவனம் நிர்ணயிக்கும் விநியோகஸ்தர் அவருக்குகீழ் பல விநியோகஸ்தர்களை அமர்த்தி விற்பனையை பெருக்கும் முறையை பற்றி புரிந்துகொண்டனர்.விளம்பரம் செய்துசந்தைப்படுத்தாமல் வாடிக்கையாளர் மூலமே மற்றவர்களுக்கு பரிந்துரை செய்துவிற்பனையை அதிகரிக்கும் சந்தையிடுதல் முறையைப்பற்றிபுரிந்துகொண்டனர்.

**கற்பித்தல் உபகரணங்கள்** : PPT, Videos, QR Codes,

**முன்னறிவு** :
பாடம் 14ல் சந்தையிடுகை,சந்தைகயிடுகைகலவைபற்றி படித்தவற்றை மீளக்கூறல்

**பாடஅறிமுகம்** :
Flipkart, Amazon போன்றவலைத்தளங்கள் வாயிலாகமாணவர்கள் பொருட்கள் வாங்குவதை கூறி மின் சந்தையிடுதலை அறிமுகபடுத்தல்

**பாடவளர்ச்சி:**
பண்டங்கள் மற்றும் சேவைகள் பரிவர்தனையில் தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளும் மின்னணுவலைதளத்தின் வழியாக மேற்கொள்ளுவதைமின்னணுவணிகம் ஆ

Downloaded From www.nagaicollege.com

மின் சந்தைப்படுத்துதலின் நன்மைகள் - தீமைகள்.

**வலைத்தள சந்தையிடல்**:
வலை தளங்களில் பொருள்களின் அட்டைப் படங்களை காட்சிப்படுத்தி, பலவகையான சலுகைகளை அளித்து வாடிக்கையாளரை கவர்ந்து பொருட்களை வாங்க தூண்டும் முறை.
பசுமைசந்தைப்படுத்தல் : சுற்றுப்புற சூழலுக்கு பாதிப்பில்லாத சந்தைப்படுதல்.

**சமூக சந்தைப்படுத்தல்:**
சமூகத்திற்கு தீங்கு விளைவிக்கும் காரணிகளை நீக்கி தரமான வாழ்க்கைதரத்தை உயர்த்துகிறது.

**தனியிடச்சந்தை**:
வரையறுக்கப்பட்ட வாடிக்கையாளரின் தேவையை பூர்த்தி செய்யும் சந்தை.

**வைரல் சந்தையிடுல்** :
ஒரு நபர் பொருள் பற்றிய விவரங்களை மற்றவருக்கு அனுப்புவார். அச்செய்தி தொற்றுக் கிரும ி பரவுவதைப் போல் பல நபர்களுக்கு பரவி விற்பனையை அதிகரிக்கும் முறை

**பதுங்கியிருந்து சந்தையிடுதல்**:
ஒரு நிகழ்ச்சிக்கு எவ்வித நிதியுதவி செய்யாமல் மறைமுகமாக தங்கள் பொருளை விளம்பரப்படுத்தி விற்பனையை அதிகரிக்கும் முறை.

**மாணவர் செயல்பாடு** :
மாணவர்களை குழுக்களாக பிரித்து நவீன சந்தையிடுதல்கள் ஒவ்வொன்றாக எடுத்துக்காட்டுடன் விளக்க கூறுதல்.

**வலுவூட்டல்** :
நவீன சந்தையிடு கூறுகளை Videos, QR Code மூலம் விளக்கிக் கூறுதல்.

**மதிப்பீடு** :
எளிய சிந்தனை வினாக்கள் (LOT): இணையம் மூலம் பொருள் (அ) சேவைகளை விற்பனை செய்யும் முறை ஆகும்.
(MOT) : மின் சந்தையிடுதலின் நோக்கங்கள் யாவை?
(HOT) : பாரம்பரிய சந்தையிடுகை எவ்வாறு மின் சந்தையிலிருந்து வேறுபடுகிறது – விளக்குக.

**குறைதீர் கற்றல்** :
கருத்துக்களைப் புரிந்து கொள்ள சிரமம் உள்ள மாணவர்களை அடையாளம் கண்டு மீண்டும் கருத்துக்களை எளிமைப்படுத்தி புரிய வைத்தல்.

**தொடர்பணி** :
பல்வேறு வகையான நவீன சந்தையிடுதல் தொடர்பான விளம்பர படங்களை மாணவர்களை சேகரித்து வர செய்தல்.

---

**வகுப்பு:12**

**பாடம்: வணிகவியல்**

**தேதி செப்டம்பர் நான்காவது வாரம்**

**தலைப்பு:** 16 ***நுகர்வோரியல்***

**Prepared by: K. சுரேஷ்**
அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, அலங்காநல்லூர், **மதுரை**
CELL: 9486948376

Downloaded From www.nagaicollege.com

www.Padasalai.Net www.CBSEtips.in

## கற்றல் நோக்கங்கள்:

- நுகர்வோர் சுரண்டப்படுவதை பற்றி அறிந்துகொள்ளுதல்
- நுகர்வோரியல் பொருள் மற்றும் வரைவிலக்கணம் பற்றி அறிந்துகொள்ளுதல்
- நுகர்வோர் இயக்கங்களின் பரிணாம வளர்ச்சி பற்றி தெரிந்துக் கொள்ளுதல்
- நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986 பற்றி அறிந்துக் கொள்ளுதல்

## கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்:

PPT, Video lesson,QRcode,செய்தித்தாள்

## ஆர்வமூட்டல்:

முந்தைய பாடமான சந்தையிடலில் என்னென்ன பொருட்கள் சந்தையிடப்படுகின்றன சந்தையிடப்பட்ட பொருட்கள் அனைத்தையும் பயன்படுத்துகின்றோமோ என கேள்வி எழுப்பி,பொருட்களை வாங்கி பயன்படுத்துபவர்களே நுகர்வோர் என முந்தைய பாடத்தோடு தொடர்புபடுத்தி அறிமுகப்படுத்துதல்.

## பாடஅறிமுகம்:

பொருட்களை உற்பத்தியாளர் விற்பனை செய்வோர் விற்பனையாளர் அதே போன்று உற்பத்திசெய்யப்படும் பொருட்களைப் பயன்படுத்துவோர் நுகர்வோர் ஆவர்

நுகர்வோர் சுரண்டப்படுவதைப்பற்றியும் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு பற்றியும் விளக்குதல்

## பாட வளர்ச்சி:

## கற்றல் கற்பித்தல் செயல்பாடு:

## ஆசிரியர் செயல்பாடு:

முழுமையாக அல்லது பகுதியாக செலுத்தப்பட்டு மறுபயன் அடையும் வகையில் பொருட்களை அல்லது சேவைகளை வாங்கும் நபர் நுகர்வோர் என அழைக்கப்படுகிறார் என்று அறிந்து கொள்ளுதல்

நுகர்வோர் சுரண்டப்படும் வழிகள்:-

1. கலப்படம்
2. போலியான பொருட்கள்
3. அதிக விலைக்கு விற்றல்
4. செயற்கைப் பற்றாக்குறை
5. தரக்குறைவு
6. இடர்பாடு கொண்ட பொருட்கள்
7. உத்ரவாதம் மற்றும் சேவைகள்
8. தகுதியற்ற பொருட்கள்
9. பொய் விளம்பரங்கள்

- நுகர்வோரியல் பொருள் மற்றும் வரைவிலக்கணம்
- நுகர்வோரியலின் முக்கியத்துவம்
- நுகர்வோர் பாதுகாப்பு
- நுகர்வோர் சட்டங்கள்
- வாங்குவோர் ஜாக்கிரதை
- விற்போர் ஜாக்கிரதை பற்றி விளக்குதல்

Downloaded From www.nagaicollege.com

## மாணவர் செயல்பாடு:

மாணவர்களை தாங்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களில் உள்ள கலப்படத்தை பற்றி கலந்துரையாடல் செய்தல்

## வலுவூட்டல்:-

நுகர்வோர் விழிப்புணர்வு தொடர்பான ஒலி ஒளி பதிவுகளை திரையிட்டு விளக்குதல்

## மதிப்பீடு :

எளிய சிந்தனை வினாக்கள்(LOT):

- நுகர்வோரியல் எனும் சொல் தோன்றிய ஆண்டு..........
- நுகர்வோர் இயக்கத்தின் தந்தை யார்?

நடுத்தர சிந்தனை வினா(MOT):

- நுகர்வோர் என்போர் யார்?

உயர்சிந்தனை வினாக்கள்(HOT):

- நுகர்வோரியலின் முக்கியத்துவத்தை பற்றி கூறுக

## குறைதீர் கற்றல்:

கருத்துகளை புரிந்து கொள்வதில் சிரமப்படும மாணவர்களுக்கு பின்வருமாறு விளக்குதல் தேங்காய் எண்ணெய் பாமாயில் கலப்பது உடலுக்கு எவ்வாறு பாதிப்பு ஏற்படுத்துகிறது என்பதை விளக்கி கூறுதல்

ஒரு குயர் நோட்டில் 192 பக்கங்கள் இருப்பதில்லை இதனால் நீங்கள் ஏமாற்றம் அடைவதில்லையா? என நுகர்வோர் சுரண்டபடுதலை தொடர்புபடுத்தி விளக்கமளித்தல்.

## தொடர் செயல்பாடு:

மாணவர்களை இரு அணிகளாக பிரித்து நுகர்வோர் தாங்கள் சுரண்டப்படுவதிலிருந்து காத்து கொள்வது எவ்வாறு என்பதை கலந்துரையாட செய்வது செய்திதாள்களில் வரும் பொய்யான விளம்பரங்களை வகுப்பில் வாசித்து காண்பித்தல்

## கற்றல் விளைவுகள்

பொதுமக்கள் எவ்வாறு வியாபாரிகளால், உற்பத்தியாளர்களால் மற்றும் சேவை அளிப்போரால் எவ்வாறு சுரண்டப்படுகின்றனர் என்பதை தெரிந்து கொண்டனர்

பலவிதமான கலப்படங்களை பற்றி அறிந்து கொண்டனர் TV மற்றும் செய்திதாள்களில் இடம்பெறும் பொய் விளம்பரங்களை சுட்டிகாட்டுகின்றனர்.

---

**வகுப்பு**:12

**பாடம்**: வணிகவியல்

**தேதி** செப்டம்பர் 5வது வாரம்

**தலைப்பு**: 17 நுகா்வோா் பாதுகாப்பு

**Prepared by**: மு.ரமேஷ்
கஸ்தூரிபாய் பெண்கள் மேல்நிலைப் பள்ளி
காமயகவுண்டன்பட்டி தேனி மாவட்டம்
**CELL:9677665330**

## கற்றல் நோக்கம்:

- நுகா்வோாின் உாிமைகளை புாிந்து கொள்ளுதல்
- நுகா்வோாின் கடமைகளை புாிந்து கொள்ளுதல்
- நுகா்வோாின் பொறுப்புகளை புாிந்து கொள்ளுதல்

Downloaded From www.nagaicollege.com

**கற்றல் விளைவுகள்**

- தரமான பொருட்களை சரியான கடையில் வாங்கி இரசீதையும் பெற வேண்டும். இதுவே நுகர்வோரின் கடமை என உணர்தல்
- நுகர்வோரின் பொறுப்புகள் அனைத்தையும் தெரிந்து கொள்ளுதல்
- நுகர்வோரின் உரிமைகளைத் தெரிந்து கொண்டு அதனை குடும்பத்தினர், நண்பர்களுக்கு தெரிவித்தல்.

**கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்:**

Chart. Label, Cash Bill,PPT, Videos, QR Code

**முன்னறிவு:**

நுகர்வோரியல் பாடத்தில் படித்தவற்றை மீளத்திருப்புதல், நுகர்வோர் சுரண்டப்படுதல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்-1986 பற்றி நினைவு கூர்தல்.

**பாடப்பொருள் - கற்பித்தல்**

**நுகர்வோரின் கடமைகள்**

- தரமான பொருட்களை நியாயமான விலையில் வாங்குதல்
- எடையையும், அளவையும் சரிபார்த்தல்
- விவர அட்டையை கவனமாகப் படித்தல்
- தவறான மற்றும் கவர்ச்சிகரமான விளம்பரங்கள் குறித்து எச்சரிக்கையுடன் இருத்தல்.
- தவறான திட்டங்கள்
- ரொக்க இரசீதை உறுதி செய்தல்
- புகழ்மிக்க கடைகளிலிருந்து பொருட்களை வாங்குதல்
- கள்ளச் சந்தையில் பொருட்களை கொள்முதல் செய்யாமை
- தரமான பொருட்களை வாங்குதல்
- உற்பத்தியாளர்களின் அறிவுறுத்தல்களை பின்பற்றுதல்
- நுகர்வோரின் உரிமைகள் பற்றிய அறிவு

மேற்கண்ட நுகர்வோரின் **கடமைகளை** விரிவாக விளக்கிக் கூறுதல்.

விற்பனை ஒப்பந்தச் சட்டத்தை பற்றி தெரிந்து கொள்ளுதல். ஐஎஸ்ஐ அக்மார்க்,குவுமு போன்றவற்றை தெரிந்து கொள்ளுதல். 1986ம் ஆண்டு நுகர்வோர் சட்டத்தை பற்றி தெரிந்து கொள்ளுதல் உட்பட 12 விதமான நுகர்வோரின் பொறுப்புகள் பற்றி விரிவாக விளக்கிக் கூறுதல்.

**நுகர்வோரின் உரிமைகள்**

- உடல்நல பாதுகாப்பிற்கான உரிமை மற்றும் பாதுகாப்பு உரிமை.
- தகவல் பெறும் உரிமை
- தேர்ந்தெடுக்கும் உரிமை
- செவிமடுக்கும் உரிமை
- நிவாரணம் காணும் உரிமை
- நுகர்வோர் கல்வி உரிமை
- வாழ்க்கைத்தர உரிமை
- நுகர்வோர் பாதுகாப்பு உரிமை
- அடிப்படைத் தேவைகளுக்கான உரிமை

மேற்கண்ட நுகர்வோர் உரிமை பற்றி விளக்கி கூறுதல்.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி திரு.ஜான் கு கென்னடி பற்றியும், அவர் கூறிய நுகர்வோர் உரிமை பற்றியும் விவரித்து கூறுதல்.

**கற்றல் கற்பித்தல் செயல்பாடு**

- நுகர்வோர் தங்களுக்கு கடமைகளையும், பொறுப்புகளையும் சரியாக நிறைவேற்றினால்தான் உரிமைகளைப் பெற முடியும் என்பதை விவரித்து கூறுதல்

Downloaded From www.nagaicollege.com

**மாணவர் செயல்பாடு**

- பொய்யான விளம்பரங்களைக் கண்டு ஏமாறாமல் இருத்தல்
- ரொக்க இரசீதைப் பெற வேண்டியதன் தேவை
- கள்ளச்சந்தையில் பொருட்கள் வாங்கினால் ஏற்படும் விளைவுகள் போன்றவற்றை விவரித்தல்

**கலைச் சொற்கள்:**

நுகர்வோர் உரிமைகள், நுகர்வோர் கடமைகள், நுகர்வோர் பொறுப்புகள், ரொக்க இரசீது, பணக் குறிப்பாணை.

**மதிப்பீடு**

1.................... என்பவர் நவீன சந்தையின் மன்னர் ஆவார் (டுழுவு)

2.ஜான் கு கென்னடி கூறிய நுகர்வோர் உரிமைகள் யாவை (ஆழுவு)

3.நுகர்வோரின் பொறுப்புகள் யாவை (ர்ழுவு)

**செயல்பாடு**

ரொக்க இரசீது மற்றும் விவர அட்டையைக் கொண்டுவரச் செய்து அதில் உள்ள தகவல்களை அனைவரும் அறிந்து கொள்ளுமாறு கூறுதல்

**தொடர்பணி:**

செய்தித்தாளில் வெளியான நுகர்வோர் நீதிமன்ற தீர்ப்புகள் சம்பந்தமான தகவல்களை சேகரித்து வருமாறு கூறுதல்.

---

வகுப்பு:12

பாடம்: **வணிகவியல்**

**தேதி அக்டோபர் முதல் வாரம்**

தலைப்பு: **18 நுகர்வோர் குறைதீர்ப்பு**

Prepared by: P.Karthik ,
K.G.S.Matric HSS, Tiruppur district
CELL:7639464966

**கற்றல் நோக்கம்**::

**இந்த அத்தியாயத்தை கற்றபின் மாணவர்களால்**

■ **குறை தீர்ப்பு செயல்முறையை தெரிந்துகொள்ளுதல்**

■ **மூன்று அடுக்கு நுகர்வோர் நீதிமன்றங்கள்**

■ **நுகர்வோர் விழிப்புணர்வு தன்னார்வ நிறுவனங்கள்.**

**ஆகியவற்றை புரிந்துக் கொள்ள இயலும்.**

**கற்றல் விளைவுகள்:**

**விற்பனையாளரால் வியாபாரத்தில் ஏமாற்றப்படும் நுகர்வோர் தனக்குரிய நீதியை பெறும் வழிமுறைகளை பற்றி மாணாக்கர்கள் தெரிந்து கொண்டனர்**

**குறைதீர்ப்பு செயல்முறை மற்றும் தேவைகள் பற்றி தெரிந்து கொண்டனர்**

**நுகர்வோர் மன்றம் மற்றும் வகைகள் பற்றி தெரிந்து கொண்டனர்**

**மாவட்ட மன்றம், மாநில ஆணையம், தேசிய ஆணையம் ஆகியவற்றின் உள்ள உறுப்பினர்கள், அதிகார எல்லைகள், அதிகாரங்கள், பற்றி மாணாக்கர்கள் தெரிந்து கொண்டனர்.**

www.Padasalai.Net
Downloaded From www.nagaicollege.com

நுகர்வோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிறுவனங்கள் பற்றி மாணாக்கர்கள் தெரிந்து கொண்டனர்

நுகர்வோர் புகார் மீது எவ்வாறு நிவாரணம் பெறுகின்றன மற்றும் எவ்வாறு மேல்முறையீடு செய்ய முடிகிறது என்பதை பற்றி மாணாக்கர்கள் தெரிந்து கொண்டனர்.

சர்வதேச நுகர்வோர் அமைப்பு பற்றி மாணாக்கர்கள் தெரிந்து கொண்டனர்

**கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்::**

PPT, Example videos, online test

**நுழையும் முன்::**

பாடத்திற்குள் நுழையும் முன் மாணாக்கர்களிடம் நுகர்வோர் எவ்வாறு ஏமாற்றப்படுகின்றன, மேலும் அவர்களுக்கு எவ்வாறு நீதி கிடைக்கச் செய்யவேண்டும் என்பதை பற்றி மாணாக்கர்களின் சொந்த கருத்துகளை கேட்டுத்தெரிந்து கொள்ளல்.

**பாட அறிமுகம்:**

அத்தியாயம் 18 ஐ தொடங்கும் முன், அத்தியாயம் 16, மற்றும் 17ல் உள்ள நுகர்வோர் சார்ந்த கலைச் சொற்களை மாணாக்கர்களை நினைவுகூற வேண்டும்.

**ஆசிரியரின் கற்றல் கற்பித்தல் செயல்பாடு::**

- குறை தீர்ப்பு செயல்முறை மற்றும் தேவைகள்
- நுகர்வோர் மன்றங்கள் அறிமுகம் மற்றும் வகைகள்
- மாவட்ட மன்றம், உறுப்பினர்கள், அதிகார எல்லைகள், அதிகாரம், மேல்முறையீடு
- மாநில ஆணையம், உறுப்பினர்கள், அதிகார எல்லைகள், அதிகாரம், மேல்முறையீடு
- தேசிய ஆணையம் அறிமுகம், உறுப்பினர்கள், அதிகார எல்லைகள், அதிகாரம், மேல்முறையீடு
- நுகர்வோர் விழிப்புணர்வு ஏற்படுத்தும் தன்னார்வ அமைப்பு மற்றும் நுகர்வோர் விழிப்புணர்வை ஏற்படுத்தலும் மேம்படுத்தலும்
- புகார் மனு அளிப்பதற்கான செயல்முறைகள்
- நுகர்வோர் மன்றத்தில் புகார் அளிக்கும் படிநிலைகள்
- மேல்முறையீடு செய்யும் முறைகள் மற்றும் நுகர்வோர் சங்கங்களின் சர்வதேச அமைப்பு ஆகிய கருத்துகளை பற்றி கற்றல் கற்பித்தல் உபகரணங்களின் துணையுடன்விளக்கமாக பாடம் நடத்துதல்.

**மதிப்பீடு::**

1) மாநில ஆணையத்தின் தன்னடத்தை அதிகார எல்லை________ ஆகும்
2) 1986 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் _____ பிரிவின் படி மாவட்ட மன்றம் தோற்றுவிக்கப்பட்டது.
3) நுகர்வோர் மன்றத்தில் யார் புகார் கொடுக்கலாம் மற்றும் புகார்கொடுக்கும்முறைகளை விவரி

**மாணவர்கள் செயல்பாடு:**

மாணவர்கள் "மாணவர்கள் நுகர்வோர் சங்கம்"உருவாக்கலாம் அதன்மூலம் தயாரிப்புகள்மற்றும் சேவைகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படலாம். பின்வரும்நுகர்வோர் விழிப்புணர்வு பற்றி பெற்றோர்களுக்குவிழிப்புணர்வுகளை ஊக்கப்படுத்தலாம்.

1. பொருளின் அதிகபட்ச விற்பனைவிலை
2. பொருளின் காலாவதியின் தேதி
3. தயாரிப்புகளின் தரம் (ஐ.எஸ்.ஐ, ஐஎஸ்ஓ மற்றும் ஆக்மார்க், முதலியன) பற்றிய விழி

Downloaded From www.nagaicollege.com

**தொடர்பணி:**

❖ **செய்தித்தாள் மற்றும் இதர தகவல் தொழில்நுட்ப சாதனங்களின் உள்ள நுகர்வோர் விழிப்புணர்வு குறித்த செய்திகளை மாணாக்கர்களை சேகரிக்க செய்தல்.**

---

வகுப்பு:12

பாடம்: **வணிகவியல்**

**தேதி: அக்டோபர், இரண்டாம் வாரம்**

**தலைப்பு: 19 சுற்றுச்சூழல் காரணிகள்**

Prepared by: **Sr. L.** CLARA
Sirumalar Girls HSS, Madurai (dt)
CELL:8870753830

**கற்றல் நோக்கங்கள்:**
வாணிபச்சுழலின் பொருள் உட்புற மற்றும் வெளிப்புற வாணிபச்சூழலின் வேறுபாடுகள் வாணிபத்தை பாதிக்கும் கட்டுப்படுத்த மற்றும் கட்டுப்படுத்த முடியாத காரணிகள்
பொருளாதார, சமூக கலாச்சார, அரசியல் மற்றும் சட்ட, புவி சார்ந்த மற்றும் தொழில்நுட்ப காரணிகள் எவ்வாறு வாணிபத்தை பாதிக்கிறது என்பதை புரிந்து கொள்ள இயலும்.

**கற்றல் விளைவுகள்:**
இந்தியாவின் முன்னணி நிறுவனமான அப்பல்லோ மருத்துவமனையின் தொலைநோக்கு பார்வையான, 100 கோடி மக்களின் வாழ்க்கையை காப்பாற்றுவது எங்கள் குறிக்கோள் என்ற வணிகத்தை பாதிக்கும் உட்புற சூழலை புரிந்து கொள்கிறார்கள்.

T.V.S குழுமம் அதன் தோற்றத்தை கிராமப்புற போக்குவரத்து சேவைக்கு அடையாளப்படுத்தி பொதுமக்களின் நம்பிக்கை மற்றும் மதிப்பை பெற்றுள்ளது என்பதிலிருந்து வணிகத்தின் நுணுக்கமான உட்புற சூழலை புரிந்து கொள்கிறார்கள்.

2018 ஆம் ஆண்டு தூத்துக்குடியில் உள்ள ஸ்டெர்லைட் காப்பர் தொழிற்சாலை சுற்றுச்சூழல் பாதுகாப்பு குழுவினால் ஆர்ப்பாட்டங்கள் நடத்தி மூடப்பட்டுள்ளது என்பதிலிருந்து வணிபத்தின் வெளிப்புற சூழலில் பொதுமக்கள் மற்றும் அரசு எவ்வாறு பாதிப்பை ஏற்படுத்துகிறார்கள் என்பதை புரிந்து கொள்கிறார்கள்.

**கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்**
Ppt,Videos, Educational Games, Magazines, QR Codes, Online Test

**முன்னறிவு**
11 ஆம் வகுப்பு பாடத்திட்டத்தில் உள்ள கணக்குப்பதிவியல் புத்தகத்தில் முதல் பாடத்தில் அகப்பயனீட்டாளர்கள், புற பயனீட்டாளர்களை சுட்டி காட்டி வணிக நிறுவனத்தின் உட்புறத்தோடு தொடர்புடையவர்கள் அகப்பயனீட்டாளர்கள் மற்றும் வெளிப்புறத்தோடு தொடர்புடையவர்கள் புறப்பயனீட்டாளர்கள் என்றும் மாணவர்களுக்கு நினைவூட்டுதல்

**பாட அறிமுகம்**
மனிதனின் வளர்ச்சியில் அக மற்றும் புற தோற்றம் இரண்டும் சீராக இருக்கும் போது முழு மனித ஆளுமையை அடையமுடியும். ஒரு கணினியில் மென்பொருள் மற்றும் வன்பொருள் இரண்டும் சீராக இணைந்து செயல்பட்டால் தான் அதன் பயனை முழுமையாக அடைய முடியும். அதே போல் வணிகத்திற்கு இரண்டு சுற்றுச் சூழல் காரணிகள் இருக்கின்றன.
**உட்புற சூழல்:**
கொள்கைகள், திட்டங்கள், நிறுவன கட்டமைப்பு, ஊழியர்கள்
நிதி வளங்கள், பிற காரணிகள். இவற்றை கட்டுப்படுத்த நிறுவனத்தால் இயலும்.
**வெளிப்புற சூழல்:**
பொருளாதாரம், அரசியல், சமூக கலாச்சாரம். இவற்றை கட்டுப்படுத்துவது கடினம்

**பாட வளர்ச்சி**

**கற்றல் கற்பித்தல் செயல்பாடு**

**ஆசிரியர் செயல்பாடு**
வணிகச்சூழலின் பொருள் மற்றும் வரைவிலக்கணம்

VUCA, பெருநிறுவன ஆளுகை

Downloaded From www.nagaicollege.com

**உட்புற சூழல்:**
**பார்வை மற்றும் குறிக்கோள்** - எதிர்கால பார்வை மற்றும் குறிக்கோள் போன்றவற்றை பொறுத்து உட்புறத்தில் முடிவுகள் மாறும். ( Amul)
**மதிப்பு அமைப்பு** - ஒரு நிறுவனத்தின் மதிப்பை பொறுத்து அதன் வெற்றி அமையும்
**மேலாண்மை அமைப்பு** - திறமையான மேலாண்மையினால் ஒரு நிறுவனமானது பல சாதனைகனை படைக்க முடியும்
**மனித வளம்** - நிறுவனத்தின் வெற்றிக்கு மிக தேவையானது திறமையான மற்றும் தரமான ஊழியர்கள்
**உட்புற அதிகார உறவுகள்** - நிறுவனத்தை நிர்வகிக்கும் அதிகாரிகள் ஊழியர்கள் மற்றும் பங்குதாரர்கள்
**பிற காரணிகள்** - ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி

**வெளிப்புற சூழல்:**
1. **நுண்ணிய சூழல் ( பணிச்சூழல்)**
**நிதி அளிப்பவர்கள்** - இவர்கள் வணிகத்திற்கு ஓர் இரத்த ஓட்டம் போன்றவர்கள்
**சரக்கு விற்பனையாளர்கள்** ஒருவரிடமிருந்தே சரக்குகளை வாங்குவதை தவிர்த்து பல குழுக்களிடமிருந்து பொருள்களை வாங்க வேண்டும்.
**சந்தையிடுகை இடைநிலையர்கள்:**
மொத்த விற்பனையாளர்கள் சில்லறை விற்பனையாளர்கள் முகவர்கள்
**பொதுமக்கள்:** வணிகத்தின் மையப்புள்ளியே பொதுமக்கள் தான் (ஊடகக்குழு, குடிமக்கள் குழு, உள்ளுர் பொதுமக்கள் )
**வாடிக்கையாளர்கள்:** வியாபாரத்தின் மன்னர்களாக கருதப்படுகிறார்கள் இவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதே வியாபாரத்தின் நோக்கம்.
**போட்டியாளர்கள்:**
நிறுவனங்கள் புதிய யுக்திகளை கையாண்டு சந்தையில் தங்களது இடத்தை தக்க வைத்து கொள்ள வேண்டும்.

**மாணவர் செயல்பாடு**
மாணவர்களை பாடப்புத்தகத்தை படிக்கச் சொல்லி புதிய வார்த்தைகளை அடிக்கோடு இடச் சொல்லுதல் மற்றும் படிக்கச் சொல்லுதல

**வலுவூட்டல்**
புதிய மற்றும் கடினமான கருத்துக்களை Video Games QR Code Scan செய்து விளக்கி கூறுதல் ( வணிகத்தின் எதிர்காலச்சூழல் ஏற்ற இறக்கம், நிச்சயமற்ற தன்மை, சிக்கலான தன்மை மற்றும் தெளிவற்ற தன்மை)

**மதிப்பீடு**
**எளிய சிந்தனை வினாக்கள் ( LOT)**
1) VUCA ________,________,________,________
2) GST ___________________________
**நடுத்தர சிந்தனை வினாக்கள் ( MOT)**
3) மாற்றி அமைக்கக் கூடிய அகச் சூழ்நிலைக்கு காரணம் ________________
4) பெருநிறுவன ஆளுகை பொருள் என்ன?
**உயர் சிந்தனை வினாக்கள்( HOT)**
5) வியாபார சூழலை அலசி ஆய்வது எந்த விதத்தில் தொழிலுக்கு உதவும்?
6) வியாபாரத்தின் பரந்த சூழலின் பங்கு பற்றி விவரி.

**குறைதீர் கற்றல்**
கருத்துக்களை புரிவதில் சிரமம் உள்ள மாணவர்களை அடையாளம் கண்டு தேர்வுக்கு எளிய முறையில் தயாரித்தல்

**செயல்பாடு**
மாணவர்களை இரு அணிகளாக பிரித்து விவாத மேடை பயிற்சி உதவியுடன் உட்புற மற்றும் வெளிப்புற காரணிகளால் ஏற்படும் பிரச்சனைகளையும் அதை தீர்க்கும் வழிமுறைகளையும் எடுத்துக்காட்டுடன் விவாதம் செய்யச் சொல்லுதல

**தொடர்பணி**
பல நிறுவனத்தின் எடுத்துக்காட்டான அப்பல்லோ, அமுல் போன்ற நிறுவனங்களின் வளர்ச்சி, தளர்ச்சியை செய்தித்தாளின் மூலம் அடையாளம் கண்டு ALBUM தயாரிக்கச் செய்தல்.

---

வகுப்பு:12
பாடம்: **வணிகவியல்**
**தேதி: அக்டோபர்,** 3வது வாரம்

Prepared by: ANANDAN R
The Madras Progressive Union Hss, Chennai (dt)
CELL:9150077069

**தலைப்பு: 20 தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல்**

Downloaded From www.nagaicollege.com

**கற்றல் நோக்கம்:**

தாராளமயமாக்களின் பொருள், நன்மைகள் & தீமைகளை அறிந்து கொள்ளுதல் மற்றும் தாராளமயத்தின் தக்கத்தினை புரிந்து கொள்ளுதல்

தனியார்மயமாக்களின் பொருள், நன்மைகள் & தீமைகளை அறிந்து கொள்ளுதல் மற்றும் தனியார்மயத்தின் தக்கத்தினை புரிந்து கொள்ளுதல்

உலகமயமாக்களின் பொருள், நன்மைகள் & தீமைகளை அறிந்து கொள்ளுதல் மற்றும் உலகமயத்தின் தக்கத்தினை புரிந்து கொள்ளுதல்

**கற்றல் விளைவுகள்:**

<u>மாணவர்கள்</u>

புதிய பொருளாதாரக் கொள்கையினால் இந்தியாவில் உருவாகும் வேலைவாய்புகள் பற்றிய அறிவு

*நமது நாட்டின் மனித வளங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது மற்றும் நமது மனித உழைப்பின் ஊதியம்.*

*நமது நாட்டின் இயற்கை வளங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களால் எவ்வாறு சூறையாடப்படுகிறது.*

*ஒரு அரசு முற்றுரிமை நிறுவனம் தாராளமாயக்கத்தல் போட்டி ஏற்பட்டு நாடு பொருளாதார முன்னேற்றப் பாதையில் செல்கிறது என்பதை தெரிந்து கொள்ளப்படும்.*

*ஒரு அரசு நிறுவனம் எவ்வாறு தனியார் நிறவனமாக மாற்றப்படுகிறது மற்றம் அவ்வாறு மாற்றப்படுவதன் நோக்கத்தினை அறிதல்.*

*உலகமயமாக்கத்தின் காரணமாக எவ்வாறு இறக்குமதி மற்றம் ஏற்றுமதி கொள்கைகள் வகுக்கப்படுகின்றன.*

*உலக வர்த்தாக மையத்தின் பங்களிப்பு* **(WTO), IMF** *மற்றும்* **NEP** *ஆகியவற்றின் செயல்பாடுகளை தெரிந்து கொள்ளுதல்.*

***கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்:***

Youtube Videos, New Paper Cuttings, QR Codes,

**முன்னறிவு:**

11 ஆம் வகுப்பு வணிகவியல் பாடத்தில் அரசு நிறுமம் ஏன், எதற்கு மற்றும் எவ்வாறு தொடங்கப்பட்டது குறித்த மீளாய்வு செய்தல்

**கற்றல் கற்பித்தல் செயல்பாடு:**

**பாட அறிமுகம்:**

<u>**ஆசிரியர் செயல்பாடு:**</u>

BSNL நிறுவனம் எவ்வாறு தனியார் மயமாக்கப்பட்டது.முற்றுரிமை LIC காப்பீடு நிறுவனத்திற்க்கு போட்டியாக உருவாக்கப்பட்ட வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் உள்நாட்டு தனியார் நிறுவனங்களை பட்டியலிடுதல்

MNC நிறுவனங்களின் பட்டியல் மற்றும் அவை எந்தெந்த துறைகளில் ஈடுபடுகின்றன என்பதை விளக்குதல்

தற்பொழுது Air India நிறுவனம் Tata குழுமத்திடம் விற்கப்பட்ட நிலை குறித்து எடுத்துரைத்தல்

பன்னாட்டு பண நிதியம் (International Monetary Fund) மறு சீரமைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான சர்வதேச வங்கி (International Bank for Reconstruction and Development) ன் உடன்படிக்கையின் படி உலக வர்த்தக மையம் (World Trade Organisation) உருவாக்கப்பட்டதன் விளைவாக இந்தியாவில் 1991 ஆம் ஆண்டு புதிய பொருளாதா கொள்கை (New Economic Policy) உருவாக்கப்பட்டதன் விளைவாக உருவானதே LPG.

பாடத்தின் உள்ளடக்கம்:

புதிய பொருளாதார கொள்கையின் கோணங்கள் (Dimension of New Economic Policy) - LPG

1.தாராளமயமாக்கல் - Liberlisation

2.தனியார்மயமாக்கல் - Privatization

Downloaded From www.nagaicollege.com

3.உலகமயமாக்கல் – Globalization




ஆர்தர் டங்கன் அறிக்கை (1932-2005)யின் படி உருவனது

LPG யினை செயல்படுத்துவதற்கான காரணங்கள்

அரசினுடைய செலவு அதனுடைய வருமானத்தைவிட மிதமிஞ்சி சென்று அரசினை கடன் சுமைக்கு உள்ளாக்கியது வளங்களை திறன் குறைந்த நிலையில் பயன்படுத்தியமை உள்நாட்டு தொழில்களை அதிகமா பாதுகாத்தது தொழில் நிறுவனத்தையும் மற்றும் பொருளாதாரத்தையும் தவறாக நிர்வகித்தது.

பொதுத்துறை நிறுவனங்களின் நட்டம் பெருகிகொண்ட சென்றதன் காரணமாக. வெளிநாட்டிலிருந்து அதிக அளவு கடன் பெற்றது. அன்னிய செலவாணி இருப்பு குறைவானது. தொழில் நுட்ப வளர்ச்சி குன்றிய நிலை.

1.தாராளமயமாக்கல் - Liberlisation

ஒரு நாட்டின் வணிக நடைமுறையில் உள்ள சட்ட திட்டங்களை அல்லது பொருளாதாரச் சந்தையில் உள்ள அரசாங்கத்தின் கட்டுபாடுகளை தளர்த்துவது ஆகும். அதாவது வரிவிதிப்பு, ஏற்றுமதி, இறக்குமதி தீர்வைகள், மானியங்கள் மற்றும் பிறகட்டுபாடுகள் மற்றும் இரு நாடுகளுக்கிடையே உள்ள சட்டத்திட்டங்களை தளர்த்துவது.

தாராளமயமாக்கலின் படிவங்கள் - Forms of Liberlisation

தாராளமாயமான தொழில் உரிமம் (Liberlization for Industrial Licensing)

உற்பத்தி தொழில் துறையில் சுதந்திரமான விரிவாக்கம் (Freedom for Expansion and Production to Industries)

சிறு தொழில் நிறுவன முதலீடுகளின் உச்சவரம்பை அதிகரித்தல் (Incresease in te investment limit of the small industries)

அன்னிய செலாவனி மறு சீரமைப்பு (Foriiegn Exchange Reforms)

இறக்குமதி மற்றும் ஏற்றுமதியில் தாராளமயம் (Liberlization of Exports and Imports Transactions)

தாராளமயமாக்கலின் நன்மைகள் -Advantages of Liberlisation

வெளிநாட்டு முதலீடுகள் அதகரிப்பு (Increase of Foreign Investment)

அந்நியசெலாவணி இருப்பு அதிகரிப்பு (Increase the Foreign Exchange Reserve)

நுகர்வு அதிகரிப்பு (Increase in Consumption)

விலைக்கட்டுப்பாடு ( Control Over Price)

வெளிநாட்டில் பெறும் கடன்களை குறைக்கிறது (Reduction in external borrowings)

தாராளமயமாக்கலின் குறைபாடுகள் -Disvantages of Liberlisation

வேலையின்மையை அதிகரித்தல் (Increase in Unemployment)

உள்நாட்டு தொழில் அலகுகளின் இழப்பு ( Loss to Domestic Units)

அயல் நாடுகளை சார்திருத்தலை பெருக்கம்(Increased Dependence of Foreign Nation)

சமநிலையற்ற வளர்ச்சி- வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளிடையே(Unbalance Development)

தாராளமயமாக்கலின் தாக்கம் - (Impact of Liberalisation)

Downloaded From www.nagaicollege.com

உலகளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தி அடிப்படையில் இந்தியாவின் பங்களிப்பு (GDP) 1.3 மில்லியனாக வளர்ச்சியடைந்துள்ளது. உலக பொருளாதாரத்தில் 7வது இடத்தில் உள்ளது

பன்னாட்டு வணிகத்தை பெருக்கியதுடன் வெளிநாட்டு முதலீடுகளை அதிகளவில் ஈர்த்திட உதவியது

நகர் புற மற்றும் கிரம புறங்களில் பல்வேறு பொருள்களக்கான புதிய சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தியது

தொழில் விரிவாக்கத்திற்கு மிக எளிமையான முறையில் வங்கிகளில் கடன் பெற வழிவகை செய்துள்ளது

அயல் நாட்டு ஒத்துழைப்பு (Foreign Collaboration) என்ற புதிய கொள்கை உருவானது

இந்தியாவில் பல பன்னாட்டு தொழிற்சாலைகள் பல்கி பெறுகியது

2.தனியார்மயமாக்கல் - Privatisation

1956 ன் கொள்கைபடி 17 பொதுத்துறைகள் இருந்தவை 8 ஆகக் குறைக்கபட்டது, அவைகள் 1.ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள், 2.அணுசக்தி, 3.நிலக்கரி மற்றும் லிக்னெட் 4. கணிம எண்ணெய் வளங்கள், 5.சுரங்கங்கள், 6.தாதுக்கள், 7.தாமிரம் மற்றும் 8. துத்தநாகம். ஆனால் தற்பொழுது அணுசக்திதுறை, பாதுகாப்பு துறை மற்றும் ரெயில்வே பாதைதுறை மட்டுமே அரசின் முற்றுரிமை துறைகளாக செயல்பட்டு வருகின்றன.

பொதுத்துறை நிறுவனங்களின் உரிமைகளை தனியார் நிறுவனங்களுக்கு மாற்றி தரும் நிகழ்வு அல்லது கொள்கை.

அரசியல் குறுக்கீடு, நிர்வாக சீர்கேடு, நட்டத்தில் இயங்கும், உற்பத்தி திறன் குறைந்த பொதுத்துறை நிறுவனங்களை (Public Sector Units - PSU) தனியாருக்கு விற்பது அல்லது 51% மேலான பங்குகளை தனியாருக்கு விற்று நிர்வாகத்தை மாற்றுவது

i. Bharat Aluminimum Co. Ltd., (BALCO)

ii. Hindustan Zinc Ltd (HZL)

iii. Indian Petrochemicals Corporation Ltd (IPCL)

iv. Maruthi Udyog Ltd (MUl)

v. Modern Food Industries Ltd (MFIL)

vi.India Scooters Limited - போன்றவை முதன் முதலில் தனியார் மையமாக்கப்பட்ட பொதுத்துறை நிறுவனங்கள் ஆகும்

தனியார்மயமாக்கலின் படிவங்கள் - Forms of Privatisation

பொதுத்துறையினை ஒடுக்குதல் அல்லது அதன் ஆதிக்கத்தை குறைத்தல் (Contraction of PSU's)

பொதுத்துறையின் பங்குகளை தனியார் துறைக்கு விற்றல் ( Sales of Shares of Public Sector to the Private Sector)

புரிந்துணர்வு ஒப்பந்தம் ( Memorandum of Understanding) - செயல் திறன் மற்றும் உற்பத்தி திறன் மேம்படுத்துவதற்கு ஆலோசனை வழங்குதல்

பொதுத்துறை நிறுவனங்களின் முதலீடுகளை விலகிக்கொள்ளுதல் (Disinvestment in PSU's)

தனியார்மயமாக்கலின் நன்மைகள் -Advantages of Privatisation

செயல் திறனை அதிகரித்தல் (Increase in Efficiency)

தொழில் சார் மேலாண்மை (Professional Management)

போட்டியை பெருக்குதல் (Increase in Competition)

அரசின் பொருளாதார சுமையை குறைத்தல் (Reduction in Economic Burden of Government)

தனியார்மயமாக்கலின் குறைபாடுகள் -Disvantages of Privatisation

பொதுநலனில் கவனமின்மை (Lack of Welfare)

அரசியல் நிர்பந்தமின்மை (No Political Pressure)

பலவீனமான அல்லது பொருளாதார நலிவடைந்த பிரிவுகளை புறகணித்தல் ( Ignores the Weaker Sections)

தனியார்மயமாக்கலின் தாக்கம் - (Impact of Privatisation)

Downloaded From www.nagaicollege.com

நாட்டின் நிதிப்பற்றாக்குறை மற்றும் கடன் சுமைகளை குறைப்பதன் மூலம் நாட்டின் நிதி வளர்ச்சிக்கு பெரிய அளவில் பங்களிப்பு

பொதுத்துறை நிறுவனங்களின் செயல்திறனை பன் மடங்கு அதிகரித்தல்

நுகர்வோர்களுக்கு சிறந்த பொருட்களை மற்றும் சேவைகளை வழங்குதல்

வெளிநாட்டு நேரடி முதலீட்டை உருவாக்குதல் (Forieng Direct Investment - FDI)

3.உலகமயமாக்கல் - Globalisation

உலக பொருளாதாரத்துடன் ஒரு நாட்டின் பொருளாதாரம் ஒருங்கினைப்பது வளர்ந்த வெளிநாட்டு முதலீடு, வர்த்தகம், உற்பத்தி மற்றும் நிதியினை உலகின் வளரும் பிற பகுதிகளுடன் இணைப்பது ஆகும் உலக பொருளாதாரத்துக்கும் ஒரு நாட்டின் தேசீய பொருளாதாரத்துக்கும் இடையில் உள்ள வர்த்தக தடையினை நீக்குதல் மற்றும் கடினமான வர்த்தக ஒப்பந்தங்களை தளர்த்துதல் உலகமயமாக்கலின் படிவம் அல்லது உருவாக்கம் - Forms of Globalisation வெளிநாட்டு வர்த்தக கொள்கை (Foreign Trade Police) -வர்த்தக தொடர்புடைய அறிவுசார் சொத்து உரிமைகள் (TRIPS- Trade Related Intellectual Property Rights), சேவையில் வர்த்தகம் மீதான பொது ஒப்பந்தம் (GATS-General Agreement on Trade in Service) ஏற்றுமதி ஊக்குவிப்பு (Export Promotion) புலம் பெயர்ந்தோரின் வளங்களை மீட்டல் ( Freedom to Repatriate) - வெளிநாட்டில் பணிபுரிவோரின் பணங்களை தன் சொந்த நாட்டுக்கு அனுப்பவது கட்டண குறைப்பு (Reduction in Tariffs)திறந்த போட்டிகளை ஊக்குவிக்கின்றது (Encouraging open competition)உலகமயமாக்கலின் நன்மைகள் - Advantages of Globalisation வெளிநாட்டு ஒத்துழைப்பை கூட்டுதல் (Increase in Foreign Collaboration)சந்தை விரிவாக்கம் (Expansion of Market) தொழில் நுட்ப வளர்ச்சி (Technological Development)கற்றோரின் புலம்பெயர்வை குறைத்தல் (Reduction in Brain Drain) உலகமயமாக்கலின் குறைபாடுகள் -Disvantages of Globalisationஉள்நாட்டு தொழில் இழப்பு (Loss of Domestic Industries)சமநிலையற்ற தன்மை அதிகரித்தல் ( Increase in Inequalities ) - பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் அதிக இடைவெளிவெளிநாட்டு நிறுவனங்களின் மேலாதிக்கம் உலகமயமாக்கலின் தாக்கம் - (Impact of Globalisation) குறைந்த இயக்க செலவுகள், புதிய மூலப்பொருட்கள் மற்றும் புதிய சந்தைகள் மூலம் பெரிய நிறுவனங்களிடையே போட்டி திறனை ஏற்படுத்துகிறது

பன்னாட்டு நிறுவனங்கள் (MNC-Multinational Companay) உலகளவில் உற்பத்தி செய்த பொருட்களை வாங்க மற்றும் விற்க முடிகிறது நுகர்வோர் பொருட்களின் சந்தையை பெருக்கிட உதவுகிறது புதிய வேளை வாய்ப்புகள் மற்றும் உள்நாட்டின் பொருளாதார வளர்ச்சி மேம்படுகிறது புதிய உயர் தொழில் நுட்ப வளர்ச்சியினால் அதிகபடியான உற்பத்தி மற்றும் தரமான பொருட்கள் கிடைக்கின்றன

LPG யின் சிறப்பு அம்சங்கள் அல்லது கூறுகள் - (Highlights of the LPG Policy)

புதிய வெளிநாட்டு ஒப்பந்தங்கள் அறிமுகம்

வெளிநாட்டின் முதலீடுகள் கவர்ந்து இழுக்கபட்டது

முற்றுரிமை மற்றும் வணிகத்தடை சட்டம் (MRTP- Monopolistic and Restrictive Trade Practices Act -1969) திருத்தியமைக்கப்பட்டது

கட்டுபாடுகள் அகற்றுதல் (Deregulation)

பன்னாட்டு வாணிகம் மேம்பாடு

பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் காணப்பட்டது

வரிகள் மறுசீரமைப்பு செய்யப்பட்டது

உரிமம் வழங்கும் முறை அகற்றப்பட்டது

Downloaded From www.nagaicollege.com

மாணவர்கள் செயல்பாடு




மாணவர்களை மேற்கண்ட நான்கு பரிமானங்கள் குறித்து செய்திகளை சேகரிக்க வைத்தல்

**ஒப்படைப்பு:**

இந்திய பொருளாதாரத்தில் எல்.பி.ஜி.யின் தாக்கத்தை விளக்குக .

புதிய பொருளாதார கொள்கை பற்றி சிறு குறிப்பு வரைக.

பொதுத்துறைக்கு ஒதுக்கப்பட்ட தொழில்களுக்கான பெயர்களை குறிப்பிடுக.

உலகமயமாக்களின் நன்மைகள் யாவை?

---

**வகுப்பு:12**

**பாடம்:** வணிகவியல்

**தேதி: அக்டோபர் 4 வது வாரம்**

**தலைப்பு: 21 சரக்கு விற்பனை சட்டம்**

Prepared by: S. DHAYANANDHAN,
GHSS Ariyakudi Sivagangai (Dist)
CELL : 9095707969

கற்றல் நோக்கம்

- விற்பனை ஒப்பந்தம்
- விற்பனை மற்றும் விற்பனை உடன்பாட்டிற்கு உள்ள வேறுபாடு
- சரக்கின் வகைகள்
- உரிமை மாற்றம்
- நிபந்தனைகளுக்கும் நம்புறுதிகளுக்கும் உள்ள வேறுபாடு
- விலைபெறா வணிகரின் உரிமைகளை பற்றி மாணவர்கள் மற்றும் மாணவிகள் புரிந்து கொள்கிறார்கள்

கற்றல் விளைவுகள்

- விற்பனை ஒப்பந்தம் உருவாக்கம் பற்றி அறிந்து கொண்டனர்.
- விற்பனைச் சட்டத்தின் அடிப்படை கூறுகள் பற்றி தெளிவு பெற்றனர்.
- சரக்கின் வகைகளைப் பற்றி உணர்ந்து கொண்டனர்.
- நிபந்தனைகள் மற்றும் நம்புறுதிகள் வேறுபடுத்தி உணர்ந்து கொண்டனர்
- உட்கிடை நிபந்தனைகளை பற்றி எடுத்துக்காட்டுடன் புரிந்து கொண்டனர்.
- எந்த சூழ்நிலையில் வாங்குநர் மீது தனிப்பட்ட முறையில் வழக்கு தொடர முடியும் என்று தெரிந்து கொண்டனர்.

கற்பித்தல் உபகரணங்கள்

- PPT Videos, Educational Games Magazines QR Codes Online Test

Downloaded From www.nagaicollege.com

முன்னறிவு

11ஆம் வகுப்பு பாடத்தில் உள்ள ஒப்பந்தத்தின் கூறுகள் ஒப்பந்த நிறைவேற்றம் ஒப்பந்த விடுப்பு மற்றும் ஒப்பந்த மீறுகை போன்ற பாடங்களில் உள்ள கருத்துக்களை பாடத் தலைப்போடு நினைவுபடுத்துதல்

பாட வளர்ச்சி

சரக்கு விற்பனைச் சட்டம் – 1930 வாங்குதல் - பொருளின் ஏக போக உரிமையை பெறுவதையும் விற்றல் - பொருளின் உரிமையை மாற்றித் தரும் செயல் பற்றி அறிந்து கொண்டனர். சரக்கு என்ற சொல்லில் அடங்காதது பணம், அசையாச் சொத்து, மற்றும் உரிமைகோர் சரக்கு என்ற சொல்லில் அடங்குவது அனைத்து அசையும் சொத்துக்கள்,பங்குகள், பயிர்கள் மற்றும் கண்ணுக்குப் புலனாகாத இனங்களான நற்பெயர், காப்புரிமை, பதிப்புரிம , வணிக குறி. சரக்கு என்ற சொல்லில் அடங்காதது மற்றும் அடங்கு என்று மாணவர்கள் தெளிவாக புரிந்து கொள்கிறார்கள்.பொருளின் உரிமையை உடனே மாற்றினால் விற்பனை என்றும் உரிமை எதிர்காலத்தில் மாற்றினால் விற்பனை உடன்பாட்டு நடவடிக்கைகள் என்றும் தெரிந்து கொள்கிறார்கள்.

ஆர்வமூட்டல்

மாணவரிடம் (மாணவன் பெயர் சொல்லி)காலையில் வரும்போது புது சைக்கிளில் வந்தாய் வாங்கினாயா? என்று மாணவரிடம் " கேள்வி கேட்டல்

ஆம் சார்" என்று மாணவன் பதில் அளித்தான் எங்கே வாங்கியது? எவ்வளவுக்கு வாங்கியது? என்று ஆசிரியர் மாணவனிடம் கேள்வி கேட்டல்

மாணவன் அந்த சைக்கிளை டவுனில் உள்ள கடையில் SVR சைக்கிள் கம்பெனியில் என் அப்பா வாங்கித் தந்தார் சைக்கிளின் விலை 5,000/- என்று மாணவன் பதில் அளித்தான்.

அதற்கு ஆசிரியர் சொன்னார்", இதுதான் "விற்பனை" ஏன் என்றால் இரண்டு நபர்கள் இருக்கிறார்கள் சைக்கிள் கம்பெனி அவரின் உரிமையை மாற்றி தருகிறார் அதற்கு பதிலாக உன் அப்பா பணம் கொடுக்கிறார். இதுதான் "விற்பனை ஒப்பந்தம்" என்று மாணவர்கள் புரிந்து கொள்கிறார்கள்.

ஆசிரியர் வேறு மாணவனின் கையைப் பார்த்து கையில் உள்ள புதிய கைக்கடிகாரத்தை காட்டி இது எங்கே வாங்கியது? என்று கேட்டார்.

மாணவன் "வாங்கவில்லை சார்" என் பிறந்தநாளுக்கு என் மாமா பரிசாக தந்தார்.

உடனே ஆசிரியர் மாணவரிடம் இது விற்பனையா? என்று கேட்க மாணவன் " இல்ல சார்". இது விற்பனை அல்ல இது விற்பனையில் அடங்காது என்று மாணவன் தெளிவாக புரிந்து கொள்கிறான்

கற்றல் கற்பித்தல் செயல்பாடு

- விற்பனை ஒப்பந்தம் உருவாக்கம்

விற்பவர் வாங்குநருக்கு விலை என்ற மறு பயன் பெற்றுக் கொண்டு பொருளின் மீதான உரிமையை மாற்றித் தருதல் விற்பனை ஒப்பந்தமாகும்.

உரிமை - உண்மையான உரிமையை பெற்றவர் தான் உரிமை பெற்றப் பொருளை எப்படி வேண்டுமானாலும் அனுபவிக்கலாம்.

விற்பனை சட்டத்தின் அடிப்படை கூறுகள் விற்பவர் வாங்குனர் பொருளின் மீதான உரிமை மாற்றம் சரக்கு/ பொருள் விலை விற்பனை மற்றும் விற்பனை உடன்பாடு

சரக்கின் வகைகள்

இருக்கின்ற சரக்கு எதிர்கால சரக்கு வருநிகழ்வுசார் சரக்கு

1. ஒப்பிய சரக்கு
2. உறுதி செய்யப்பட்ட சரக்கு
3. உறுதி செய்யப்படாத சரக்கு

Downloaded From www.nagaicollege.com

www.Padasalai.Net www.CBSEtips.in

ஆசிரியர் செயல்பாடு

- சரக்கு கைவசம் உள்ள சரக்கு _ இருக்கின்ற சரக்கு
- கைவசம் இல்லாத ஆனால் எதிர்காலத்தில் உற்பத்தி செய்தோ அல்லது வாங்கியோ தரப்படும் சரக்கு ----- எதிர்கால சரக்கு
- எதிர்கால சரக்கு ஆனால் கைவசம் வந்து சேர்வது எதிர்காலத்தில் நடக்கும் நிகழ்வை பொறுத்து -- வருநிகழ்வுசார் சரக்கு
- உரிமை மாற்றம்

- குறிப்பிட்ட சரக்கு

ஒப்பந்த நாளில் ---- உடனே உரிமை மாற்றம் நடைபெறும்

ஒப்பந்த நாளுக்கு அப்பால்---- ஒப்படைக்க தக்க நிலையில் இல்லாதசரக்கை பொறுத்தவரை விற்பவர் அதனை ஒப்படைக்கும் நிலைக்கு மாற்றிய பின் தான் உரிமை மாற்றம் நடக்கும்.

- எடுத்துக்காட்டு வண்ணமிடுதல் நிறுத்தல் போன்ற இன்ன பிற தரக்கட்டுப்பாடு செயல்களை செய்ய வேண்டி இருப்பின் அத்தகைய செயல்களை செய்த பிறகு பொருளின் மீதான உரிமை மாறும்.

அருதியிடப்படாத சரக்குகள்

விற்பனை ஒப்பந்த நாளில் அடையாளம் காணப்படாத சரக்கினைக் குறிக்கும் அப்படிப்பட்ட சரக்கின் மீதான உரிமை வாங்குனருக்கு நிபந்தனைகளின் அடிப்படையில் உரிமை மாற்றப்படும்.

விற்பனை அல்லது திருப்பம் என்ற அடிப்படையில்

ஒப்புதலுக்குப் பின் வாங்குநருக்கு அனுப்பப்பட்ட சரக்கு அவரின் விருப்பத்திற்கு ஏற்ப வைத்துக்கொள்ளவோ அல்லது திருப்பி அனுப்பவோ செய்யலாம்.

நிபந்தனைகள் மற்றும் நம்புறுதிகளும் :

சரக்கு விற்பனை ஒப்பந்தத்தில் உள்ள கட்டுப்பாடுகள் நிபந்தனையாகவோ அல்லது நம்புறுதிகளாகவோ இருக்கலாம்.

வெளிப்படை மற்றும் உட்கிடை நிபந்தனைகள் மற்றும் நம்புறுதிகளும் :

1. உரிமை குறித்த நிபந்தனை
2. விவரிப்பு குறித்த நிபந்தனை
3. மாதிரி குறித்த நிபந்தனை
4. தகுதி அல்லது தன்மை குறித்த நிபந்தனை
5. விற்கும் தகைமை குறித்த நிபந்தனை
6. உடல் ஆரோக்கியம் தொடர்பான நிபந்தனை
7. வணிக வழக்கங்களை உணர்த்தும் உட்கிடை நிபந்தனைகள்

மாணவர்கள் செயல்பாடு

மாணவர்களை பாடப்புத்தகத்தை படிக்கச் சொல்லி புதிய வார்த்தைகளை அடிக்கோடிட்டு சொல்லுதல் கலைச்சொற்களை படிக்கச் சொல்லுதல்..

வலுவூட்டல்

கூட்டான்மை கலைக்கப்படும் போது, உபரி சொத்துக்களை கூட்டாளிகள் தங்களுக்கு சேர வேண்டிய நிலுவைக்காக எடுத்துக் கொள்ளும் போது அந்த நடவடிக்கை விற்பனையா? இல்லையா?

விடை : விற்பனை இல்லை

Downloaded From www.nagaicollege.com

பல சேலைகளை பார்த்து இந்த வண்ணம் உள்ள சேலை தான் எனக்கு வேண்டும் என அடையாளம் காட்டப்பட்ட சரக்கு எவ்வகை சரக்கு?

விடை : ஒப்பிய சரக்கு

A என்பவர் B என்பவரிடம் 100 மூட்டை அரிசிக்கு அடுத்த மாதம் நடைபெறும் திருமண நிகழ்விற்கு அளிப்பதாக உடன்படுகிறார் இது எவ்வகை சரக்கு?

விடை: எதிர்கால சரக்கு

மதிப்பீடு

LOT : சரக்கு விற்பனைச்சட்டம் இயற்றப்பட்டஆண்டு---------?

MOT: சரக்கு விற்பனை ஒப்பந்தம் என்றால் என்ன?

HOT: விற்பனை ஒப்பந்தத்தின் அடிப்படை கூறுகளை கூறி விளக்குக?

தொடர் பணி: செய்தித்தாள்களில் இந்திய ஒப்பந்த சட்டத்தை பற்றி வரும் கருத்துக்களை வாசித்துக் காட்டுதல்

---

| | | |
|---|---|---|
| வகுப்பு | :12-ம் வகுப்பு | Prepared by: M.MUTHUKUMAR |
| பாடம் | : வணிகவியல் | GHSS, THIRUPPACHETHI- |
| தலைப்பு | : 22 மாற்றுமுறை ஆவணச் சட்டம்-1881 | SIVAGANGAI DIST |
| தேதி | : அக்டோபர் **5 வது** வாரம் | Cell No: 98940 65130 |

**கற்றல் நோக்கம்:**

- ☞ மாற்றுமுறை ஆவணச் சட்டம் 1881-பொருள்-சிறப்பியல்புகள் மற்றும் எடுகோள்கள்
- ☞ மாற்றுமுறை ஆவணங்களின் வகைப்பாடு-அதன் தன்மை,மாற்றுச்சீட்டு-கடனுறுதிச் சீட்டு-காசோலை ஆகியவற்றிற்கு இடையே உள்ள வேறுபாடுகள் ஆகியவற்றை புரிந்து கொள்ள இயலும்.

**கற்றல் விளைவுகள்:** கற்போர்

- ⌘ பல்வேறு மாற்றுமுறை ஆவணங்களின் பயன்பாடு மற்றும் முக்கியத்துவத்தையும் அறிந்து கொள்வர்
- ⌘ மாற்றுச்சீட்டு-கடனுறுதிச் சீட்டு-காசோலை ஆகியவற்றின் வேறுபாடுகளையும் தன்மை- களையும் புரிந்து கொள்வர்.
- ⌘ மாற்று முறையாவணங்கள் சட்டம் 1881-ன் பல்வேறுபட்ட பிரிவுகளை தெரிந்து கொள்வர்.

**கற்றல் - கற்பித்தல் உபகரணங்கள்:**

மாற்று முறை ஆவணங்களின் மாதிரிகளை இணையத்தின் மூலம் காண்பித்தல்- பவர் பாய்ண்ட் பிரசன்டேஷன் மூலம் விளக்குதல் - வரைபடங்கள்

**பாடப்பொருள் விளக்கம்/கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள்:**

**சட்டத்தின் பெயர்:**

மாற்று முறையாவணங்கள் சட்டம்,1881.இது இத்தியா முழுவதையும் அளாவி நிற்கும். ஆனால் இதில் அடங்கியுள்ள எதுவும்,இந்திய நாணயத்தாள் சட்டம்,1871-இன் பரிவு 21-ஐப் பாதிக்காது.

**மாற்றுமுறைமை :**

மாற்றுமுறைமை என்பது மறுபயன் பெற்று ஆவணத்தை ஒருவர் மற்றொருவருக்கு மாற்றுவது.

**ஆவணம்:**

Downloaded From www.nagaicollege.com

ஆவணம் என்ற சொல் எழுத்து வடிவிலான ஆவணத்தின் மூலம் ஒரு குறிப்பிட்ட நபருக்கு உரிமையை ஈட்டித்தரும் செயலாகும்.

**மாற்றுமுறை ஆவணம்:**

ஒரு குறிப்பிட்ட நபருக்கு குறிப்பிட்ட தொகையை உரிமை வழங்குவதும் மற்றும் மேலெழுதுதல் அல்லது கையில் கொடுப்பது மூலம் ஒரு நபரிடமிருந்து மற்றொரு நபருக்கு அதன் உரிமையை மாற்ற ஏதுவான ஆவணம் ஆகும்.

**வங்கியர்:**

"வங்கியர்" என்பது ஒரு வங்கியராகச் செயல்படும் நபர் எவரையும்,அஞ்சலகச் சேமிப்பு வங்கி எதனையும் உள்ளடக்கும்.

**பாடவளர்ச்சி**

⌘ **மாற்றுமுறை ஆவணம்-வரைவிலக்கணம்:** கே.சி.வில்ஸ் "ஒருவர் நன்னம்பிக்கையில் மற்றும் மறுபயன் கருதி தான் யாரிடமிருந்து பெற்றாரோ அவரின் உரிமையில் பழுது இருந்த போதிலும் எந்த முறையாவணத்தின் மீதான உரிமையை பெறுகிறாரோ அந்த ஆவணமே மாற்றுமுறை ஆவணம்"

**மாற்றுமுறையாவணத்தின் சிறப்பு இயல்புகள்:**

1. மாற்றித்தரும் தன்மை
2. உரிமையாளரின் உரிமை பழுதற்றது
3. மாற்றப் பெற்றவரின் வழக்காடும் உரிமை
4. எழுத்து வடிவில் இருக்க வேண்டும்
5. நிபந்தனையற்ற ஆணை
6. கையெழுத்து

**மாற்றுமுறை ஆவணத்தின் எடுகோள்கள் (அ) அனுமானங்கள்:**

1. ஒவ்வொரு மாற்றுமுறை ஆவணமும் மறுபயன் கருதி வரையப்பட்டது.
2. ஒவ்வொரு மாற்றுமுறை ஆவணத்தின் அனுமானமும் ஒப்புக்கொள்வதாகக் கருதப்படுகிறது.
3. அதில் குறிக்கப்பட்டிருக்கும் நாளில் அது எழுதப்பட்டது.
4. அது நியாயமான காலத்திற்குள் முதிர்வுக்கு முன்பாக ஏற்கப்பட்டதாக கருதப்படுகிறது.
5. மாற்றுமுறையாவணம் அதன் முதிர்வு தேதிக்கு முன்பே மாற்றப்பட்டதாக கொள்ளப்படுகிறது.
6. மாற்றுமுறையாவணம் காணாமல் போனாலும் முறைப்படி முத்திரை இடப்படுவதாக கருதப்படுகிறது.
7. மாற்றுமுறை ஆவணத்தை வைத்துக் கொண்டு இருப்பவர் முறைப்படி உடைமை பெற்றவராக கருதப்படுகிறார்.

**மாற்றுமுறைத் தன்மை மற்றும் உரிமை மாற்றும் தன்மை (Negotiability and Assignability)**

**மாற்றுமுறைத் தன்மை (Negotiability)**

ஒருவர் நன்னம்பிக்கையில் மற்றும் மறுபயன் கருதி தான் யாரிடமிருந்து பெற்றாரோ அவரின் உரிமையில் குறை இருந்தபோதிலும் எந்த முறையாவணத்தின் மீதான உரிமையை பெறுகிறாரோ அந்த ஆவணமே மாற்றுமுறை ஆவணம் ஆகும்.

**உரிமைமாற்றும் தன்மை (Assignability):**

உரிமைமாற்றம் என்ற சொல் மாற்றுமுறை ஆவணங்களான காசோலை, மாற்றுச்சீட்டு,கடனுறுதி (அ) வாக்குறுதித் தாள் போன்ற பத்திரங்கள் அல்லாத அசையும் மற்றும் அசையா சொத்தின் உரிமையை மற்றும் உடைமையை உரிமையாளர், வாங்குனருக்கு மறுபயன் பெற்றுக் கொண்டோ அல்லது தானமாகவோ பிறருக்கு மாற்றித்தரும் செயலைக் குறிக்கும்.

Downloaded From www.nagaicollege.com

www.Padasalai.Net www.CBSEtips.in

**மாணவர் செயல்பாடு:**

மாணவர்களை பாடப்புத்தகத்தில் உள்ள மாற்றுமுறை ஆவணங்களின் மாதிரி படங்களை காட்டி வரையச் செய்து அதன் தன்மைகளை சொல்லச் செய்தல்.

**மதிப்பீடு**

**எளிய சிந்தனை வினாக்கள்(LOT):**

1. மாற்றுமுறை ஆவணத்தில் மேலெழுதிட இடம் போதவில்லை எனில் எவ்வாறு மேலெழுதலாம்?
2. ஒட்டுத்தாள் என்றால் என்ன?

**நடுத்தர சிந்தனை வினாக்கள்(MOT):**

- எழுதப் படிக்கத் தெரியாதவர் ஒரு மாற்றுமுறை ஆவணத்தை எவ்வாறு மேலெழுதுவார்?

**உயர் சிந்தனை வினாக்கள்(HOT):**

1. ஏன் மாற்றுமுறைச் சட்டத்தின் கீழ் விடுமுறை அறிவிக்கப்படுகிறது?

**செயல்பாடு:**


உள்ளூர் வங்கி ஊழியர்(அ)தணிக்கையாளர் (அ)வழக்கறிஞரை அழைத்து வந்து நேரில் மாற்றுமுறை ஆவணச்சட்டம் குறித்து மாணவர்களுக்கு விளக்கச் சொல்லி சந்தேகங்களை நிவர்த்தி செய்தல்.

**தொடர்பணி:**

மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ் எடுக்கப்படுகின்ற நீதி மன்ற நடவடிக்கைகளின் செய்திகளை மாணவர்களுக்கு வாசித்துக் காட்டுதல்.

**மாதிரி படிவங்கள்**

**மாற்றுச் சீட்டு**


BILL OF EXCHANGE

STAMP

Mumbai, India
January 15, 2019

₹ 1,50,000

Three months after date, pay Mr. R or his order, a sum of rupees one lakh fifty thousand, value received.


To,
Mrs. Q
Pune, India

ACCEPTED
Sd/-
Mrs. Q
January 18, 2019

Sd/-
Mr. P
Mumbai, India

Downloaded From www.nagaicollege.com

www.Padasalai.Net www.CBSEtips.in


BILL OF EXCHANGE

Draft No. MD-01

For USD30,804.70 Date: APR 30 2008

At ***** sight of this FIRST of Exchange (Second the same tenor and date being unpaid)

Pay to the order of COMMERCIAL BANK, LTD.

the sum of SAY TOTAL U.S. DOLLARS THIRTY THOUSAND EIGHT HUNDRED FOUR AND CENTS SEVENTY ONLY. value received

Drawn under

Irrevocable L/C No. 073708010006 dated JANUARY 28, 2008

To AUTO CO.LTD.

AUTHORIZED SIGNATURE

---

வகுப்பு : XII

பாடம் : வணிகவியல்

தலைப்பு : 23. தொழில் முனைவுக்கான அடிப்படைக் கூறுகள்

தேதி : **நவம்பர் 1வது வாரம்**

Prepared by: S. Anusuya, M.com, B.Ed, MPhil.
Govt.Hr.Sec. School,
Melakottai.
Ph. No :9942952873

கற்றல் நோக்கம்:-

தொழில் முனைவின் கருத்து, பொருள் மற்றும் இலக்கணம் பற்றி அறிந்து கொள்ள முடியும்.

தொழில் முனைவோரின் சிறப்பியல்பு முக்கியத்துவம் பற்றி புரிந்து கொள்ள முடியும்.

மகளிர் தொழில் முனைவு வாய்ப்புகளும் சவால்கள் பற்றி தெரிந்து கொள்ள முடியும்.

தொழில் முனைவோரின் பணிகள் பற்றி புரிந்து கொள்ள இயலும்.

தொழில் முனைவு என்பது ஒருஅமைப்பை தோற்றுவிப்பதில் முடியும் செயலை குறிக்கிறது என்பதை தெரிந்துக் கொண்டனர்.

தொழில் முனைவோர் இடர் ஏற்பாளர் ஒரு ஏற்பாட்டாளர் (அ) அமைப்பாளர், ஒரு புதுமைப்பித்தன் என்பதை அறிந்து கொண்டனர்.

கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் :-

PPT, செய்தித்தாள், Video lesson, QR code etc.

முன்னறிவு:-

ஒரு பெரிய நிழல் தரும் ஆலமரம் உருவாக அதன் ஆழமான மிகப்பருத்த வேர், தண்டு, மற்றும் பரந்த விரிந்த கிளைகள் இருந்தால் மட்டுமே இது சாத்தியம் அது போல் தொழில் முனைவு ஆணிவேர் தொழில் முனைவோர் மிப்பருத்த தொண்டு நிறுவனம் என்பது பரந்து விரிந்த கிளைக்கு சமம் என்ற முன்னெடுப்புடன் பாடத்தை துவங்குதல்

பாட அறிமுகம்:-

கற்றல் கற்பித்தல் செயல்பாடு

Downloaded From www.nagaicollege.com

ஆசிரியர் செயல்பாடு:-

தொழில் முனைவு என்ற சொல் ஒரு புதிய தொழில் வினையை மேற்கொள்வதைக் குறிக்கும். இச்சொல் ஊதியம் நாடி பணி செய்வதைக் குறிக்காது பெற்ற கல்வியை வைத்து தொழில் செய்வது தொழில் முனைவு என்பதிலிருந்து வேறுபட்டது. தொழில் முனைவு என்பது ஒரு அமைப்பை தோற்றுவிப்பதில் முடியும் செயலை குறிக்கிறது

வலுவூட்டல்:-

- தொழில் முனைபவரின் சிறப்பியல்புகள்
- தொழில் முனைபவரின் முக்கியத்துவம்
- மகளிர் தொழில் முனைவோர்
- மகளிர் தொழில் முனைவோருக்கான வாய்ப்புகள்
- மகளிர் தொழில் முனைவோர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்
- தொழில் முனைவோரின் பணிகள்

  தொழில் முனைவு புதுமை படைத்தல், நாட்டின் மொத்த பொருள் உற்பத்திக்கு பங்களித்தல், ஏற்றுமதி முன்னேற்றம் பொருளாதார சக்தி குவிதலை தவிர்த்தல், வாழ்க்கைத்தர உயர்ச்சி என்று விளக்கமளித்தல்

மதிப்பீடு:-

எளிய சிந்தனை வினாக்கள்(LOT):

1.எந்தெந்த பண்புகள் தொழில் முனைவோர்க்கு உரித்தானவை?

நடுத்தர சிந்தனை வினாக்கள்(MOT):

தொழில் முனைவோரின் தோற்றுவிப்பு பணிகளை குறிப்பிடுக.

உயர் சிந்தனை வினாக்கள்(HOT):

மகளிர் தொழில் முனைவோர் சந்திக்கும் பிரச்சனைகளை விவாதிக்க.

குறைதீர் கற்றல்:-

தொழில் முனைவின் அடிப்படை கூறுகளைப் பற்றி அறிந்து கொள்வதில் சிரமப்படும் மாணவர்களை கண்டறிந்து அவர்களுக்கு கீழ்வருமாறு விளக்கமளித்தல்

- தொழில் முனைபவர் ஒரு தடையற்ற சிந்தனைவாசி
- தன்னிச்சையான நபர்
- தன் சொந்த முயற்சியில் தொழிலுக்கான நிதியை திரட்ட வேண்டும்
- தான் ஆரம்பித்த தொழிலின் இடரை ஏற்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது
- தொழில் முனைபவர் உரிமையாளர் என்ற தகுநிலை படைத்தவர் என்று விளக்கமளித்தல்

செயல்பாடு:-

தாங்கள் படிப்பை முடித்த பின்பு வருவாய்,வேலை நேரங்கள், வேலை பாதுகாப்பு நிதி ஆபத்து, தனிப்பட்ட திருப்தி, பொறுப்பு போன்ற காரணிகளை மனதில் கொண்டு எம்மாதிரி ஈடுபடலை தேர்வு செய்வீர்கள் என்பதை பற்றி எழுதிவரச் செய்தல்

தொடர் பணி:-

தொழில் முனைவோரின் மூன்று முக்கிய பணிகளான தோற்றுவிப்பு, மேலாண், வணிகப் பணிகளின் உள்ளடக்கங்களை எழுதி வரச் செய்தல்.

Downloaded From www.nagaicollege.com

வகுப்பு : XII
பாடம் : வணிகவியல்
தலைப்பு : 24. தொழில் முனைவோர்களின் வகைகள்
தேதி : **நவம்பர் 2 வது வாரம்**

Prepared by: S. Anusuya, M.com, B.Ed, MPhil.
Govt.Hr.Sec. School,
Melakottai.
Ph. No :9942952873

கற்றல் நோக்கம்:-

தொழில் முனைவோரிகள் வகைகள் பணிசார், தொழில்சார், தொழில்நுட்பம்சார், செயல் ஊக்கம் சார் மேம்பாட்டு நிலையை ஒட்டிய,செயல்படும் இடம்சார், உரிமை அடிப்படையான வகைப்பாடு ஆகியவற்றை முடியும்

கற்றல் விளைவுகள்:-

மேற்கொள்ளும் தொழிலினை ஒட்டி தொழில் முனைவோர்களை பல பிரிவுகளாகப் பிரிக்கலாம் என்பதை புரிந்து கொண்டனர்.தொழில் முனைவோர்கள் கடைபிடிக்கும் தொழில் நுட்பம்,மேற்கொள்ளும் தொழில்,தொழில் நடத்தி வரும் இடம், அவர்கள் கொண்டுள்ள உரிமை, அவர்கள் பெறும் செயல் ஊக்கம் என பல்வேறு காரணிகளால் அவர்களை வகைப்படுத்தலாம் என்பதை அறிந்து கொண்டனர்

கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் :-

செய்தித்தாள், PPT, video lesson, QR code etc.

முன்னறிவு:-

தொழில் முனைவு என்பது ஒரு புதிய தொழில் வினயை மேற்கொள்வது என்றும் ஊதியத்திற்காக பணிசெய்வதன்றி, புதுமைகளை படைத்தல், இடர் ஏற்றல் போன்ற பண்பு நலன்களோடு தொடர்புடையது என முந்தைய பாடத்தோடு தொடர்படுத்தி நினைவுபடுத்துதல்

பாட அறிமுகம்:-

கற்றல் கற்பித்தல் செயல்பாடு

ஆசிரியர் செயல்பாடு:-

**மேற்கொள்ளும் தொழிலினை ஒட்டி தொழில் முனைவோர்களை பல பிரிவுகளாக பிரிக்கலாம்**

(a) பணிசார் வகைப்பாடு:

1. புதுமை படைக்கும்
2. மாதிரியை பின்பற்றும்
3. காலம் கடத்தும் பழமைவாத
4. மந்தமான தொழில் முனைவோர்

(b) தொழில் சார் வகைப்பாடு:

1. வியாபாரம் செய்யும்
2. வியாபார தொழில் முனைவோர்
3. தொழில் சார்ந்த
4. கூட்டு பங்கு
5. வேளாண்
6. சில்லறை தொழில் முனைவோர்

Downloaded From www.nagaicollege.com

7. சேவை தொழில் முனைவோர்

© தொழில்நுடபம் சார் வகைப்பாடு:

1. தொழில்நுட்ப
2. தொழில் நுட்பம் சாரா
3. தொழில் முனைவு வித்தகர்

(d) செயல் ஊக்கம் சார் வகைப்பாடு:

1. தெளிவான
2. தூண்டப்பட்ட
3. ஊக்குவிக்கப்பட்ட
4. தன்னிச்சை தொழில் முனைவோர்

(E) மேம்பாட்டு நிலயை ஒட்டிய வகைப்பாடு:

1. முதல் தலைமுறை
2. நவீன தொழில் முனைவோர்
3. பாரம்பரிய தொழில் முனைவோர்

(f) செயல்படும் இடம் சார் வகைப்பாடு:

1. நகர்புற தொழில் முனைவோர்
2. ஊரக தொழில் முனைவோர்

(g) உரிமை அடிப்படையான வகைப்பாடு:

1. தனி உரிமை
2. அரசு தொழில் முனைவு
3. இணை தொழில் முனைவு

வலுவூட்டல்:-

தொழில் முனைபவர் என்ற சொல் பொதுவானதாக இருந்தாலும், அவரவர் மேற்கொள்ளும் பணிகளை ஒட்டி அவர்களைப் பல்வேறு பெயர்களில் அழைக்கலாம் உதாரணமாக தொழில் முனைவோர்கள் கடைபிடிக்கும் தொழில்நுட்பம்,மேற்கொள்ளும் தொழில்,தொழில் நடத்தி வரும் இடம் அவர்கள் கொண்டுள்ள உரிமை,பெறும் செயல் விளக்கம் என பல்வேறு காரணிகளால் வகைப்படுத்தலாம் என விளக்குதல்.

மதிப்பீடு:-

எளிய சிந்தனை வினாக்கள்(LOT):

- செயலுக்கம் சாரா தொழில் முனைவோரை கண்டுபிடிக்க

(a)தெளிவான தொழில் முனைவோர்

(b) கூட்டுபங்கு நிறும தொழில் முனைவோர்

(c) இயல்பான தொழில் முனைவோர்

நடுத்தர சிந்தனை வினாக்கள்(MOT):

- வேளாண் தொழில் முனைவோர் என்பவர் யார்?

உயர் சிந்தனை வினாக்கள்(HOT):

- பணிசார் தொழில் முனைவோரின் தன்மயை விவரி

Downloaded From www.nagaicollege.com

குறைதீர் கற்றல்:-

தொழில் முனைவோரின் வகைகளை புரிந்து கொள்ள சிரமப்படும் மாணவர்களுக்கு கீழ் வருமாறு விளக்குதல்

தொழில் முனைவோர் அவரவர் மேற்கொள்ளும் பணிகளை ஒட்டி அவர்களை பல்வேறு பெயர்களில் அழைக்கலாம் என்றும் சில உதாரணங்களை கூறி விளக்குதல்

செயல்பாடு:-

மாணவர்களையே மிட்டாய் செய்யும் தொழில் முனைவோரக் கருதி கொண்டு தங்களது மிட்டாய் தொழிலில் நிலவும் விலைப் போட்டி, தரம் ரீதியான போட்டி என்று பல்வேறு போட்டி சூழலை மனதில் கொண்டு போட்டியில் வெற்றி கண்டிட ஓர் ஆய்வை நடத்த செய்வது

தொடர் பணி:-

அருகாமையில் இருக்கும் ஒரு வெற்றி பெற்ற தொழில் முனைவோரின் தொழில் இடத்திற்கு மாணவர்களை அழைத்துச் சென்று அவரிடம் மாணவர்கள் முன்னிலையில் நேர்காணல் நடத்திடுக. பின்பு அவர் எப்படி வெற்றி பெற்றார் என்ற இரகசியத்தை ஒரு கட்டுரையாக எழுதி சமர்ப்பிக்க கூறுக.

---

வகுப்பு : XII

பாடம் : வணிகவியல்

தலைப்பு : 25. தொழில் முனைவோருக்கான அரசின் திட்டங்கள்

தேதி : நவம்பர் 3 வது வாரம்

Prepared by: மா.தாமரை நங்கை
தியாகி வள்ளியம்மை அரசு மேல்நிலைப் பள்ளி,
தில்லையாடி . மயிலாடுதுறை மாவட்டம்..
Ph. No : 9788813983

**கற்றல் நோக்கம் :**

1. **தொழில் முனைவு முன்னேற்றத்திற்கு அரசு மேற்கொள்ளும் முயற்சிகள்**
2. **குறிப்பிட்ட தொழில் முனைப்புத் திட்டங்கள் பற்றி அறிதல்.**
3. **பெண் தொழில் முனைவோருக்கான திட்டங்கள்**

**கற்றல் விளைவுகள் :**

**மாணவர்கள்**

**புதிய தொழில்தொடங்க தயாராக உள்ள தொழில் முனைவோருக்கு அரசால் வழங்கப்படும் நிதி உதவி, காப்பீடு, மானியம், பயிற்சி, கடன்கள் பற்றி அறிய இயலும்.**

**ஸ்டார்ட் அப் இந்தியா**, Make -in India, **ஜன்தன் ஆதார் மொபைல்.போன்றவை பற்றி அறிய இயலும்.**

**மகளிர் தொழில்முனைவோர் பற்றியும், அவர்களுக்குள்ள சவால்கள் பற்றியும் அறிய இயலும்..**

**கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் :**

PPT, Videos, QR codes, Online tests through Games..,

**முன்னறிவு :**

**முன் பாடத்தில் தொழில் முனைவோர் பற்றி படித்தவற்றை மீளத் திருப்புதல் .. தொழில் முனைவோரின் வகைகள் பற்றி நினைவு கூர்தல்..**

Downloaded From www.nagaicollege.com

பாட அறிமுகம்:

தொழில் முனைவை மேம்படுத்த, புதுமை புனைய அரசு எடுக்கும் முயற்சிகள் -- அறிமுகம் செய்தல்

1. ஸ்டார்ட் அப் இந்தியா தொடக்கநிலை தொழில்களுக்கு ஆலோசனை, வளர்ச்சி ஆதரவு தருதல் -- ஜனவரி 2016 ல் துவக்கம் -- நிதிகளின் நிதி என்ற நிதி மூலம் நிதி வசதி.

2., Make -in India இந்தியாவை பன்னாட்டு உற்பத்தி மையமாக மாற்றுதல். 2014 செப்டம்பரில் நடைமுறை.. அன்னிய முதலீடு, புதுமை புகுத்தல்,திறன் வளர்ச்சி, உற்பத்தி, கட்டமைப்பு மேம்பாடு..

3. ஜன்தன் ஆதார் மொபைல் (JAM) பயனாளிகளுக்கு சேர வேண்டிய மானியத்தை தொடர்புடைய துறை நேரடியாக பயனாளிகளுக்கு அளிக்கவேண்டி அனைவரையும் கட்டாயமாக வங்கிக் கணக்கு ஆரம்பிக்கச் சொல்லுதல். இதன் மூலம் இடைத்தரகர்களின் சுரண்டல் தடுக்கப்படுகிறது.மேலும் மாணவர்களுக்கு ஸ்டாண்ட் அப் இந்தியா, அடல் புதுமை புகுத்தல் திட்டம், டிஜிட்டல் இந்தியா இவற்றைப் பற்றி விளக்கிக் கூறுதல்.

புதிய தொழில் முனைவோர் __ மேம்பாட்டு படிநிலைகள்...

- பொருள் தேர்வு எதிர்பார்ப்பு
- உரிமை வடிவம் தேர்வு செய்தல்
- இடத்தேர்வு
- உற்பத்தி கையகப்படுத்துதல்
- மூலதனக் கட்டமைப்பு தீர்மானித்தல்
- திட்ட அறிக்கை தயாரித்தல்

## திட்ட அறிக்கை தயாரித்தல்

உள்ளடக்கம் :

** தொழில்நுட்பம் சார்ந்த சாத்தியத் தன்மை

** பொருளாதார நம்பகத்தன்மை

** நிதி சார்ந்த நம்பகத் தன்மை

** நிர்வாகத் திறமை

** தற்காலிக பதிவுச் சான்றிதழ்

** நிரந்தர பதிவுச் சான்றிதழ்

** சட்டபூர்வ உரிமம்

** மின் இணைப்பு

கற்றல் கற்பித்தல் செயல்பாடு :

அரசின் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் பற்றி விவரித்தல்.

Downloaded From www.nagaicollege.com

**ஆசிரியர் செயல்பாடு:**

**டிஜிட்டல் இந்தியா அரசின் அனைத்து சேவைகளும் பயனாளிகளுக்கு மின்னணு முறையில் வழங்கப்படுதல் . இந்தியப் பொருளாதாரம் மின்னனு பொருளாதாரமாக மாறி வருதல். உலகில் கிடைக்கும் பொருட்கள் \ பணிகளை மின்னனு முறையில் பெற வகை செய்கிறது.**

**மாணவர் செயல்பாடு :**

**விஞ்ஞான அடிப்படையில் அதிகாரமளித்தல் ( SEED)**

**பெண்களுக்கு பயிற்சி \ வேலைவாய்ப்பு திட்டத்திற்கான ஆதரவு ( STEP)**

**வணிகம் சார்ந்த தொழில்முறை உதவி\ வளர்ச்சி திட்டம் (TREAD) பற்றி விவரித்தல்..**

**கலைச் சொற்கள் :** SEED, AIC, STEP, TREAD, JAM.

**மதிப்பீடு :**

**LOT**

**1. _________ திட்ட அறிக்கையில் துணிகரம் செய்வதற்கான நெறிமுறையை உள்ளடக்கியது.**

**MOT**

**1. ஏதேனும் 2 அரசின் தொழில் முனைவோர் திட்டங்களின் பெயர்களைக் கூறுக.**

**HOT**

**1. ஸ்டார்ட் அப் இந்தியா என்றால் என்ன?**

**2. புதிய தொழில் முனைவோரின் மேம்பாட்டிற்கான படி நிலைகள் யாவை ? விவரி.**

**செயல்பாடு :**

**தற்போது நிலவும் தேவை மற்றும் அளிப்பின் போக்கை மனதில் கொண்டு மாணவர்களுக்குப் பிடித்த ஏதேனும் ஒரு தொழிலை ஆராயச் சொல்லலாம்.**

**தொடர்பணி : ( கள ஆய்வு )**

**நமது மாவட்டத்திலேயே சீர்காழி தாலுகா நெப்பத்தூரில் இயங்கி வரும் ஸ்ரீகிருஷ்ணா ஒருங்கிணைந்த ஊரக பண்ணை செயல்படும் விதம் பற்றி விவரித்தல் . மாணவர்களை நேரில் போய்ப் பார்க்கச் சொல்லுதல்.**

---

வகுப்பு : **XII**

பாடம் : வணிகவியல்

தலைப்பு : **26.** நிறுமச்சட்டம் 2013

தேதி : **நவம்பர் 4 வது வாரம்**

**Prepared by:** V.JANAKI
MPL girls higher secondary school Pettai
Tirunelveli
**Ph. No** : 74023 58561

கற்றல் நோக்கங்கள்

இந்திய நிறுமச்சட்டத்தின் வரலாறும் பரிணாமும் நிறுமச்சட்டம் 2013 நிறுமத்தின் பொருள் மற்றும் இலக்கணம் நிறுமத்தை உருவாக்குதல் பங்கு மற்றும் பங்குமுதல் பங்குகளை வெளியீடுதல் பங்குகள் மற்றும் கடன்பத்திரங்களின் பொருள் வகைகள் வேறுபாடுகள் பங்குச் சான்றிதழ் பங்கு மற்றும் பங்குத் தொகுதியும் பற்றி புரிந்துக்கொள்ள இயலும்.

கற்றல் விளைவுகள்:

உலகத்தரம் வாய்ந்த ஐ.டி.சி., போர்டு நிறுமங்கள் உருவான விதத்தை புரிந்து கொள்கிறான். தேசிய அளவில் தரம் வாய்ந்த ஹெச்.டி.எப்.சி., ஐசிஐசிஐ போன்ற நிதிநிறுவனங்கள் உருவான விதத்தை புரிந்து கொள்கிறான். புகழ் பெற்ற ஆர்.எம்.கே.வி., சென்னை சில்க்ஸ் போன்ற தனிநபர் நிறுமங்கள் உருவான விதத்தை புரிந்து கொள்கிறான்.

Downloaded From www.nagaicollege.com

கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்:

செய்தித்தாள் விளம்பரங்கள், PPT,VIDEO, QR CODE, ONLINE TEST

முன்னறிவு:

பதினொராம் வகுப்பு பாடத்திட்டத்தில் உள்ள கூட்டுப்பங்கு நிறுமம் பொருள், இலக்கணம் உங்களுக்கு தெரியுமா? பகுதியில் உள்ள 2013ம் ஆண்டு நிறுமச்சட்ட சிறப்பம்சங்கள் பற்றிய கருத்துக்களை நினைவுப்படுத்துதல்.

பாட அறிமுகம்.

உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை மனிதன் பயன்படுத்தும் பொருள்கள் அனைத்தும் நிறுமங்களே தயாரிக்கின்றன என கூறி அறிமுகம் செய்வது.

எடுத்துக்காட்டு தலைக்கு தேங்காய் எண்ணெய் VVD., PARACHUTE,காலுக்கு செருப்பு BATA, VKC கைக்கு கடிகாரம் TITAN,

பாட வளர்ச்சி:

நிறுமத்தை உருவாக்குதல், பங்கு, பங்குமுதல் பங்குகள் வெளியீடு

கற்றல் கற்பித்தல் செயல்பாடு:

முனைமத்தில் வெளியீடு , பெயரளவு மதிப்பிற்கு கூடுதலான விலைக்கு பங்குகளை வெளியிடுதல்

ஆசிரியர் செயல்பாடு:

தள்ளுபடியில் வெளியிடுதல் பெயரளவு மதிப்பிற்கு குறைவான விலைக்கு பங்குகளை வெளியிடுதல்

பணியாளர் சாதாரண பங்கு வெளியிடுதல் பணியாளர்களுக்கு அல்லது இயக்குனர்களுக்கு தள்ளுபடியில் ரொக்கமற்ற மறுபயனுக்கு அறிவாற்றல் சார்ந்த சொத்துரிமைக்கு வெளியிடுவது ஊக்கப்பங்கு முந்தைய பங்குதாரர்களுக்கு எந்தவித கட்டணமும் இல்லாமல் வெளியிடுவது உரிமை பங்கு செயல்முறைவிதிகளின் படி பழைய பங்குதாரர்களுக்கு பங்குகளின் விலையை குறைத்து சாதகமாக வெளியிடுவது

மாணவர் செயல்பாடு:

மாணவர்களை பாடப்புத்தகத்தை படிக்கச்சொல்லி புதிய வார்த்தைகளை அடிக்கோடிடச் செய்தல்

கலைச்சொற்களை படிக்கச் சொல்லுதல்.

வலுவூட்டல் :

புதிய மற்றும் கடினமான கருத்துக்களை வீடியோ கேம், QR CODE ஸ்கேன் செய்து விளக்கி கூறுதல்.

ஒரு நபர் நிறுமம், பங்கு மற்றும் பங்குமுதல், பங்கின் வகைகள்

மதிப்பீடு:

எளிய சிந்தனை வினாக்கள்

நிறுமச்சட்டம் 2013 பங்குகளை ______________-வெளியிடுவது தடை செய்துள்ளது.

பங்குத்தொகுதியை __________நிறுமம் வெளியிடும்.

Downloaded From www.nagaicollege.com

நடுத்தர சிந்தனை வினாக்கள்:

நிரும உருவாக்குதலின் நிலைகள் யாவை?

பங்கு என்றால் என்ன?

உயர் சிந்தனை வினாக்கள்:

கடன் பத்திரங்களின் வகைகள் யாவை?

**குறைதீர் கற்றல்:**

கருத்துக்களை புரிவதில் சிரமம் உள்ள மாணவர்களை அடையாளம் கண்டு பின்வரும் விளக்கம் தரப்படும்.நிறும முதலின் ஒரு பகுதி பங்கு. கட்டணம் இல்லாமல் வெளியிடுவது ஊக்கப்பங்கு.விலையை குறைத்து வெளியிடுவது உரிமைப் பங்கு முந்தைய பங்குதாரர்களுக்கு மட்டும். கடனுக்கு ஆதாரமான சான்று கடனீட்டு பத்திரம்.

**செயல்பாடு:**

பங்கு-கடனீட்டு பத்திரம் வேறுபாடுகள் மாணவர்களை இரு அணிகளாக பிரித்து உரையாடச் செய்வது.

**தொடர்பணி:**

செய்தித்தாள், நாணயம் விகடன் பத்திரிகையில் வரும் பங்கு பற்றிய செய்திகளை வாசித்து காட்டுதல்.

---

வகுப்பு : XII

பாடம் : வணிகவியல்

தலைப்பு : 27. நிறும மேலாண்மை

தேதி : டிசம்பர் 1வது வாரம்

Prepared by: P.MANJULA

காமராசர் மாநகராட்சி மே.நி.பள்ளி பேட்டை

திருநெல்வேலி

Ph. No : 89035 92497

**கற்றல் நோக்கம்:**

- நிறுமத்தின் மேலாண்மைக் கருத்தைப் புரிந்து கொள்ளுதல்
- இயக்குநா் யார் அவா்கள் எவ்வாறு நியமிக்கப்படுகிறாா்கள் அவா்களின் தகுதிகள் போன்றழவ பற்றி அறிந்து கொள்ள
- .இயக்குநா் குழு இயக்குநா்களின் சட்டப்பூா்வ நிலைப்பாடு பற்றி தெரிந்து கொள்ள
- ஒரு இயக்குநரை எவ்வாறு அகற்றுவது என்பதை மாணவா்கள் புரிந்து கொள்ள
- நிறுமத்தின் மேலாண்மை தொடா்பு மற்ற நிா்வாக அதிகாரிகள் பற்றிய போதுமான அறிவு பற்றி புரிந்து கொள்ள

**கற்றல் விளைவுகள்:**

நிறும மேலாண்மை யாரால் மேற்கொள்ளப்படுகிறது இயக்குநா் என்பவா் யாா் அவா் யாரால் நியமிக்கப்படுகிறாா் என்பது பற்றி மாணவா்கள் தெளிவாக புரிந்து கொண்டனா்.பள்ளியின் அருகில் அமைந்திருக்கக் கூடிய கோகோ கோலா நிறுவனம் எவ்வாறு மேலாண்மை செய்யப்படுகிறது என்பது பற்றி மாணவா்கள் தெளிவாக புரிந்து கொண்டனா்.கல்வித் துறை எவ்வாறு மேலாண்மை செய்யப்படுகிறது கல்வித்துறையில் உள்ள இயக்குநா்கள் எவ்வாறு செயல்படுகிறாா்கள் என்பது பற்றியும் மாணவா்கள் தெளிவாக புரிந்து கொண்டனா்.

**கற்றித்தல் உபகரணங்கள்:**

PPT, Videos, Newspaper, QR code, Magazines

**முன்னறிவு:**

ஏற்கனவே பதினொன்றாம் வகுப்பில் கூட்டுப்பங்கு நிறுமம் பாடத்தில் இயக்குநா் அவையே கூட்டுப்பங்கு நிறுமத்தை மேலாண்மை செய்கிறது. பங்குநா்கள் நிறுமத்தை மேலாண்மை செய்ய முடியாது என்பதை நினைவு படுத்துதல்.

Downloaded From www.nagaicollege.com

**பாட அறிமுகம்:**
தேர்தல் சிறப்பாக நடைபெற வேண்டுமானால் என்னென்ன நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும். அனைத்து நடவடிக்கைகளும் முறைப்படி நடந்தால் தான் தேர்தல் சுமூகமாக நடைபெறும் என்பதை மாணவர்களுக்கு விளக்கி நிறும மேலாண்மைப் பாடத்தை அறிமுகப்படுத்துதல்.

**கற்றல் கற்பித்தல் செயல்பாடு:**

* இயக்குநர் பொருள் வரையறை
* நிறுமத்தின் முக்கிய அதிகாரம் உள்ள நபர்கள்
* இயக்குநர் குழு
* இயக்குநர் வகைகள் ∴ எண்ணிக்கை
* இயக்குநர் நிலைகள் ∴தகுதிகள் ∴தகுதியின்மைகள்
* இயக்குநரை அகற்றுதல்
* இயக்குநரின் அதிகாரங்கள்
* இயக்குநரின் உரிமைகள் ∴கடமைகள்∴பொறுப்புகள்
* இயக்குநர் பதிவேடு நிர்வாகத்தில் முக்கிய மேலாண்மை நபர்களின் பதிவேடு (விதி 17 ன் படி)
* மேலாளர்இ இயக்குநர் வேறுபாடு
* நிர்வாக இயக்குநர்இ முழுநேர இயக்குநர் வேறுபாடு

**மாணவர் செயல்பாடு:**
பாடப்புத்தகத்தில் உள்ள உங்களுக்குத் தெரியுமா? பகுதியினை வாசிக்கச் சொல்லி அதிலிருந்து கலந்துரையாடுதல்

**வலுவூட்டல்:**
புதிய மற்றும் கடினமான பகுதிகளை சம்மந்தமான வீடியோக்களை போட்டுக் காட்டி விளக்கிக் கூறுதல்

**மதிப்பீடு:**
**எளிய சிந்தனை வினாக்கள்:**

1. இயக்குநர்கள் நிறுமத்தின் பணத்திற்கு ________ ஆகிறார்கள்
2. நிறுமச் சட்டத்தை இயக்குநர்கள் _______ மூலம் நியமிக்கப்பட வேண்டும்

**நடுத்தர சிந்தனை வினாக்கள்:**

1. மேலாண்மை இயக்குநர் என்று யாரை அழைக்கிறோம்?
2. முழுநேர இயக்குநர் என்பவர் யார்?

**உயர் சிந்தனை வினாக்கள்:**

1. நிர்வாகத்தில் முக்கிய நிர்வாக அதிகாரிகள் என்பவர் யார்?
2. இயக்குநர்களின் தகுதிகள் பற்றி கூறுக:-

**குறைதீர் கற்றல்:**
பாடத்தை புரிந்து கொள்ளாத மாணவர்களை அடையாளம் கண்டு அவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் மிக எளிமையான முறையில் எடுத்துக்கூறி புரிய வைத்தல்

**செயல்பாடு:**
மாணவர்கள் மாணவிகளை இரு குழுக்களாகப் பிரித்து மாணவர்களை நிர்வாகத்தின் முக்கிய நபர்கள் பற்றியும் மாணவிகளை இயக்குநர்களின் தகுதிகள் பற்றியும் உரையாட வைத்தல்

**தொடர்பணி:**
இயக்குநர்கள் பற்றி மாணவர்களுக்கு தெரிந்த விவரங்களை சேகரித்து வரச்சொல்லுதல்

www.Padasalai.Net
Downloaded From www.nagaicollege.com

Prepared by: G.LALITHA
GHSS- THANIAMANGALAM
Melur Madurai (Dist)
Ph. No: 89035 92497

வகுப்பு : **XII**

பாடம் : வணிகவியல்

தலைப்பு : 28 - நிறுமச்செயலர்

தேதி : **டிசம்பர் 2 வது வாரம்**

கற்றல் நோக்கம்:

- ✓ நிறுமச் செயலர் பொருள் மற்றும் வரைவிலக்கணம்
- ✓ செயலர் பணி அமர்த்துதல் மற்றும் பதவிநீக்கம்
- ✓ நிறுமச் செயலரின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள்
- ✓ நிறும கூட்டங்கள் – பொருள் மற்றும் வகைகள்
- ✓ தீர்மானம் – பொருள் மற்றும் வகைகள்
- ✓ வாக்களிப்பு – பொருள் மற்றும் முறைகள் ஆகியவற்றை புரிந்துக்கொள்ள இயலும்

**கற்றல் விளைவு:**

கோவிலைக் கட்டியது ராஜாவாக இருந்தாலும் ஐயர் இல்லாமல் பூஜை நடைபெறாது என்பதை புரிந்து கொண்டனர்.பள்ளியைத் திறம்படச் செயல்படுத்த தலைமை ஆசிரியருக்கு சட்டபூர்வ தகுதிககளும் பிற தகுதிகள் தேவை என்பதையும் தெரிந்து கொண்டனர்.குழந்தைகள் சீட்டு குழுக்கி விளையாடுவது கூட ஒரு விதமான வாக்கெடுப்பு எனபதைக் கற்றுக் கொண்டனர்.ஒருவருக்கு பதிலாக வரும் மற்றொரு நபர் பகராள் என்பதை தெரிந்து கொண்டனர்.

கற்றல் கற்பித்தல் உபகர்ணங்கள்:

PPT,Videos,News papper cutting related prospectus, chart related to the lesson ,hi-tech lab online test link

**முன்னறிவு:**

நிறுமத்தின் நிருவாக குழு எது? இயக்குனர் அவை.

மேலாண்மை இயக்குனர் என்பவர் யார்? C.E.O

இயக்குனரை நீக்கும் அதிகாரம் யாருக்கு உள்ளது? நிறுமச்சட்ட வாரியம்,மத்திய அரசு, பங்குதாரர்கள்.

இயக்குனர் பங்குதாரர்களின் முகவராகவும் ஆகவும் பொறுபாளர் ஆகவும் செயல்படுகின்றன.

இயக்குனர்களின் உரிமைகள் எத்தனை? 2.

**கற்றல் கற்பித்தல் செயல்பாடு:**

ஆசிரியர் செயல்பாடு:

பாட அறிமுகம்:

நிறுமத்தின் ஒட்டு மொத்த செயல்பாடுகளையும் இயக்கும் நபரே நிறுமச் செயலர்.

நிறுமச்செயலரின் தகுதிகள்:

நிறும சட்டபூர்வ தகுதிகள் :

Downloaded From www.nagaicollege.com

பட்டய கணக்காளர் நிறுவனத்தின் உறுபினர்.(அல்லது).இந்தியா அடக்கவிலை மற்றும் பணியாளர் கணக்கர் (காஸ்ட் மற்றும் வொர்க்ஸ் அக்கவுண்ட்டன்) நிறுமத்தின் உறுபினராக இருக்க வேண்டும்.[OR] வணிகவியல் அல்லது மேலாண்மைத்துறையில் ஒரு முதுகலைப் பட்டய படிப்பு அல்லது டிப்ளமோ தகுதி பெற்று இருக்கவேண்டும்.

- நிறுமச் சட்டம் பற்றிய அறிவு
- வணிகச்சட்டம் பற்றிய அறிவு
- பொருளாதாரச் சட்டம் பற்றிய அறிவு
- கணக்குவைப்பு தொடர்பான அறிவு
- பணியாளர் சட்டம் பற்றிய அறிவு

அலுவகை நிர்வகம் குறித்த அறிவு

**கூட்டம்:**

ஒரு நிறுமத்ததின் கூட்டம் என்பது பல வகையான சட்டவிதி கூறுகலுக்கு உட்பட்டு முறையான வகையில் ஒருங்கிணைக்கப்படும் நபர்களின் குழுவை கூட்டம் எனலாம்.

**கூட்டம் மூன்று வகைப்படும்:அவை:**

1. பங்குநர்கள் கூட்டம்
- சட்டமுறைக் கூட்டம்
- ஆண்டுப் பொதுக் கூட்டம்
- சிறப்புக் கூட்டம்

2. இயக்குநரவை கூட்டங்கள்
- அவைக் கூட்டம்
- குழுக் கூட்டம்

1. சிரப்பு கூட்டங்கள்
- வகுப்புக் கூட்டம்
- கடனீந்தோர்கள் {அ} கடனீட்டுப்பத்திரதார்கள் கூட்டம்

**தீர்மானம்:**

நிறுமச்சட்டம் 2013ன் படி பங்குநர்களால் அளிக்கப்படும் ஒப்புதலை தீர்மானம் என்கிறோம்.

பொதுவாக தீர்மானங்கள் மூன்று வகைப்படும்

1. சாதாரண தீர்மானம்
2. சிறப்புத் தீர்மானம்
3. சிறப்பு அறிவிப்பு தீர்மானம்.

**வாக்கெடுப்பு:**

ஒருவர் தனது விருப்பத்தை உரிய முறையைப் பதிவு செய்வது

இரண்டு வகைப்படும்:

Downloaded From www.nagaicollege.com

திறந்த நடைமுறை

இரகசிய நடைமுறை

திறந்த நடைமுறை:

சத்தத்தின் வாயிலாக வாகெடுப்பு{By Acclamation}

குரல் வாக்கெடுப்பு.{By voice}

கைகளை உயர்த்துவதன் மூலம் வாகெடுப்பு.{By show of hands}

இரகசிய நடைமுறை:

வாக்கு சீட்டு முறை.(Secret procedure)

அஞ்சல் முறை.(By ballot)

எந்திர வாக்குப்பதிவு.(Machanical)

**மாணவர்கள் செயல்பாடு:**

மாணவர்கள் பாடப்புத்தகத்தை படிக்கச் சொல்லி புதிய வார்த்தைகளை அடிகோடிட்டு சொல்லுதல் கலைசொற்களை படிக்க சொல்லுதல்.

**வலுவுட்டடல்:**

பங்கு முதல் இல்லாத பொது மற்றும் தனி நிறுமங்கள் எந்தக் கூட்டத்தை கூட்ட தேவையில்லை? விடை:சட்டமுறை கூட்டம் .தணிக்கை குழு கூட்டத்தை கூட்ட வேண்டிய நிறுமம் எது? விடை:ரூ10 கோடி அல்லது அதற்கு மேல் பட்டியலிடப்பட்ட நிறுமம்ஒரு நிறுமத்தின் அமைசராக இருபவர் யார்?

விடை: நிறுமச்செயலர்

**மதிப்பீடு:**

**1. எளிய சிந்தனை வினாக்கள்**

நிறுமத்திற்கும் செயலர்கும் உள்ள உறவு ---------

நிறுமச்செயலரை சாதாரண பணியாலராக கருதமுடியுமா?

**2. நடுத்தர சிந்தனை வினாக்கள்**

வாகெடுப்பு நடைமுறை எத்தனை?

வகுப்பு கூட்டம் என்றால் என்ன?

**3. உயர் சிந்தனை வினாக்கள்**

நிறுமச்செயலரை பணிநீக்கம் செய்வதற்கான காரணங்கள்?

**குறைதீர் கற்றல்:**

கருத்துகளை புரிவதில் சிரமம் உள்ள மாணவர்களை அடையாளம் கண்டு எளிதில் புரியும் வண்ணம் மற்றும் தேர்வில் விடைகளை தெளிவாக எப்படி எழுத வேண்டும் என்பதை தனிப்பட்ட முறையில் பொதுவாக எடுத்துறைத்தல்.

Downloaded From www.nagaicollege.com

**மாணவர் செயல்பாடு:**

குழுவாக அமைத்து ஒரு மதிப்பெண் வினா இரண்டு மதிப்பெண் மதிப்பெண் வினாக்களை வினாடி வினாவாக நடத்துதல் Hi-tech labல் online test நடத்தி வேகமாக செய்து முழு மதிப்பெண் பெறுபவர்களுக்கு பரிசு வழங்குதல்.

**தொடர்பணி:**

மாணவர்களை அருகில் உள்ள வங்கிக்கு அளைத்து சென்று கிளை மேலாலரின் செயல்பாடுகளை பார்வை இடச் செய்தல்.

www.Padasalai.Net

Downloaded From www.nagaicollege.com